# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-15
Issue-7

ஜூலை-2022 (துல்ஹஜ்-1443)

விலை ரூ. 40 /-



## இந்திய நீதித்துறையை நம்பலாமா..?

- சரிதா பாண்டே

## கொலைகளை அதிகமாகச் செய்த கொள்கை?

## டீஸ்டா கைது...

சிறையில் நீதி...

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

(5:08)


| | |
|---|---|
| நீதித்துறையை நம்பலாமா..? | - 4 |
| கொலைகளை அதிகமாகச் செய்த கொள்கை? | - 11 |
| கோவை மறந்த விடுதலைப் போர் 222 ஆண்டுகளுக்கு முன் நடந்தது வரலாறு மீட்பு மாநாடு | - 27 |
| கருத்தியலில் சாதித்த சம்பவங்கள் | - 32 |
| இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) | - 33 |
| பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - 37 |
| மோடியின் எட்டாண்டு ஆட்சியில் தலைகுனிவே ஏற்பட்டதில்லையா..? | - 42 |
| டீஸ்டா கைது ... சிறையில் நீதி | - 47 |
| இந்தியாவிற்கு அறிவுச் செழுமையளித்த ஆளுமைகள்! | - 53 |
| திருப்பூரில் ஈத்மிலன் சந்திப்பு நிகழ்ச்சி | - 56 |
| பெர்ணான்டஸ்க்கு நூல் | - 57 |
| உங்கள் இல்லம் தேடி இஸ்லாம் | - 60 |
| மருத்துவம் | - 62 |
| தலையங்கம் | - 64 |



# வைகறை வெளிச்சம்

ஜூலை-2022 துல்ஹஜ்-1443

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.40/-
ஆண்டுச் சந்தா
உள் நாடு: ரூ.480/-
வெளி நாடு: ரூ.5000/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in



# நீதித்துறையை நம்பலாமா..?

## உச்ச நீதிமன்றத்தின் வீழ்ச்சியும் தாழ்ச்சியும் தொடர்

### நமது தலைமை நீதிபதி

# N.V. ரமணா

### அவர்களிடம்

# அமெரிக்காவில் வைத்து நேரடியாகத் தரப்பட்ட கடிதம்...

நமது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரமணா அமெரிக்கா சுற்றுப் பயணத்தில் இருந்து கொண்டிருந்தார். அவரை அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன்-இல் வைத்து சந்தித்த இந்திய சகோதரி சரிதா பாண்டே ஓர் கடிதத்தை கொடுத்திருக்கின்றார்.

இந்தக் கடிதத்திற்கு திறந்த கடிதம் "An Open Letter" அதாவது எல்லோரும் ஒரே நேரத்தில் தெரிந்திட வேண்டிய கடிதம் எனப் பெயர் வைத்திருக்கின்றார்.

கடிதத்தைப் பெற்றுக் கொண்ட தலைமை நீதிபதி அவர்கள் கடிதத்தைத் தான் கண்டிப் பாகப் படிப்பேன் என்ற வாக்குறுதியை வழங்கி இருக்கின்றார்.

அதனை அப்படியே இங்கே தருகின்றோம்...

அன்புள்ள தலைமை நீதிபதி N.V. ரமணா அவர்களோ அமெரிக்காவிற்கு அகமகிழ்வோடு உங்களை வரவேற்கின்றேன். இஃதோர் சுதந்திர நாடு. நாங்கள், உங்களை இந்த அரங்கத்திற்குள் உரையாற்றிட அழைத்திடும் போது, பெண்களும், ஆண்களும், வெள்ளை மாளிகைக்கு வெளியே அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்திற்கு எதிராக தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னும் பலர் அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்திற்கு முன் போராடிக் கொண்டி ருக்கின்றார்கள். இன்னும் பலர் அமெரிக் காவின் இதரப் பொது வெளிகளில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் இங்குள்ள உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்புக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேநேரத்தில் "Seattle" சியாட்டில் என்ற இடத்தில் இந்திய அமெரிக்கர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் கடந்த வாரத்தில் இந்திய அமெரிக்கர்கள் ஹட்சன் என்ற இடத்திலும், டல்லாஸ் என்ற இடத்திலும், சேன் பிரான்சிஸ் கோ என்ற இடத்திலும் இன்னும் பல இடங்களிலும் போராடினார்கள். இவர்களெல்லாம் ஏன் வீதிக்கு வந்துப் போராடு கின்றார்கள் என்றால் தங்கள் நாடாகிய இந்தியாவில் வளரும் இஸ்லாமிய வெறுப்பிற்கு எதிராகத்தான்.

நீங்கள் இதுபோன்ற போராட்டங்களுக்கு அந்நியமானவர்கள் அல்ல. நீங்களும் நானும், அன்றாடம் போராட்டங்கள், உள்ளிருப்புகள் சாகும்வரை உண்ணாவிரதம் என்பவை நித்தமும் நடக்கும், மகாத்மா காந்தி பிறந்த, ஒரு நாட்டி லிருந்து வருகின்றோம்.

ஆனால், அமெரிக்காவிலும் இந்தியாவிலும் நடக்கும் போராட்டங்களுக்கு இடையே பல வேறுபாடுகள் உண்டு. இந்த இரு நாடுகளில் மக்கள் தங்களுக்குச் 'சரி' எனப் பட்டதைப் பேசுவதில் அரசிடமிருந்து எதிர்கொள்ள

வேண்டிய எதிர்ப்பில் பெரும் வேறுபாடு உண்டு.

அமெரிக்காவின் பல்வேறு வீதிகளிலும் போராடுபவர்களின் வீடுகள் இடிக்கப் படமாட்டாது. அவர்கள் சிறையில் அடைக்கப்பட மாட்டார்கள். அவர்கள் நிச்சயமாக அரசின் கைக்கூலி கும்பலால் கொலைச் செய்யப்பட மாட்டார்கள்.



இன்றைக்கு நீங்களும், நாங்களும் இந்தியாவுக்கு வெளியே இருக்கின்றோம். நீங்கள் இன்று இந்தியாவின் தலைமை நீதிபதி என்ற இடத்தில் அமர்ந்திட வில்லை. மாறாக, சுற்றுப் பயணத்தில் இருக்கின்றீர்கள். அங்கு அமர்ந்த காலங் களில் 138 கோடி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திட இயலவில்லை. இங்கே அமெரிக்கா வில் இந்த வாய்ப்பை பயன்படுத்தி நான் உங்களிடம் மனந்திறந்து சில கேள்விகளை முன் வைக்கின்றேன்.

இப்படி மனந்திறந்து கேள்விகளை முன் வைத்திடும் நெஞ்சுரம், எனக்கு எப்போது வந்தது என்றால், நீங்கள் "ஃபிலாடெல்பியா" ஆற்றிய உரையைக் கேட்டபோதுதான், அங்கே நீங்கள் "உலகின் பல்வேறு நாடுகளிலும் குடிமக்களாக வாழ்ந்திடும் நமக்கு, ஓர் கடமை இருக்கின்றது. அது ஓயாமல் மக்களின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும், காத்திடவும், அதில் மேலும் முன்னேற்றங்களைக் கண்டிடவும் உழைத்திட வேண்டும். இந்தச் சுதந்திரத்தையும் விடுதலை யையும் நமது முன்னோர்கள் அரும்பாடுபட்டுப் பெற்றுத் தந்தார்கள் என்று கூறினீர்கள்.

'டீஸ்டா செட்டல்வாட்' என்ற நங்கை நல்லாள் கைது செய்யப்பட்ட ஒளிப்பதிவுகள் என் மனத்தில் அப்படியே இருந்து கொண்டி ருக்கின்றன. அவரைக் கைது செய்திட உரிய நீதிமன்ற ஆணைகூட இல்லை என்பதே இது வரைக் கிடைக்கும் தகவல். அவரை அவருடைய வழக்கறிஞரோடு பேசுவதற்கும் அனுமதிக்க வில்லை. (அவரை அடித்துமிருக்கின்றார்கள்.

எந்த டீஸ்டாவை இப்படி நடத்துகின்றார்கள்? இந்த டீஸ்டா தன்னுடைய இளமையையும் முதுமையையும், நீதிக்காகப் போராடுவதில் செலவிட்டு வருபவர். 2002 குஜராத் இனப்படு கொலையின் போது நெருப்பிட்டுக் கொழுத்தப் பட்டவர்களுக்குகாகவும், தன் மானத்தை இழந்த தால் உணர்வுப் பூர்வமாக இடிந்து மடிந்தவர் களுக்காகவும், நீதி கிடைக்கப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

இந்த நீதிக்கான பெரும் போரை அவர் எப்போதே கைவிட்டிருக்கலாம். மற்றவர்களைப் போல் தன்னுடைய முகத்தை வேறுபக்கம் திருப்பி இருக்கலாம். ஆனால், அவர் அப்படி இருப்பதை விரும்பிடவில்லை. வகுப்புவாதத்தை ஒழிப்பது என்பதிலும் கொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அதனால் அவர் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார், அச்சுறுத்தப்பட்டார். ஆனால், அவர் நிற்காமல், நிறுத்தாமல் தொடர்ந்து போராடிக் கொண்டே இருந்தார். ஏனெனில் அவர் தன்மானமும் தன் நம்பிக்கையுமுள்ள ஓர் பெண்மணி வீராங்கனை.

டீஸ்டாவின் கைதைத் தொடர்ந்து ஓர் முன்னாள் காவல்துறை அதிகாரி R.B.சீரீகுமார் அவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சஞ்சீவ் பாட் அவர்கள், தான் கண்கொண்டு கூட காணாத ஒருவரைக் கொலை செய்ததாக ஆயுள் தண்டனை கைதியாக சிறையிலிருக்கின்றார். அவரைக் குற்றம் சுமத்தி ஜோடிக்கப்பட்ட வழக்கில், அவருக்கு எதிராக நிறுத்தப்பட்ட சாட்சியங்களை விசாரிக்க, குறுக்கு விசாரணை செய்ய அவர் அனுமதிக்கப்படவில்லை. அதே போல், அவர் தரப்பு சாட்சியங்களை நீதிமன் றத்தில் நிறுத்தவும் அனுமதிக்கப்படவில்லை. இறுதியாக அவர் சொல்லிட வேண்டியதைக்கூட

சொல்லிட விடவில்லை.

2002 குஜராத் இனப்படுகொலைகளைச் செய்தவர்கள், இப்போது மிகவும் ஆசுவாசமாக இருப்பார்கள். காரணம், பெரும்பாலான கண்ணால் கண்ட சாட்சியங்கள் இறந்துவிட்டார்கள். பலர் காணாமலாக்கப்பட்டுவிட்டார்கள். இந்நிலையில் இப்போது இந்த மூன்று பேரையும் சிறையில் வைத்துவிட்டால் குஜராத் இனப்படுகொலை நிகழ்வுகளுக்கு சாட்சியங்களே இல்லை என்றாகிவிடும்.

இந்தியாவின் நீதி நிர்வாகம் அதிகாரத்தில் இருப்பவர்களை எப்போதும் மகிழ்ச்சியிலேயே வைத்திட வேண்டும் என எண்ணுகின்றனவே ஏன்?

நீங்கள், ஐக்கியாஜாஃபரி அவர்களை அறிந்திட வேண்டும். அவர் 20 ஆண்டுகளாக, தன் கணவரையும், தன் கணவரோடு 2002-ல் கொலை செய்யப்பட்ட 69 பேருக்காகவும் நீதிக்காகப் போராடி வாதாடி வருகின்றார். அவருடைய வழக்கை இரண்டொரு நாளுக்கு முன் தள்ளுபடி செய்தார்கள். அந்தத் தள்ளுபடி நமது ஆட்சியாளர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

உங்கள் உச்ச நீதிமன்றம் ஐக்கியா ஜாஃபரிக்கு எதிராக வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் தான் கண் மூடித்தனமாக டீஸ்டா செட்டல்வாட் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் நாட்டின் உச்ச பட்ச நீதிமன்றம். ஐக்கிய ஜாஃபரிக்கு உதவி செய்தவர்களையெல்லாம் விசாரணைக்கு உள்படுத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் நடத்தைகளால் விரக்தி வயப்பட்ட, ஐக்கிய ஜாஃபரியின் மகன், தாங்கள் அல்லாஹ்வை நம்புவதாகவும், அவன் தங்களுக்கு நீதி வழங்கிடுவான் என்றும் கூறியுள்ளார். அவர்கள் ஏற்கெனவே 20 ஆண்டுகளாக காத்திருந்து விட்டார்கள்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகிய நீங்கள் கூறினீர்கள். இன்றைய காலம் உடனடியாகத் தயாரிக்கப்படும், நூடுல்களின் காலம். அதனால் மக்கள் உடனடியாகத் நீதியை எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் ஐக்கியா ஜஃபரி உடனடியாகத் தயாரிக்கப்படும் நூடுல்களை எதிர்பார்க்கவில்லை.

நீதிக்கான அவர்களின் பயணம், சித்திரவதைகள் நிறைந்த ஒன்று. ஆபத்துக்களும், அவமானங்களும் நிறைந்தது. கற்களும், முற்களும் காட்டாறுகளும் நிறைந்த அவர்களின் இந்தப் பயணம் 20 ஆண்டுகளாக, செத்து செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் பயணம்.

தனிப்பட்ட முறையில் நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன் அல்ல. அதனால் இறைவன் வந்து நீதி வழங்குவான் என்பதை நான் நம்பிடவில்லை. நீங்கள் ஐக்கிய ஜாஃபரியாவுக்கு நீதி கிடைத்து விட்டது என நம்புகின்றீர்களா?

ஒவ்வொரு வாரமும் இந்தியா அரசே அவிழ்த்துவிடும் ஒரு புதிய கலவரத்தின் அரங்கமாகத் திகழுகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னால் அஃப்ரீன் ஃபாத்திமா என்ற பெண்மணியின் தாயாரின் வீடு புல்டோசர்களால் தகர்க்கப்பட்டது. இஃது பட்டப்பகலில் நடந்தது. ஒரு போலியான பின் தேதியிட்ட ஆணை ஒன்று அதற்குப் பயன்படுத்தப்பட்டது. அந்த ஆணை அவருடைய தந்தையில் பெயரில் இருந்தது. ஆனால் எதைப் பற்றியும், யாரும் கவலைப்பட வில்லை.



(வீட்டை இடித்துவிட்டுத் தான் ஆணைகளைத் தயார் படுத்துகின்றார்கள். அந்தக் குளறுபடியான ஏற்பாட்டையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்கின்றது.)

முஸ்லிம்களுக்குச் சொந்தமான பலநூறு வீடுகளும், வியாபார நிறுவனங்களும், இந்தியா வின் மிகப்பெரிய மாநிலமான உத்திரப் பிரதே சத்தில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. பல முஸ்லிம்கள், போராடினார்கள் என்பதற்காகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். பலரு டைய தலையை நோக்கி நேரடியாக இரண்டு முறை நாலுமுறை சுட்டார்கள், கொன்றார்கள்.

குடும்பங்கள் சிதைக்கப்பட்டு சின்னா பின்னாமாக்கப்பட்டன. இன்னும் வாய் திறந்து பேசாத குழந்தைகள் எல்லாம் கடுமையான வறுமைக்கும், வாட்டத்திற்கும் வதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்கள் மீது திணிக்கப்பட் டுள்ள இந்த வறுமையிலிருந்து அவர்கள் தப்பிக்கவே இயலாத நிலையை ஏற்படுத்தி இருக்கின்றார்கள் உத்திரப் பிரதேசத்தில்.

சிலர் டிவிட்டரில் பதிவுகள் போட்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். உலக ஊடகங் களில் பல கட்டுரைகள் வெளியாயின. இவற்றை யெல்லாம் உச்ச நீதிமன்றம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டே நின்றது.

**நீங்கள் (உச்ச நீதிமன்றம்) காத்த மௌனம் சம்மதமில்லையா? அநியாயங்களைத் தொடருங்கள் எனக் கொடுத்த அனுமதி இல்லயைா?**

நம் நாட்டில் (இந்தியாவில்) சில தொலைக் காட்சிகள் இவை தங்களைப் (Mainstream) பொதுவான தொலைக் காட்சிகள் எனக்காட்டிக் கொள்கின்றன. இவை முக்கியமான வழக்குகளில் தொலைக்காட்சி விசாரணையை நடத்தி கடுமை யான தண்டனைகளையும், பிரகடனப்படுத்து கின்றன. இவை இப்படி விசாரணை நடத்திடும் வழக்குகளில் பல நீதிமன்றங்களுக்கு வருவதற்கு முன்னாலேயே பொதுமத்தியில் குற்றவாளிகள், யார் எனக் காட்டப்பட்டு விடுகின்றன. இவை யெல்லாம் உங்கள் கவனத்திலிருந்து தப்பித் திருக்க வாய்ப்பில்லை.

**மீடியாக்கள் - ஊடகங்கள்**

அரசாங்கம் அள்ளிக் கொட்டும் பிச்சைக் காசுகளுக்கு நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டி ருக்கும் ஊடகங்கள் யார் பேசிட வேண்டும், அவர்கள் எவ்வளவு பேசிட வேண்டும் என்பதை



முடிவு செய்கின்றன. அவர்களின் விவாதமே அனைத்துமே, வெறுப்பை வளர்ப்பவை.

இந்தியாவின் தலைமை நீதிபதியாகிய உங்களுடைய ஊழியர் டெல்லி உயர் நீதிமன் றத்தின் நீதிபதி ஓர் அதிசயமான கிரிமினல் சட்டத்தை திருவாய் மலர்ந்தருளினார். அது, “நீங்கள் (வெறுப்புப் பேச்சை) உங்கள் உதடுகளில் புன் சிரிப்போடு சொன்னால், அதில் எந்தக் குற்றமுமில்லை” - இந்தியாவின் இந்த புதிய கிரிமினல் சட்டம் உங்களுக்கு உடன்பாடானதா? அப்பாவி மக்கள் வீடுகள் இடிக்கப்படும்போது, ஒய்யாரமாக வீற்றிருந்த நீதிபதி புதிய கிரிமினல் சட்டங்களுக்குத் தூபம் போட்டுக் கொண்டிருக் கின்றார்.

வீடுகளை புல்டோசர்களை வைத்து இடித்துக் கொண்டிருக்கும்போது, அதில் எஞ்சியவற்றை எடுத்துச் செல்லலாம் என ஓடிவந்தவர்களை காவல்துறையை ஏவி, கண்மூடித்தனமாகத் தாக்கினீர்கள். வீடுகளை இடிக்கும் JCB-களை - புல்டோசர்களின் தேவை அதிரிகத்து விட்டது. இதனால் புல்டோசர்களை உற்பத்தி செய்யும் ஆலைகளை தொடங்குவீர்களா என பிரிட்டனின் பிரதமர், போரிஸ் ஜான்சன் அவர்களிடம் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் டிவிட்டரில் கேட்டுள்ளார்.

**இனப்படுகொலை**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இனப்படு கொலை கண்காணிப்பு (Genocide Watch) என்ற அமைப்பு இந்திய முஸ்லிம்களை ஓர் இனப்படு கொலையின் வழி கூட்டாகக் கொலை செய்ய இருக்கின்றார்கள் என்றொரு எச்சரிக்கையை அனுப்பி இருக்கின்றார்கள்.

உலகமே அங்கீகரித்த Genocide Prevention Organization கூட்டுப் படுகொலைகள் தடுப்பு அமைப்பை டாக்டர் கிரிகோரி ஸ்டேன்டன் என்பவர் தலைமையேற்று நடத்தி இருக்கின்றார். இவர்தான் ருவாண்டாவில் கூட்டுப் படுகொலைகள் நடக்கப்போகின்றன என்பதைக் கணித்து அறிவித்தவர். அவர் இதற்கு முன்னர் இரண்டு முறை இந்தியாவில் முஸ்லிம்களை இனப்படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட இருக்கின்றார்கள் என எச்சரித்திருக்கின்றார்.

**அப்பாவிகள் சிறையில்**

நர்கீஸ் செய்ஃபீ மூன்று குழந்தைகளின் தாயார். அவருடைய கணவர் ஹாலித் செய்ஃப் ஒரு சமூக ஆர்வலர். அவருடைய வியாபாரத்தை அழித்து அவரை சிறைபிடித்திருக்கின்றார்கள். காரணம் ஏதும் குறிப்பாகக் குறிப்பிடவில்லை. அவருடைய குடும்பம், குழந்தைகள் அவரைப் பார்க்க அனுமதிப்படவில்லை. அந்தக் குடும்பம் உணவுமில்லாமல், உறக்கமுமில்லாமல் தட்டலைந்து கொண்டிருக்கின்றது. அந்தக் குடும்பத்திற்கும், குறிப்பாக அந்தக் குழந்தைகளுக்கும் என்றைக்கேனும் நீதி கிடைக்குமா?

**உமர் ஹாலித்**

உமர் ஹாலித் என்ற சமூக ஆர்வலரை அறிவீர்களா? அவரை ஓர் போலி வீடியோ ஆவணத்தின் மூலம் கைது செய்துள்ளார்கள். இரண்டாண்டுகளாகச் சிறையில் இருக்கின்றார். அவருக்கு எப்போதாவது நீதி கிடைக்குமா? குறைந்தபட்சம் அவரை பிணையிலாவது விடுவியுங்கள்.

**சுதந்திரமாகச் சிந்தித்ததற்காகச் சிறை பிடிக்கப்பட்ட சிந்தனையாளர்கள்**

உங்களுக்குத் நன்றாகத் தெரியும், நாம் இங்கே ஓய்வு நேரங்களில், சுதந்திரம், விடுதலை, ஜனநாயகம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கும்போது கவ்தம் நவ்ராலாகா, ரோனா வில்சன் வரவர ராவ், ஆனந்த் டெல்டும்லே, ஜி.என். சாய்பாபா, சுதீர்தாவே, சோமா சென், ஹனிபாபு இப்படி இன்னும் பலர் சிறையிலிருக்கின்றார்கள், அவர்களைப் பற்றி பேசுகின்றோம். காரணம் அவர்கள் தங்கள் மனசாட்சிப்படி சிந்தித்தவர்கள். அதன்படி கருத்துக்களை எழுதவும் பேசவும் செய்தவர்கள். இவர்களை உலக அளவில் சுதந்திரமாகச் சிந்தித்ததற்காகச் சிறைப்பட்டவர்கள் Prisoners of Conscience என அழைக்கின்றார்கள். இவர்களெல்லாம் எப்படி சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்? நவீன உத்திகளைப் பயன்படுத்தி, அவர்களின் கம்ப்யூட்டர்களில் திணிக்கப்பட்ட அத்தாட்சிகளின் அடிப்படையில்தான்.

நாம் நீதியைப் பற்றி உரக்க முழங்கிக் கொண்டிருக்கும்போதுதான், ஸ்டேன் சாமி என்ற கிருஸ்தவ பாதிரியார், தனக்கு உதறுவாதமிருக்கின்றது, ஆகவே ஆகாரம் அருந்த ஒரு "ஸ்டிரா" வேண்டும் எனக் கேட்பார். அதற்கு கூட அனுமதி வழங்கவில்லை. அவர் கடந்த ஜூலை மாதம் சிறையிலேயே மாண்டார். உலகமே வெட்கி தன் தலையை தாழ்த்திக் கொண்டது. ஏனெனில் நீதியின் கண்ணியத்தை நீதித் துறையின் கண்ணியத்தை நம்மால் காப்பாற்றிட இயலவில்லை.

நான் வளர்ந்து கொண்டிருந்த நாள்களில் சர்வாதிகார நாடுகளான சீனாவும், ரஷ்யாவுந்தான் மனசாட்சிப்படி சிந்தித்தவர்களை சிறையில் தள்ளினார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அப்போதெல்லாம் நாம், அங்கு பிறக்கவில்லை. நல்ல காலம் இந்தியாவில் பிறந்தோம் என மகிழ்ச்சியடைந்தேன். (இப்போது இந்தியாவில் ஏன் பிறந்தோம் என்றாகிவிட்டது) கருத்துச் சுதந்திரம் என்பது கருத்து மாறுபடுபவதற்கும் உள்ள சுதந்திரமும் சேர்ந்ததுதானே? அதிகார வர்க்கத்தைத் தட்டிக் கேட்கவும், அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் நிறுவனங்களை கேள்வி கேட்பதும்தானே? சிந்தித்ததற்காகச் சிறைபிடிக்கப்பட்ட இந்தியர்களை நாம் பட்டியலிட்டால், அது பல பக்கங்களைப் பிடிக்கும்.

இப்போது, அமெரிக்காவில் இயங்கிவிரும் சர்வதேச மதச் சுதந்திரத்திற்கான ஆணையம் (USCIRF) United States Commission on International Religious Freedom, 44 இந்தியர்களை, சுதந்திரமாகச் சிந்தித்ததற்காக சிறைபிடிக்கப்பட்டவர்கள் என அறிவித்துள்ளது.

இப்போது, சிந்தித்ததற்காகச் சிறைபிடிக்கப்பட்டு சிறையில் வாடுபவர்கள், ஸ்டேன் சாமியைப் போல பிணமாகத்தான் ஆக வேண்டுமா? நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? நீங்கள் இந்தத் தவறைச் சரி செய்வீர்களா?




**பத்திரிகையாளர் - தலைமை நீதிபதி**

நீங்கள் உங்கள் வாழ்க்கையை பத்திரிகை யாளர் என்ற அடிப்படையிலேயே தொடங்கி னீர்கள். அந்த வகையில் ஒரு தகவல் உங்களிடம் கவலையை ஏற்படுத்தி இருக்க வேண்டும். உலக சுதந்திர அட்டவணையில் அதாவது உலகில் மனிதர்கள் சுதந்திரமாக வாழும் நாடுகளின் அட்டவணையில் 170 நாடுகளில் இந்தியா 150 இடத்தில் இருக்கின்றது. இந்த ஆய்வை Reporters without Borders (RSF) என்ற அமைப்பு நடத்தி இருந்தது. இதைப்பற்றி நீங்கள் கவலைப் பட்டதுண்டா?

**பத்திரிகையாளர்களின் நிலை! கொலை!!**

நம் நாட்டில் 2014-க்குப் பின் 22 பத்திரி கையாளர்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 7 பேர் 2021-இல் சிறைப் பிடிக்கப் பட்டுள்ளார்கள். எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திடும் அளவில் 2014-க்குப் பின் 22 பத்திரி கையாளர்கள், இந்தியாவில் கொலை செய்யப் பட்டிருக்கின்றார்கள். கொலை செய்யப்பட்ட இந்தப் பத்தரிகையாளர்கள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிரசித்திப் பெற்ற ஊடகங் களைச் சார்ந்த பத்திரிகையாளர்கள் அல்ல. இந்தப் பத்ரிகையாளர்கள், நிருபர்கள் இவர்கள் தங்களது வாழ்வின் அன்றாட தேவைகளைக்கூட நிறைவு செய்திட இயலாதவர்கள். இன்னும் பலர் நிரந்தரமாகச்சிறையிலடைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆசிஃப் சுல்தான், குல்ஃபிஷ் பாத்திமா, ஃபஹத்ஷா சித்தீக் கப்பன், சஜாத்குல், ஷர்ஜில் இமாம், இன்னும் பலர் அநியாயங்களை கண்டு பிடித்து எழுதினார்கள் என்பதற்காகவே சிறை பிடிக்கப்பட்டார்கள். குறிப்பாக இவர்கள் கண்டு பிடித்த உண்மைகள் அதிகார வர்க்கத்திற்கு எதிராக இருந்தது என்பதனால் சிறைபிடிக்கப் பட்டார்கள்.

நீங்கள் பத்திரிகையாளர்களாக இருந்த நாள்களில், நீங்கள் பத்திரிகை துறையின் நோக்கங்களை நன்றாகவே அறிந்திருப்பீர்கள். ஒரு பத்திரிகையாளர் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமரைச் சந்திக்கும்போது அவரிடம் உங்களுக்குப் பிடித்த பழம் எது எனக் கேட்பாரா? அல்லது, 2002 பிப்ரவரி / மார்ச்சில் நடந்த இனப்படுகொலையைப் பற்றிக் கேட்பாரா?

**அமுக்கப்பட்ட / ஒடுக்கப்பட்ட மக்கள்**

இரண்டு வாரங்களுக்கு முன் கர்நாடக உயர்நீதிமன்றம், ஒரு வித்தியாசமான தீர்ப்பைக் கொடுத்தது. அதன்வழி பட்டியலின மற்றும் பழங்குடி மக்கள் ஆகியோரின் பாதுகாப்பிற்கு உருவாக்கப்பட்ட வழங்கப்பட்ட சட்டத்தை (SC/ST Prevention of Atrocities Act) ஒன்றுமில் லாமல் ஆக்கிவிட்டது. ஜாதியின் அடிப்படையில்

நடக்கும் கொடுமைகள் பொதுவெளியில் நடந்தால் மட்டுமே அவை குற்றமாகும். (என்பதே அந்தத் தீர்ப்பு)....... இதன்வழி இந்த (SC/ST Prevention of Atrocities Act) -ஐ ஒழித்துவிடுவது நமது நோக்கமா?

இந்தியாவில் வாழும் சிறுபான்மையினரின் உயிர்கள் நமக்குப் பொருட்டில்லையா? இதற்கான விடையை நீங்கள், தேடிக் கொண்டிருக்கும் போது, நீங்கள் பின்வரும் நிகழ்வுகளையும் மனதில் நிறுத்திட வேண்டும். ஓடும் ரெயிலில் வைத்துக் கொலை செய்யப்பட்ட ஜூனைத், ஆசிபா என்ற சிறுமி ஒரு கோயிலில் வைத்து கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வரலாறு. பசுவை கொன்றார் என்ற பொய்யான குற்றச் சாட்டின் கீழ், குத்தி கொலை செய்யப்பட்ட அஹ்லாக். தன் மகனின் கண்ணின் முன்னாலேயே கொலை செய்யப்பட்ட பெஹ்லுகான், தர்பேஸ் என்பவரை ஜெய் சீராம் சொல்லச் சொல்லி கொலை செய்த வரலாறு. முஹம்மத் சலீம் (55) முஹம்மத் கலீல் ஆலம் (35) ஷமீர் ஷாஹ்பூர் (19) முஷாரஃப் (35) பாப்பு (30), ஹெக்தப் (22), ஸாக்கிர் சய்ஃபீ (28) ஆக்கிப் (19) இப்படிப் பல முஸ்லிம்கள் இந்துத் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் எந்தத் தண்டனை யையும் பெற்றிடவில்லை.

**<u>கிருஸ்தவர்கள்</u>**

நீண்ட காலமாக இந்தியாவின் கிருஸ்தவர்கள் அரிசியைக் கொடுத்து மக்களை மதம் மாற்று கின்றார்கள் என்றொரு பழியைச் சுமந்தார்கள். தொடர்ந்து அவர்களைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டிருந்தார்கள்.

இப்போது மதமாற்றத் தடைச் சட்டம் செயலில் வந்துவிட்டதால், அவர்களைத் துன்புறுத்துவது சட்டப்படியானதாக ஆகிவிட்டது.

6 மாதங்களுக்கு முன்னால், கிருஸ்தவர்கள் நல்லாடை அணிந்து தேவாலயம் சென்றபோது பல இடங்களில் வைத்து இந்துத் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டார்கள்.

ஏசுநாதரின் உடைந்த சிலையை கர்கோனி லும், சாந்த கிளாஸ்-இல் சிலைகள் எரிக்கப்பட்டுக் கிடந்ததைப் பார்த்தீர்கள். பாதிரிகள் எந்த இடத்தில் வைத்து வேண்டுமானாலும் தாக்கப் படலாம். எப்போது வேண்டுமானாலும் தாக்கப் படலாம். சட்டம் அவர்களை ஒன்றும் செய்யாது. நீங்கள் கிருஸ்தவர்களுக்கு மத சுதந்திரமிருக் கின்றது என நம்புகின்றீர்களா? அல்லது கர்வாப்ஸி-ஐ நம்புகின்றீர்களா?

இந்தியா இந்து ராஷ்ட்டிராவாக ஏற்கெனவே ஆகிவிட்டதா?

பாபரி மஸ்ஜித்-இல் வழங்கப்பட்ட தீர்ப்பால் உற்சாகம் பெற்று மஸ்ஜித்களையும், தர்காவை யும், புனித இடங்களையும் இடிப்பதும் இந்து சிலைகளை வைப்பதும் பொதுவான நாட்டு நடப்பாக ஆகிவிட்டது. கியான்வாபி மஸ்ஜித் 350 வருடங்களுக்கு முன்னால் மொகலாய மன்னர் அவ்ரங்க ஜோப் அவர்களால் கட்டப்பட்டது. அது இப்போது உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் படி "சீல்" வைக்கப்பட்டுள்ளது. குதுப் மினார், தாஜ்மஹால் போன்ற உலக அதிசயங்கள், கோயில்களாக மாற்றப் படலாம்.

இந்த இன சுத்திகரிப்புகளை நீங்கள் கண் கொண்டு பார்க்கின்றீர்களா? அவற்றை நியாயப் படுத்துகின்றீர்களா?

ஹிஜாப்-ஐ தடைசெய்த கர்நாடகா உயர்நீதி மன்ற தீர்ப்பை விசாரணைக்கு எடுக்க மாட்டேன் எனக் கூறிவிட்டீர்கள். பல மாணவிகள் தங்கள் கல்வியை இழந்து நிற்கின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?

நான் மெத்த கண்ணியத்தோடு உங்களிடம் கேட்கின்றேன். நான் இந்திய நீதித்துறையை நம்பிட வேண்டுமா?

அதேபோல், நஜீப் என்ற மாணவன் எங்கே எப்படிக் காணாமற் போனான் என்று அவனுடைய தாயார் கேட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். (நீங்களும் அதேபோல் அதிர்ச்சியில்தான் இருக் கின்றீர்களா?

நீதிபதி லோயாவைக் கொன்றது யார்?

இந்தக் கேள்விகளெல்லாம் எந்தப் பயனும் அற்றவையா?

வரவர ராவும் இதே கேள்வியைத்தான் கேட்டார். எந்த விஷயத்தில், இதயமற்றவர் களோடு நாம் பேசிட இயலும்?

உங்கள் உண்மையுள்ள

**சரிதா பாண்டே,**

அக்கறையுள்ள வெளிநாட்டில் வாழும் இந்தியன்.

(ஜூன், 26,2022) வாஷிங்டன் DC.

### இந்த ஆய்வு....

இஸ்லாம் வன்முறையின் மார்க்கம் என வாதிடு வோருக்கு ஒரு சாட்டை அடி இந்த ஆய்வு. உண்மையில் இப்படி ஓர் பழியை சுமத்திக்கொண்டே, அவர்கள் மிகவும் அதிகமாகக் கொலை செய்துள்ளார்கள். இந்த ஆய்வு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எந்தெந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் அல்லது கொள்கையைப் பின்பற்றுபவர்கள் அதிகமான மனிதர்களின் உயிர்களைக் காவு கொண்டிருக்கின்றார்கள் என்பதை வரையிட்டுக் காட்டுகின்றது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் அண்மையில் வெளிவந்த ஓர் ஆய்விலிருந்து எடுக்கப்பட்டவை. அந்த ஆய்வின் பெயர் “War and Peace in Islam the uses and abuses of Jihad” - Edited and Compiled by HRH Prince GHAZIBIN MUHAMMAD - Professor HASHIM IBRAHIM KALIN, PROFESSOR MOHAMMAD KAMALI - PUBLISHED BY THE ROYAL ISLAMIC STRATEGIC STUDIES CENTRE. IAIS MALAYSIA INTERNATIONAL INSTITUTE OF ADVANCE ISLAM STUDEIS.

அதாவது, இஸ்லாத்தின் பார்வையில் போரும் யுத்தமும் – ஜிஹாத் என்ற சொல்லைப் பயன்படுத்துவதும் துஷ்பிரயோகம் செய்வதும்.

ஆய்வாளர்கள் இளவரசர் காசிபின் முஹம்மத், பேராசிரியர் இபுறாஹிம் ஹாலின், பேராசிரியர் முஹம்மத் ஹாசிம் கமாலி ஆகியோரின் ஆய்வுக் கோவை. வெளியிட்டவர்கள் இஸ்லாமிய உத்திகளின் ஆய்வு மையம். இணைந்து வெளியிட்டவர்கள் சர்வதேச இஸ்லாமிய ஆய்வுக்கான மையம், மலேசியா.

ஐரோப்பிய எழுத்தாளர்கள் மிகவும் அதிகமாக ஒரு சொல்லை தவறாகவும் மலிவாகவும், விகாரமாகவும், பிதற்றி இருக்கின்றார்கள் என்றால் அது ‘ஜிஹாத்’ என்ற சொல்லைத் தான். இது அவர்கள் வேண்டுமென்றே செய்து வருகின்ற ஓர் வன்மமான செயல்.

அதேபோல்தான் மேலை நாட்டவர்கள் ஒரு சொல்லை திரித்தும், மறித்தும் தங்கள் வாய்க்கு வந்தபடியும் பேசுகன்றார்கள் என்றால் அதுவும், ஜிஹாத் என்ற சொல்லைத்தான். இப்படி திரித்தும் மறித்தும் பேசுவது “சும்மா” நிறைய பணத்தையும் பொருளையும் சம்பாதித்திடத்தான்.

இந்த ஆய்வாளர்கள் மிகுந்த வேதனையோடு ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிடுகின்றார்கள். அதனை அப்படியே இங்கே குறிப்பிடுகின்றோம்.

MATTERS ARE MADE WORSE BY THE, FACT THAT, THE WORD HAS GAINED COMMERCIAL APPEAL IN EUROPE AND UNITED STATES

“அதாவது, இந்த விவகாரம் எந்த அளவுக்கு மோசமாகிவிட்டது என்றால், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் “ஜிஹாத்” என்ற சொல்லை பயன்படுத்து பவர்களை வியாபார வளமிக்கவர்களாக ஆக்கிவிட்டது.

# கொலைகளை அதிகமாகச் செய்த கொள்கை?



அதாவது இந்தச் சொல்லை திரித்தும் மறித்தும் பயன்படுத்துபவர்களுக்கு பணமும் பவிசும் வந்து குவிகின்றது.

தங்களுடைய எழுத்துக்கள் விரைந்து விற்பனை யாக வேண்டும் என எண்ணிடும் எழுத்தாளர்கள், இந்தச் சொல்லை ஜிஹாத் என்ற சொல்லை தங்களின் "தலைப்புகளில்" தாராளமாகப் பயன்படுத்துகின் றார்கள்.

ஆனால், உண்மை என்னவெனில்

The facts is in the last 100 years, werstern civilization has killed millions more people than any other way of life in the annals of man in a comparable unit of time.

It has also been the west in the last 100 years which had made warfare less and less respectful for cilian life. Page-15

இதன்பொருள் என்னவெனில்,

"கடந்த 100 ஆண்டுகளில், மேலை நாட்டு கலாச் சாரம் பல லட்சம் மக்களைக் கொன்று குவித்திருக் கின்றது. இது வேறெந்த வாழ்க்கைத் திட்டமும் (கொள்கையும், கலாச்சாரமும்) செய்த கொலைகளை விட பன்மடங்கு அதிகமாகும். மற்ற வரலாற்றின் எந்தவொரு காலகட்டத்தை எடுத்துக் கொண்டாலும் அந்தக் காலகட்டத்தில் அதிகமான மக்களைக் கொலை செய்தது மேலை நாட்டுக் கலாச்சார மாகவே இருக்கும்."

அடுத்து, கடந்த 100 ஆண்டுகளில் மேலை நாடுகள்தாம், போர்களின்போது சாதாரண குடிமக்களை லட்சக்கணக்கில் கொன்று குவிப்பதை வழிமுறையாகக் கொண்டுள்ளது. பக்கம்-15,

## இந்தியாவில்

நமது ஆய்வாளர்கள் இந்தயிாவில் இந்துத்துவ பாசிஸ்ட்டுகளால் கொலை செய்யப்பட்ட கோடிக் காண முஸ்லிம்களின் எண்ணிக்கையையும் கணக்கில் எடுக்கவில்லை. அதனை நாம் வெளி-யிட்டுள்ள பல ஆய்வுகளின் வழி வாசகர்களுக்குத் தந்துள்ளோம். அவை இன்றும் வரும்.

- இன்ஷா அல்லாஹ்.

*சில இத்து போன மனங்கள் இன்றும் இஸ்லாத்தை தீவிரவாதத்தின் அடையாள மாக காட்டுகின்றன. அவர்களிடத்தில் இந்த செத்த கணக்கை நாம் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. உலகத்தில் வன்முறையை வழி முறையாக கொண்டவர்கள், மனிதர்களிடத்தில் மனசாட்சியே இல்லாமல் நடந்திட்டவர்கள் எல்லாம் இஸ்லாத்தை இழித்தும் பழித்தும் பேசிட துணிகின்றனர். இப்படி இஸ்லாத்தை பற்றிய வெறுப்பை (இஸ்லாமோபோபியா) ஏதோ ஒரு வடிவில் அவர்கள் வெளிப்படுத்துவதன் மூலம் சில சில்லரை சுகங்கள் அவர்களுக்கு கிடைக் கின்றன.*

*சமூக ஊடகங்கள், சினிமாக்கள், செய்தி ஊடகங்கள், இலக்கியங்கள் என எல்லாவற்றிலும் இவர்கள் இஸ்லாத்தை பயங்கர வாதத்தின் அடை யாளமாக காட்டி விடுவதால் மக்களிடத்தில் இஸ்லாத்தை பற்றிய ஒரு தவறான கண்ணோட் டம் கண் முன் தோன்றி விடுகிறது. இதுவே மற்ற மதங்களையோ இசங்களையோ பற்றி கூறிடும் போது அப்படி ஏற்படுவதில்லை. உண்மையில் இஸ்லாம் அப்படிதான் மனிதர்களிடம் நடந்து கொண்டதா?*

*எந்த ஒரு விஷயத்தை பற்றியும் ஒரு தெளிவான முடிவுக்கு வருவதற்கு நமக்கு அந்த ஒரு குறிப்பிட்ட விசயத்தை பற்றிய தரவுகள் தேவைப்படும். அத்தரவுகளை ஆராய்ந்திட்டால் உண்மையில் எந்த இடத்தில் தவறு நடந்தது ? உண்மை என்ன என்று புலப்படும். நம்முடைய நோக்கமும் வரலாற்றில் முன் சென்று பார்த்து, இப்போது சில குறுமதியளர்கள் பரப்பிடுவதை போல இஸ்லாம் மனித உயிர்களுக்கு மதிப்பு அளிக்காமல் கொன்று குவித்ததா அல்லது வேறு என்ன மதங்கள், இசங்கள் மனிதர்களை ஈவு இரக்கமின்றி கொன்றன என்பதைத் தான்.*

*கடந்த இரண்டாயிரம் வருடத்தில் ( 0-2008) நடந்த 3000 இக்கும் மேற்பட்ட வன்முறைகளை எடுத்து கொள்வோம், அவை எந்த நாகரீகங் களோடு தொடர்புடையவை,*

*அவற்றில் 10000 க்கும் மேற்பட்டோர் இறந்த மிகவும் மோசமான 276 வன்முறைகளை பட்டியலிடுவோம். அந்த முடிவுகளை சமூகங்கள் மதத்தோடு தொடர்புபடுத்தி புரிந்து கொள்வோம். அவற்றை கொண்டு எந்தெந்த நாகரீகம் எந்தெந்த மதம் வன்முறையை இலக்காக கொண்டு செயல்பட்டுள்ளன என்பதை பார்ப்போம்.*

*பொதுவான அடையாளங்களோடு வாழக்கூடிய மக்களை நாகரீகம் என்ற பெயரால் அழைத்து அவர்கள் வாழ்ந்த பகுதிகளோடு தொடர்பு படுத்துவோம்.*

*நாகரீகம் என்று வரும்போது மதம் அதன் பிரதான பிரிவாக இருக்கின்றது.*

**வழிமுறை:** ஒரு போரில் அல்லது சண்டையில் இறந்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிடுவதில் இரண்டு சவால்கள் உள்ளன. ஒன்று, போதிய தரவுகள் இல்லாமை. இரண்டு அதன் நம்பகத்தன்மை.

அரசாங்கமாக இருந்தாலும் சரி அரசியல் குழுக்களாக இருந்தாலும் சரி தங்களுடைய சுய நலன்களுக்காக சரியான தகவல்களை மறைக்க முற்படுவார்கள். அது, இறந்தவர்களின் எண்ணிக்கையை மிகைப்படுத்து வதாகவோ அல்லது குறைத்து மதிப்பிடுவது வதாகவோ இருக்கும்.

ஏனென்றால் அதன் மூலம் பலதரப்பட்ட ஆய்வுகள் கூறும் எண்ணிக்கையை கணக்கில் எடுத்து கொள்ளலாம். வரலாற்றில் நடந்த வன்முறைகளுக்கு யார் காரணம் என்பதை வரையறுப்பது இதில் இருக்கும் இரண்டாவது சிக்கல். இங்கே இரண்டு பிரிவனருக்கு இடையே மோதல் ஏற்பட்டது என்றால் அதை யார் ஆரம்பித்து வைத்தார்கள் என்பதை ஆராய்ந்து அந்தக் கொள்கை மதங்களின் பெயரையே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளோம். ஒருவேளை வன்முறைகளுக்கு இரண்டு பிரிவுமே சமமான

| நாகரீகம் | பகுதிகள் |
|---|---|
| நாத்திகர்கள் | கம்யூனிஸ்ட் பிளாக் |
| புத்தர்கள் | கிழக்கு ஆசியா, தெற்காசியாவின் சில பகுதிகள் |
| கிறிஸ்தவர்கள் | ஐரோப்பா அமெரிக்கா ஆபிரிக்காவின் சில பகுதிகள் |
| இந்திய நாகரீகம் | இந்தியா, நேபாள், மொரிஷியஸ் |
| இஸ்லாம் | மத்திய கிழக்கு ஆசியாவின் சில பகுதிகள் ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் |
| பழங்குடியினர் | ஆபிரிக்காவின் சில பகுதிகள், காலனிய ஆதிக்கத்திற்கு முன்புள்ள அமெரிக்கா |
| சீனர்கள் | சீனா, சில அண்டை நாடுகள் |

எனவே பல்வேறு பட்ட ஆதாரங்களில் கூறப்பட்டிருக்கும் மடிந்தவர்களின் எண்ணிக்கை சரிதானா என்பதை உறுதிப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து ஒரு நியாயமான வரம்பை எடுத்து அதை அறிஞர்களின் கணக்குடன் ஒத்துபோகிறதா என்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல ஆண்டுக்கு முன் நடைபெற்ற சம்பவங்களாக இருந்தால் நமக்கு கிடைக்கும் தகவல்களின் நம்பகத்தன்மையும் சற்று குறைவு தான்.

ஏன் சமீபத்தில் நடந்த நிகழ்விலும் இறந்தவர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்வதில் சிறிய வேறுபாடு காணப்படுகிறது (உதாரணம் 1991 Operation Desert Storm நடவடிக்கை). முடிந்த அளவுக்கு வேறுபாடுகளின் வரம்பை குறைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. சில சம்பவங்களில் வரம்புகள் பெரியதாக இருக்கும்.

காரணம் என்றால் இரு பிரிவனரின் பெயரையும் குறிப்பிட்டுள்ளோம்.

போர், உள்நாட்டு போர், அரசாங்க படுகொலை, கட்டமைக்கப்பட்ட வன்முறை (Structural vidence) என நான்கு பிரிவுகளின் கீழ் வரலாற்றின் நடைபெற்ற சம்பவங்கள் வகைபடுத்தப்பட்டுள்ளன. இதில் கட்டமைக்கப்பட்ட வன்முறை என்பது நேரடியான வன்முறைகளுக்கு எதிரானவற்றை குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக நிறவெறி, இன வெறி கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் இருந்தும் படத்தில் இருந்தும் நாம் புரிந்து கொள்வது :


சம்பவங்களின் எண்ணிக்கையில் கிறிஸ்தவர்களுக்கு அடுத்தப்படியாக இஸ்லாம் இருந்தாலும் உயிரிழப்புகளைதவிர்த்து இருக்கின்றது. சம்பவங்களின் எண்ணிக்கையாக இருந்தாலும் சரி உயிர்


இழப்புகளின் எண்ணிக்கையாக இருந்தாலும் சரி முதல் இடத்தில் இருப்பது கிறிஸ்தவ சமுதாயமே. 0- 2000 இடைப்பட்ட காலத்தில் இவர்களால் மடிந்தவற்களின் எண்ணிக்கை 31 சதவீதம். வன்முறை நாகரீகங்களில் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருப்பது சீனா. கம்யூனிசப் புரட்சி ஏற்பட்ட பின்பு, சீனா நாத்திகர்களின் கொள்கையோடு கலந்துவிட்டது.

[அதாவது, நாத்திகர்களின் நாகரீகமாக விளங்கிய கம்யூனிச கிழக்கு ஐரோப்பா பனி போருக்கு பின்பு கிறிஸ்தவ நாகரீகமாக மாறியதை போன்று.] ஒருவேளை இப்படி நடக்காமல் இருந்தால் கிறிஸ்தவர்களை பின்னுக்கு தள்ளிவிட்டு சீனர்களின் நாகரிகமே மிகுந்த வன்முறைகளை நடத்திய நாகரீகமாக விளங்கியிருக்கும்.

மிகவும் சாந்த சொரூபிகளாக காட்டப்படுகின்ற புத்தமத கொள்கையை பின்பற்றுபவர்களால் 15% மக்கள் மடிந்துள்ளார்கள்.

0-2000 காலத்தில் மடிந்தவர்களின் எண்ணிக்கையில் குறைவான எண்ணிக்கையை கொண்டுள்ளது இந்தியா நாகரீகம். எனினும் ஹைதராபாத் இணைப்பு சம்பவம் அட்டவணையில் இடம்பெற வில்லை.




சுந்தர்லால் தலைமையிலான விசாரணைக் குழுவின் அறிக்கையில் அப்போது நடந்த கலவரங்களில் 27,000 முதல் 40,000 வரையிலானவர்கள் உயிரிழந்திருக்காலம் என்று கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு இந்தியாவில் நிலவும் மனித உரிமை பிரச்சனைகளும் அட்டவணையில் இடம் பெறவில்லை.

இதுவரை வெளியுலகில் அவை பெரிதும் விவாதிக்கபடாமலே இருக்கின்றது. இந்தியா - நாகா மக்கள் (Nagaland) மோதலில் இதுவரை 200,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என சிலர் கூறுகின்றனர். இந்தியாவில் இனப்படுகொலை மூலம் முஸ்லிம்களின் கொல்வதும் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகின்றது.

இவையெல்லாம் விவாதிக்கப்பட வேண்டும். உண்மை இவ்வாறிருக்க இஸ்லாத்தை தீவிரவாதத்துடன் தொடர்புபடுத்தி தொடர் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இஸ்லாம் அமைதியின் மார்க்கமா என்று கேள்வி எழுப்புகின்றனர். இஸ்லாம் அமைதியின் மார்க்கம் தான் எனினும் அநீதியிடம் சமரசம் பேசுவதும் அசத்தியத்திடம் சரணடைவதும் அதன் இயல்பில் இல்லை.

Source: War and Peace in Islam

**- MGM, அபூஹாசின்**

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (10 மில்லியனுக்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| இரண்டாம் உலக யுத்தம் (1939-45) | 55,000,000 - 72,000,000 | போர் அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள், புத்தர்கள் |
| சீன மக்கள் குடியரசு (1949-1975) | 44,500,000- 77,000,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| மூன்று இராட்சியங்கள் யுத்தம் Three Kingdoms Wars ( 220-80) | 40,000,000 | போர் | சீனா |
| சோவியத் ஆட்சி (1923- 54) | 38,000,000 - 55,000,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| அன் ஷி கலகம் (An Shi Rebellion) (755-63) | 36,000,000 | உள் நாட்டு யுத்தம் | புத்தர்கள் |
| மங்கோலிய படையெடுப்பு (1207 லிருந்து) | 30,000,000 - 50,000,000 | போர் | பழங்குடியினர் |
| மிங் சீனாவை மன்சுகள் வெற்றி கொள்ளுதல் Manchu Conquest of Ming China (1616- 62) | 25,000,000 | போர் | சீனா |
| தாய் பிங் கலகம் Tai Ping Rebellion (சீனா 1851-64) | 20,000,000 - 50,000,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா, கிறிஸ்தவர்கள் |
| முதல் உலக யுத்தம் (1914-18) | 15,000,000- 66,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| இரண்டாம் சீனா- ஜப்பான் போர் (1931-45) | 15,000,000- 22,000,000 | போர் | புத்தர்கள் |
| பூர்வ அமெரிக்கர்களை பூண்டோடு அழித்தல் (C16th- 19th) | 13,000,000- 16,000,000 | கட்டமைக் பட்ட வன்முறை | கிறிஸ்தவர்கள் |
| சீனா தேசியம் (1928-49) | 10,075,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| தைமூர் வெற்றி (1360- 1405) | 7,000,000- 20,000,000 | போர் | இஸ்லாம் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (2 மில்லியனுக்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| ரஷ்யா உள்நாட்டு யுத்தம் (1917–22) | 5,000,000 – 9,000,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள், நாத்திகர்கள் |
| எத்தியோபியா மெனலிக் II படையெடுப்பு – Conquest of Menelik II Ethiopia (1882-98) | 5,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| சுதந்திர காங்கோ வின் காலனித்துவ போர் Congo Free state Colonial war (1885-1908) | 4,500,000 – 12,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| துங்கன் கலகம் Dungan Revolt (1862- 1877) | 4,000,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| இரண்டாம் காங்கோ போர் (1998–2007) | 3,800,000– 5,400,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| நெப்போலிய போர்கள் (1804– 15) | 3,500,000 – 6,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| சீனா மாவோ சோவியத் (1923–49) | 3,500,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| முப்பது வருடப் போர் (1618–48) | 3,000,000 – 8,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மஞ்சள் டர்பன் கலகம் (சீனா, 184–205) | 3,000,000 – 7,000,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| கொரியன் போர் (1950– 3) | 2,500,000 – 5,040,000 | போர் | கிறிஸ்தவர்கள், நாத்திகர்கள் |
| ட்ரான்ஸ் அட்லாண்டிக் அடிமை வர்த்தகம் – (17th to 19th Centuries) | 2,400,000 – 4,300,000 | கட்டமைக் கப்பட்ட வன்முறை | கிறிஸ்தவர்கள் |
| வியட்நாம் போர் (1945–75) | 2,300,000 – 5,100,000 | போர் | கிறிஸ்தவர்கள், நாத்திகர்கள் |
| பிரென்ச் மதப் போர் French wars of Religion ( 1562-98) | 2,000,000 – 4,000,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| மஹ்மூத் கஜினி படையெடுப்பு, இந்தியா (1001–08) (1000–1027) | 2,000,000 | போர் | இஸ்லாம் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (1 மில்லியனுக்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| போருக்கு பிந்தைய ஜெர்மானியர் களின் வெளியேற்றம் (1945-7) | 2,100,000 - 3,000,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| கெமர் ரூச் Cambodia, Khmer Rouge (1975-9) | 1,700,000 - 2,035,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| வட கொரியா (1948-87) | 1,500,000 - 1,600,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| ஆப்கான் உள்நாட்டு யுத்தம் (1979- 2013) | 1,500,000- 2,000,000 | கட்டமைக்கப் பட்ட வன்முறை | இஸ்லாம் |
| அரபு அடிமை வர்த்தகம் (7- 19 நூற்றாண்டு) | 1,400,000 - 2,000,000 | கட்டமைக்கப் பட்ட வன்முறை | இஸ்லாம் |
| சீனர்களின் உள்நாட்டு யுத்தம் (1928- 1949) | 1,300,000 - 6,200,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| வங்காளதேச சுதந்திரப் போர் | 1,100,000 | போர் | இஸ்லாம் |
| மெக்சிகன் புரட்சி ( 1910-20) | 1,000,000 - 2,000,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| சாக்க சூலு படையெடுப்பு Shaka's conquests (1816-28) | 1,000,000 - 2,000,000 | உள்நாட்டு யுத்தம் | பழங்குடியினர் |
| சோவியத் ஆப்கன் போர் (1979-89) | 1,000,000- 1,500,000 | போர் | நாத்திகர்கள் |
| நைஜீரியன் உள்நாட்டு யுத்தம் ( 1967-70) | 1,000,000 - 1,200,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| ஈரான் ஈராக் போர் (1980-88) | 1,000,000 | போர் | இஸ்லாம் |
| கொரியா மீது ஜப்பானியர்களின் படையெடுப்பு (1592-8) | 1,000,000 | போர் | புத்தர்கள் |
| சூடானியர்களின் இரண்டாம் உள்நாட்டு யுத்தம் (1983-2005) | 1,000,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| சிலுவைப் போர்கள் ( 1095- 1272) | 1,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| அஸ்டெக் அட்டூழியங்கள் Aztec Atrocities | 1,000,000 + | கட்டமைக்கப் பட்ட வன்முறை | பழங்குடியினர் |
| பன்தாய் கலகம் ( 1856-73) | 1,000,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (500,000க்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| மொசாம்பிக் உள்நாட்டு யுத்தம் (1976–93) | 900,000 – 1,000,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம், பழங்குடியினர்கள் |
| ஏழு வருடப் போர் ( 1756–1763) | 868,000 – 1,400,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ருவாண்டன் உள்நாட்டு யுத்தம் (1990–4) | 800,000 – 1,000,000 | இனப்படுகொலை, உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| காங்கோ உள்நாட்டு யுத்தம் (1991–1997) | 800,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| அயர்லாந்தின் மகா பஞ்சம் Great Irish Famine (1845-52) | 750,000 – 1,500,000 | கட்டமைக்கப் பட்ட வன்முறை | கிறிஸ்தவர்கள் |
| இந்தோனேசியா அரசியல் / இன மோதல் (1965–87) | 729,000 – 1,000,000 | அரசாங்க படுகொலை, உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம் |
| ஈராக் போர் (2003–2013) | 614,000– 1,100,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யன் சர்காசியன் போர் (1763–1864) | 600,000 – 1,500,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| முதல் யூத ரோம போர் ( 66–73) | 600,000 – 1,300,000 | போர் | பழங்குடியினர் |
| துசங்கர் – சிங் போர் Qing- Dzungar war (1755-57) | 600,000 – 800,000 | போர் | சீனா, புத்தர்கள் |
| இரண்டாம் யூத ரோம போர் (Bar Kokhba 132-135) | 580,000 | போர் | பழங்குடியினர் |
| எரிடரியா சுதந்திர போர் (1961–91) | 570,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| அல்ஜீரியா சுதந்திரப் போர் (1954–1962) | 550,000– 1,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| சோமாலிய உள்நாட்டு யுத்தம் (1988–) | 550,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம் |
| தக்கிகளின் சம்பிரதாய கொலைகள் (17th -19th நூற்றாண்டு | 500,000 – 2,000,000 | சமயப் பலியிடுதல் | இந்தியா |
| சதி (உடன் கட்டை ஏறல் 4–19 நூற்றாண்டு) | 500,000 – 800,000 | கட்டமைக்கப் பட்ட வன்முறை | இந்தியா |
| இந்திய பிரிவினை (1947) | 500,000 – 1,000,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம், இந்தியா |
| அங்கோலன் உள்நாட்டு யுத்தம் (1975–2002) | 500,000 – 550,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள், பழங்குடியினர் |
| சூடான் முதல் உள்நாட்டு யுத்தம் (1955–72) | 500,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (250,000க்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| பராகுவே போர் - War of the Triple Alliance, Paraguay (1864-1870) | 350,000 - 610,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மியா, நியன், முஸ்லிம்கள் கலகம் ( 1850-77) | 450,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| டர்பூர் மோதல் (2003-2013) | 400, 000 | உள்நாட்டு யுத்தம், அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| ஸ்பானிஷ் மரபுரிமை போர் (1701-14) | 400,000 - 700,009 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| இரண்டாம் புருந்தி (Brundi) உள்நாட்டு யுத்தம் (1993) | 400,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| தொடர்ச்சி யுத்தம் Continuation War (1941- 4) | 371,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| பிரெஞ்சு புரட்சி (1792-1802) | 350,000 - 663,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஸ்பானிஷ் உள்நாட்டு யுத்தம் (1936-1939) | 350,000 - 500,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| மகா வடக்கு போர் (1700-1721) | 350,000 - 400,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| போர்த்துகீசியர்கள் காலணி போர் (1900-25) | 325,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| அமெரிக்க உள்நாட்டு யுத்தம் ( 1861-5) | 365,000 - 618,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| மூன்று இராச்சியங்களின் போர் ( 1639-51) | 315,000 - 735,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| கவ்காசியன் போர்( 1817 லிருந்து) | 300,000-1,500,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| உகாண்டா உள்நாட்டு யுத்தம் (1979-86) | 300,000 - 500,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| பிரான்சின் அல்ஜீரியா படையெடுப்பு (1839-47) | 300,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மிச்சிகன் நியூ காட்டன் மாயா போர் (Mexican Yucatan Maya) (1847-55) | 300,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| இடி அமீன் அரசு ( 1972-9) | 300,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| அபிசீனிய போர் (1935-41) | 275,000 - 400,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| பிரஞ்சு புரட்சி ( 1793-4) | 263,000-600,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| பிலிப்பைன் அமெரிக்கன் போர்( 1898-1913) | 255,000-1,120,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| எத்தியோபியா உள்நாட்டு யுத்தம் (1962-91) | 230,000-1,400,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| அல்பிஜென்சியன் சிலுவைப் போர் Albigensian Crusade (1208-1244) | 250,000-1,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| இந்தியர்களின் வெளியேற்றம், பிரேசில் (1900 முதல்) | 250,000-500,000 | போர், அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| சதாம் ஹுசைன் ஆட்சியில் ஈராக் (1979-2003) | 250,000-1,300,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| கியூபா புரட்சி ( 1895-8) | 250,000-300,000 | போர் | கிறிஸ்தவர்கள் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (1 லட்சத்துக்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| போஸ்னியன் போர் (1992-5) | 220,000 | போர், உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| லைபீரியா உள்நாட்டு யுத்தம் (1989-97) | 220,000 | உள்நாட்டு யுத்தம் | பழங்குடியினர், கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யா துருக்கி போர்-(1877-8) | 215,000-285,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| வங்காள தேச விடுதலை போர் (1971) | 200-000-2,800,000 | போர், அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| சீனா இராணுவ தலைவர்களின் சகாப்தம் (1917-28) | 200,000-800,000 | போர் | சீனா |
| டிட்டோவின் (Tito) ஆட்சியில் யூகோஸ்லேவியா (1944-87) | 200,000-572,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| கிழக்கு தைமூர் (1975-99) | 200,000-250,000 | அரசாங்க படுகொலை, உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம் |
| முதல் காங்கோ போர் (1996-7) | 200,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| பிரான்ஷ் பிரஷ்யா போர் Franco-Prussian War (1870-1) | 185,000-204,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| செரிலியோன் உள்நாட்டு யுத்தம் Sierra Leone (1991-2002) | 180,000-200,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| La Violencia (1948-58) | 180,000-300,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| மேஜி மேஜி கலகம், ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்கா - Maji-Maji Revolt (1905-7) | 175,000-250,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மெக்ஸிகன் விடுதலைப் போர் (1810-21) | 150,000-400,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| கம்யூனிஸ்ட் வியட்நாம் ( 1975 லிருந்து) | 165,000-460,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| ஹேசியன் புரட்சி Haitian Revolution ( 1791-1804) | 160,000-350,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| அல்ஜீரிய உள்நாட்டு யுத்தம் (1991லிருந்து) | 160,000-200,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம் |
| மிண்டனோ மோதல் (1969 லிருந்து) | 160,000+ | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| லெபனான் உள்நாட்டுப் போர் ( 1975-90) | 150,000-162,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| லைபீரியன் இரண்டாம் உள்நாட்டு யுத்தம் (1999-2003) | 150,000 | உள்நாட்டு யுத்தம் | பழங்குடியினர், கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யா - ஜப்பான் போர் ( 1904-05) | 130,000-150,000 | போர் | புத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| ரஷ்யா - துருக்கி போர் ( 1828-9) | 130,000-191,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| பனிக்கால போர் Winter War ( 1939-40) | 148,000-1,000,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| கியூபா பத்து வருட போர் ( 1868-78 | 200,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| பால்கன் யுத்தம் (1912-3) | 140,000-225,000 | போர் | கிறிஸ்தவர்கள் இஸ்லாம் |
| கவுதமால உள்நாட்டு யுத்தம் | 140,000-200,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| போர்த்துக்கீசியர்களின் காலனித்துவ போர் | 140,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| எரித்திரியா எத்தியோப்பியா போர் (1998-2000) | 125,000- 190,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| மகா துருக்கி போர் ( 1683-1699) | 120,000-384,000 | போர் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| ஆஸ்திரியா மரபுரிமை போர் (1740-8) | 120,000-359,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| சிச்சுவான் விவசாயிகள் கலகம் | 120,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| சக்கோ போர் Chaco War (1932-5) | 100,500 | போர் | கிறிஸ்தவர்கள் |
| வடக்கு யேமன் உள்நாட்டு யுத்தம் ( 1962-70) | 100,000-150,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம் |
| இரு சகோதரர்களின் போர், Inca (1531-2) | 100,000-1,000,000 | உள்நாட்டு யுத்தம் | பழங்குடியினர் |
| புதிய கினி (1984-) New Guinea | 100,000-400,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| கிழக்கு தைமூர் மீதான இந்தோனேசிய படையெடுப்பு ( 1975-8) | 100,000-200,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| அன்பால் படுகொலை (1986-9) | 100,000-180,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| பிரான்கோ ஆட்சி (1939-75) | 100,000,160,000 | அரசாங்க படுகொலை, உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| லிபியா - இத்தாலி போர் ( 1911-31) | 100,000-125,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| பெர்சிய வளைகுடா போர் ( 1991) | 100,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| 1000 நாட்கள் யுத்தம் (1899-1901) | 100,000-150,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| விவசாயிகள் போர் (1524-5) | 100,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| மத் முல்லா ஜிஹாத், சோமாலிய (1899-1920) | 100,000 | போர் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| லாஸ் நவாஸ் டெட்டுலோசா போர் Las Navas de Tolosa (1212) | 100,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஏகாதிபத்திய ரஷ்யா (1900-17) | 100,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யா போலந்து போர் (1918-20) | 100,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| டைரோன் கலகம் / ஒன்பது வருடப் போர் (1594-1603) | 100,000-130,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| வெள்ளைத் தாமரை கலகம் (1796-1805) | 100,000 | உள்நாட்டு யுத்தம் | சீனா |
| கிரிமியன் போர் (1854-6) | 105,000-277,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (50,000க்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| இரண்டாம் செச்சன் போர் (1999-2013) | 80,000-210,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| அலார்கோஸ் போர் (1195) | 80,000-150,00 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஈக்குடோரியல் கினி (1968-79) | 800,000 | போர் | பழங்குடியினர் |
| இஸ்பகான் முற்றுகை (1722) | 800,000 | போர் | இஸ்லாம் |
| கிரேக்கர்களின் சுதந்திர போர் (1821-9) | 75,000-120,000 | போர் | இஸ்லாம் |
| இந்தோனேசியர்களின் தேசியப் புரட்சி | 75,000-205,000 | போர், உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| எல் சல்வடோர் உள்நாட்டு யுத்தம் (1980-92) | 75,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| இரண்டாம் போயர் போர் Second Boer War ( 1898-1902) | 75,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| கிரேக்கம் துருக்கி போர் (1919- 22) | 75,000-250,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| பாக்சர் கலகம் (1899-1901) | 70,000-115,000 | போர் | கிறிஸ்தவர்கள், சீனா |
| பூதிகாவின் எழுச்சி (60-1) | 70,000 | போர் | பழங்குடியினர் |
| அச்சே போர் Aceh War ( 1873-1914) | 70,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யா ஆஸ்திரியா துருக்கி போர் (1787-91) | 64,000-192,000 | போர் | இஸ்லாம் |
| மொசாம்பிக் விடுதலைப்போர் (1964-1974) | 63,500 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மாவ் மாவ் எழுச்சி Mau Mau Uprising (1952-60) | 61,185 | போர் | கிறிஸ்தவர்கள் |
| முதல் செச்சன் போர் ( 1994-6) | 60,000-200,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ரோமானியா ( 1948-89) | 60,000-150,000 | அரசு படுகொலைகள் | நாத்திகர்கள் |
| ஸ்ரீலங்கா / தமிழ் மோதல் ( 1983-2013) | 60,000 | உள்நாட்டு யுத்தம் | இந்தியா, புத்தர்கள் |
| ட்டுபக் அமரு கலகம் - (Tupac Amaru) (1780-83) | 60,80,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| நிக்கராகுவா கலகம் (1972-91) | 60,000-80,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| யர்மூக் யுத்தம் (636) | 55,000 - 70,000 | போர் | இஸ்லாம் |
| எகிப்து - உதுமானியப் போர் ( 1805-11) | 56,000 | போர் | இஸ்லாம் |
| அங்கோலன் விடுதலைப் போர் | 50,000-30.000 | | |
| புருந்தி முதல் உள்நாட்டு யுத்தம் (1972) | 50,000-60,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| தஜிக் உள்நாட்டு யுத்தம் (1992-7) | 50,000 | உள்நாட்டு யுத்தம் | இஸ்லாம் |
| ரோசாப்பூ போர்கள் Wars of the roses ( 1455-85) | 50,000-60,000 | உள்நாட்டு யுத்தம் | கிறிஸ்தவர்கள் |
| ஓபியம் போர்கள் ( 1839-50) | 50,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| தப்ரிஸ் முற்றுகை (1725) | 50,000 | போர் | இஸ்லாம் |
| பைசாந்திய ராசிதுன் போர் | 50,000 | போர் | இஸ்லாம் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (20,000க்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| கிரேக்க உள்நாட்டுப் போர் ( 1945-9) | 45,000-160,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யா துருக்கி போர் (1806-12) | 45,000-170,000 | போர் | இஸ்லாம் |
| காஷ்மீர் கிளர்ச்சி (1989-2013) | 41,000-100,000 | உள்நாட்டுப் போர் | இந்தியா, இஸ்லாம் |
| ஹெரேரோ படுகொலை Herero Genocide (1904-7) | 45,000-60,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| சூனியக்காரர்களை வேட்டையாடுதல் (15-17 நூற்றாண்டு) | 40,000-60,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| மராத்தியர்கள் ஆப்கன் போர் (1760-1) | 40,000 | போர் | இஸ்லாம் |
| பல்கேரியன் எழுச்சி (1875-7) | 40,000 | போர் | இஸ்லாம் |
| இரண்டாம் ரிஃப் போர் (1921-6) | 40,000-100,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| நாதிர் ஷாவின் படையெடுப்பு (1738) | 40,400-70,000 | போர் | இஸ்லாம் |
| சிப்பீன் யுத்தம் (657) | 40,000-65,000 | உள்நாட்டுப் போர் | இஸ்லாம் |
| ஹாப்ரேவின் ஆட்சியில் சாட் (1982-90) | 40,000 | அரசாங்க படுகொலை | பழங்குடியினர் |
| சியம் ஆட்சியில் தெற்கு வியட்நாம் (1955-63) | 39,000 | அரசு படுகொலை | புத்தர்கள் |
| ரஷ்யா ஆஸ்திரியா துருக்கி போர் (1736-9) | 38,000 | போர் | இஸ்லாம், கிறிஸ்தவர்கள் |
| கொலம்பியா சுதந்திரப்போர் (1810-21) | 37,000-120,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஃபின்லாந்த் உள்நாட்டுப் போர் (1918) | 36,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| கம்யூனிஸ்ட் ஆடசியில் மங்கோலியா (1936-2013) | 35,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள், புத்தர்கள் |
| ஜாவா போர் - Java war ( 1825-30) | 35,000-180,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மல்தா முற்றுகை (1565) | 35,000-45,000 | போர் | இஸ்லாம் |
| சாண்டிநீஸ்டா கலகம் Sandi Nista | 35,000-40,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| பெரு ஷைனிங் பாத் கம்யூனிச கட்சியின் கிளர்ச்சி ( 1980-2013) | 45,000-69,000 | உள்நாட்டுப் போர் | நாத்திகர்கள் |
| நகவந்த் போர் ( 642) | 43,000-65,000 | போர் | இஸ்லாம் |
| உக்ரேனியன் படுகொலைகள் (1919-21) | 30,000-70,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| முதல் கார்லிஸ்ட் போர், ஸ்பெயின் (1832-40) | 33,000-125,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| வியட்நாமில் கிறிஸ்தவர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் ( 1832-1887) | 33,000-41,000 | அரசாங்க படுகொலை | புத்தர்கள் |
| ராசிதூன்- சஷ்ஷாநித் போர் (633) | 32,000-40,000 | போர் | இஸ்லாம் |
| கான்ட்ரா கலகம் (1981- 90) | 30,000-57,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| ஐரிஷ் எழுச்சி (1798) | 30,000-40,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஆப்கன் மீது நடத்தப்பட்ட அமெரிக்கப் படையெடுப்பு ( 2001-2) | 30,000-50,000 | போர் | கிறிஸ்தவர்கள், இஸ்லாம் |
| மொசாம்பிக் காலனிய எதிர்ப்புப் போர் (1961-75) | 30,000-60,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| கம்யூனிச ஆட்சியில் பல்கேரியா (1948-53) | 30,000-50,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| கனுடாஸ் போர் (1896-7) | 30,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| துருக்கி - சிரியா போர் ( 1831-2, 1839-40) | 30,000 | போர் | இஸ்லாம் |
| கம்யூனிச ஆட்சியில் போலந்து ( 1948- 2013) | 30,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| அர்ஜெண்டினா ராணுவ ஆட்சி ( 1976-83) | 30,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| துருக்கி -PPK மோதல் (1984-2013) | 40,000 | உள்நாட்டுப் போர், அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| சினோ - வியட்நாம் போர் (1979) | 30,000 | போர் | சீனா, நாத்திகர்கள் |
| ரொடீசியன் புஷ் போர் ( 1964- 79) | 30,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| எல் சல்வடோர் விவசாயிகள் கலகம் (1931-2) | 30,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| ஏழு வார போர் (1866) | 27,900-79,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| புலேவின் கலகம் - Bulavin's Rebellion (707-9) | 28,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| சூலு மோதல் (1856) | 27,000 | உள்நாட்டுப் போர் | பழங்குடியினர் |
| வெனிஸ்-ஆஸ்திரியா-துருக்கி போர் (1714-8) | 27,000-45,000 | போர் | இஸ்லாம் |
| அமெரிக்க சுதந்திர போர் (1775-83) | 25,300-37,300 | போர் | கிறிஸ்தவர்கள் |
| இந்தியா பாகிஸ்தான் போர் (1971 டிசம்பர்) | 23,384 | போர் | இஸ்லாம், இந்தியா |
| நகார்நோ கரபா போர் ( 1988-94) | 23,000 | போர் | கிருத்தவர்கள், இஸ்லாம் |
| ஆஸ்திரேலியா எல்லை போர் (1788-1921) | 23,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| வெனிசுலா ஃபெடரல் போர் ( 1859-63) | 20,000-50,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| பிரான்ஸ்- மெக்சிகன் போர் ( 1862-7) | 20,000-50,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| புகச்சவ் கலகம் (1773-4) | 20,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| ஆறு நாள் போர் ( 1967) | 22,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| நான்கு முனை கூட்டணி நாடுகளின் போர் ( 1718-20) | 20,000-25,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| இத்தாலி- துருக்கி போர் ( 1911-2) | 20,000 | போர் | கிறிஸ்தவர்கள்,இஸ்லாம் |
| ஏரவன் முற்றுகை (1723) | 20,000 | போர் | இஸ்லாம் |
| பர்மா - சீனா போர் ( 1765-1769) | 20,000 | போர் | புத்தர்கள் |
| போர்ச்சுக்கல் உள்நாட்டுப் போர் (1829-34) | 20,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| பிரிட்டன் ஆப்கன் போர் (1838-42) | 20,000-30,000 | போர் | இஸ்லாம் |
| பஹாய் இனத்தவர் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் (1848-54) | 20,000, | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |

| நிகழ்வு | மடிந்தவர்களின் தோராய கணக்கு (10,000க்கும் அதிகமாக) | நிகழ்வின் வகை | போர்/ வன்முறைக்கு தூபம் போட்டவர்கள் |
|---|---|---|---|
| தர்மசேனா எழுச்சி (Righteous army Uprising, கொரியா (1907-12) | 18,000 | போர் | புத்தர்கள் |
| டிரான்ஸ்வால் (Transvaal) கலகம் (1880-1) | 18,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| பாரிஸ் அமைப்பு (1871) | 17,000-23,000 | அரசாங்க படுகொலை | கிறிஸ்தவர்கள் |
| சீக்கியர்கள் எழுச்சி ( 1982-91) | 16,000-20,000 | உள்நாட்டுப் போர் | இந்தியா |
| பெஹ்லவி ஆட்சியில் ஈரான் ( 1953-1979) | 16,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| ஆங்கிலோ பர்மீஷ் போர் (1823-6) | 15,000-20,500 | போர் | கிறிஸ்தவர்கள் |
| இத்தாலி ஒருங்கிணைப்பு போர் ( 1859) | 15,000-22,500 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| போலந்து கிளர்ச்சி (1830-2) | 15,000-21,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| கினி- பிசாவ் சுதந்திரப் போர் (1963-1974) | 15,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| சீனா- ஜப்பான் போர் (1894-5) | 15,000 | போர் | புத்தர்கள், சீனா |
| கிறிஸ்தவர்கள்- ட்ருஸ் (Druze) போர் (1860), லெபனான் | 15,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| பசிபிக் போர் (1879-84) | 14,000- 55,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஹங்கேரியன கிளர்ச்சி (1703-11) | 14,000- 43,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| வலாயா போர் (633) | 14,000- 22,000 | போர் | இஸ்லாம் |
| தென்ஆப்பிரிக்க நிறவெறி | 14,000-19,000 | அரசாங்க படுகொலை | கிருத்தவர்கள் |
| ரஷ்யா-துருக்கி போர் (1768-74) | 14,000-20,000 | போர் | கிறிஸ்தவர்கள்,இஸ்லாம் |
| மெக்சிகன்- அமெரிக்கன் போர் (1846-8) | 13,000-49,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| நமீபியா உள்நாட்டுப் போர் | 13,000- 20,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| தெற்கு ஏமன் உள்நாட்டுப் போர் (1986) | 13,000 | உள்நாட்டுப் போர் | இஸ்லாம் |
| போகன்வில் (Bouganville) கலகம், பப்புவா நியூ கினி ( 1989-98) | 13,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| கம்யூனிச ஆட்சியில் செக்கோஸ்லோவாக்கியா | 13,000-60,000 | அரசாங்க படுகொலை | நாத்திகர்கள் |
| நேபாள் உள்நாட்டுப் போர் (1996-2006) | 12,700 | உள்நாட்டுப் போர் | இந்தியா |
| சீனா-ஃப்ரெஞ்ச் போர் (1884-5) | 12,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| போட்டியேர் போர் (732) | 12,000 | போர் | இஸ்லாம் |
| உதுமானியர்களின் பெர்சிய படையெடுப்பு (1727) | 12,000 | போர் | இஸ்லாம் |
| பட்டேவியா (Batavia) படுகொலைகள் (1740) | 10,000-12,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| பலஸ்தீன் மீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு | 12,000-19,000 | போர் | யூதர்கள், இஸ்லாம் |
| யோம்- கிப்புர் போர் (1973) | 11,500-16,000 | போர் | இஸ்லாம், யூதர்கள் |

| | | | |
|---|---|---|---|
| மலாயன் அவசர நிலை ( 1948-1960) | 11,053 | போர் | கிறிஸ்தவர்கள் இஸ்லாம் |
| மடகாஸ்கர் கலகம் (1947) | 11,000-60,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| செக்கிகஹாரா (Sekigahara) போர் (1600) | 11,000-32,000 | உள்நாட்டுப் போர் | புத்தர்கள் |
| குரோசியன் (Croatian) சுதந்திரப்போர் (1991-5) | 11,000-16,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஹமா படுகொலை, சிரியா (1982) | 10,000-25,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| ஆங்கிலோ அமெரிக்கன் போர் (1812- 5) | 11,000-20,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| காண்டோ (Kanto) படுகொலை, ஜப்பான் (1923) | 10,000-20,000 | அரசாங்க படுகொலை | புத்தர்கள் |
| ஹேசன் (Haitian) படுகொலைகள், டொமினிக்கன் குடியரசு (1937) | 10,000-20,000 | அரசாங்க படுகொலை, உள்நாட்டுப்போர் | கிறிஸ்தவர்கள் |
| காங்கோ- பிராஸ்வில் ஆட்சிக்கவிழ்ப்பு, உள்நாட்டு யுத்தம் (1997-9) | 10,000-20,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| ஜனசரீஸ் படுகொலைகள் (1826) | 10,000-20,000 | அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| ஸ்பேனிஷ் - மொராக்கன் போர் (1907-11) | 10,000-15,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| மேற்கு சஹாரா ( 1975-2013) | 10,000-16,000 | போர், அரசாங்க படுகொலை | இஸ்லாம் |
| கேமரூன் கிளர்ச்சி | 10,000-15,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| சிப்பாய் கலகம் (1857) | 10,000-15,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| அர்ஜென்டினா உள்நாட்டு யுத்தம் (1845-51) | 10,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| அமடு ஜிஹாத் (1810-8) | 10,000 | உள்நாட்டுப் போர் | இஸ்லாம் |
| மெக்சிகோ (1926-30) | 10,000 | உள்நாட்டுப் போர் | கிறிஸ்தவர்கள் |
| ரஷ்யா- ஸ்வீடன் போர் (1741-3) | 10,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| டே சன் புரட்சி, அன்னம் (1772-1802) | 10,000 | உள்நாட்டுப் போர் | சீனா |
| ஆங்கிலோ-சீக்கியர்கள் போர் (1846-8) | 10,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| ஸ்பானிஷ்- அமெரிக்கன் போர் (1898) | 10,000 | போர் | கிறிஸ்தவர்கள் |
| இந்தியா- பாகிஸ்தான் போர், 1965 | 8,000-15,000 | போர் | இஸ்லாம், இந்தியா |

| நாகரீகம் | இறந்தவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை | இறந்தவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை | இறந்தவர்களின் சராசரி எண்ணிக்கை |
|---|---|---|---|
| நாத்திகர்கள் | 95,908,000 | 152,911,000 | 124,409,500 |
| புத்தர்கள் | 80,116,000 | 95,777,500 | 87,946,750 |
| கிறிஸ்தவர்கள் | 119,423,000 | 236,660,500 | 178,041,750 |
| இந்தியா | 1,344,500 | 3,434,000 | 2,389,250 |
| இஸ்லாம் | 21,224,000 | 40,813,000 | 31,018,500 |
| பழங்குடியினர் | 34,232,000 | 56,890,000 | 45,561,000 |
| சீனா | 95,612,500 | 120,235,000 | 107,923,750 |
| மொத்தம் | 447,860,000 | 706,721,000 | 577,290,500 |

Source : War and Peace in Islam



## கோவை மறந்த விடுதலைப் போர் 222 ஆண்டுகளுக்கு முன் நடந்தது

# வரலாறு மீட்பு மாநாடு

ஜூன் 12, 2022இல் மே 17 இயக்கம் கோவையில் ஓர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. நிகழ்ச்சியின் பெயர் வரலாறு மீட்பு மாநாடு.

**222 ஆண்டுகளுக்கு முன் கோவையில் நடந்த விடுதலைப் போர்...கோவை மறந்த விடுதலை வீரர்கள், அப்படி கோவை மறந்த 42 பேரில் 36 பேர் முஸ்லிம்கள்...**

கி.பி 1800ல் கோவையிலிருந்த கோட்டை வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் நின்றிருந்தது. இதன் மூலமாக தமிழ்நாடு, கேரளம், கர்நாடக என அனைத்து பகுதிகளிலும் எழுந்த எதிர்ப்பை உளவு பார்த்து அழித்து வந்தார்கள். அன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் வெள்ளையர் எதிர்ப்பு வலுவாக இருந்தது. வரிவிதித்து நம்மை நாசப்படுத்தும் வெள்ளையர்களை விரட்ட தமிழர்கள் உயிரைக்கொடுக்கவும் தயாராக இருந்தனர். தமிழகம் மட்டுமல்லாமல், கேரளா, கர்நாடகத்தில் இருந்த வெள்ளையர் எதிர்ப்பு புரட்சியாளர்களும் கோவையை கைப்பற்றினால் அனைவரும் ஒன்று சேர்ந்து பெரும்படையாகி விட முடியும் என திட்டம் தீட்டி இருந்தனர். இந்த பெரும் போர்த்திட்டமே இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவையெல்லாம் முடிந்து 60 ஆண்டுகள் கழித்து வடநாட்டில் நடந்த போரே இந்தியாவின் முதல் சுதந்திரப்போர் என இன்றளவும் வடநாட்டாரால் எழுதப்படுகிறது.

புறக்கணிக்கப்பட்ட இந்த வீரமிகுப் போர் கோவை நகரை மையம் கொண்டு சூறாவளியாக எழுந்த வரலாறு கோவை நகர மக்களுக்கும் சொல்லப்படாத செய்தியாகியது. இந்த மறக்கடிக் கப்பட்ட வரலாறை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் மறக்ககடிக்கப்பட்ட நம் வீரர் களின் தியாகத்தை போற்றுதலுக்குரியதாக்கு வதே மே பதினேழு இயக்கத்தின் நோக்கம். மறக்கடிக்கப்பட்ட வரலாறை உங்களுக்குச் சொல்கிறோம். நம் போராட்ட வரலாறை ஊரேங்கும் கொண்டு செல்லுங்கள். தமிழர் ஒற்றுமையை நிலைநாட்டுங்கள்.

கோவையில் இருந்து அட்டூழியம் செய்யும் வெள்ளையர் தலையை கொய்து, தமிழர் ஆட்சியை நிலைநிறுத்த உயிரை விலையாகக் கொடுக்க உறுதி பூண்டனர் தமிழ்ப் புரட்சி யாளர்கள். கோவை கோட்டையின் மீதேறி தமிழர் கொடியை பறக்கவிடும் திட்டத்தை

தமிழகம் முழுவதும் இருந்த வெள்ளையருக்கு எதிரான புரட்சியாளர்கள் ஒன்றிணைந்து திட்டம் தீட்டினர். தமிழ்நாட்டில் பல்வேறு சாதி, மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் வேறுபாடு இல்லாமல் தமிழர் எனும் அடையாளத்தின் கீழாக போர் புரிய உறுதிபூண்டனர். கோவை மீதான தாக்குதலை வகுப்பதில் முக்கிய பணியை மருது சகோதரர்கள் மேற்கொண்டார்கள். தமிழ் நாட்டின்பிற பகுதியில்இருந்த புரட்சியாளர்களை மருது சகோதரர்கள் ஒன்றிணைத்து கூட்டமைப்பை உருவாக்கினார்கள். தமிழ்நாடு மட்டுமல்லாது பிற பகுதியிலிருந்து வரும் புரட்சியாளர்கள் புரட்சிக்குழுவோடு இணைத்தால் பெரும் பலத்துடன் வெள்ளையரை அழிக்கலாமென முடிவெடுத்தார்கள். அவரை சந்தித்து கூட்டமைப் பினை உருவாக்க தூதுக்குழு விருப்பாச்சியி லிருந்து சென்றது. இக்குழுவை வெள்ளையர் கண்களில் சிக்காமல் முன்னின்று தலைமை தாங்கிச் சென்றவர் தீரன் சின்னமலை. அவருடன் புத்தேமுகம்மது, ரமனுல்லாகான், முகம்மது ஹாசம் ஆகிய தளபதிகளும் சென்றனர். இவர்கள் திப்புவின் தளபதியாக இருந்த தூந்தாஜிவாக்கை சந்தித்து அவரை இக்கூட்டணிக்குள் கொண்டு வந்தனர்.




வெள்ளையர்களுக்கு தெரியாமல் மறைந்து பயிற்சி எடுக்கும் பணியை பழனி விருப்பாச்சி பாளையத்தின் கோபால் நாயக்கர் பொறுப் பெடுத்தார். வீரபாண்டிய கட்டபொம்மன், திப்பு சுல்தான் ஆகியோர் கொல்லப்பட்ட பின்னர் அவர்களுடன் இணைந்து நின்று போரிட்ட புரட்சியாளர்களை மருது பாண்டியர்களும், விருப்பாச்சி கோபால்நாயக்கரும் வெள்ளையர் களிடமிருந்து பாதுகாத்தனர். இவர்களும் பெரும் புரட்சிக் கூட்டணியில் இணைந்தனர். விருப்பாச்சியிலிருந்து தமிழகமெங்கும் ஓலைகள் சென்றன.

கர்நாடகத்தில் வெள்ளையரை எதிர்த்து பெரும்போர் புரிந்து கொண்டிருந்த தூந்தாஜி வாக் எனும் புரட்சியாளரை தமிழகத்தின்

'இப்படியாக இணைக்கப்பட்ட வலிமையான கூட்டணி கோவை கோட்டையை தாக்கி அழிப் பதால் கர்நாடகம், கேரளம் ஆகியப்பகுதியோடு இணைந்து தென்னிந்தியாவிலிருந்து வெள்ளை யரை அழித்திடமுடியும் என துல்லியமாக திட்ட மிட்டனர். கேரளாவில் இருந்த பழசி அரசர் கேரளவர்மன் வெள்ளையரை எதிர்த்து திப்பு சுல்தானோடு இணைந்து வெள்ளையரை போரிட்டவர். இவரையும் கூட்டணிக்குள் கொண்டுவந்தனர். இப்படியாக எழுந்த கூட்டணி யில் திருநெல்வேலி, பாஞ்சாலங்குறிச்சி, இராம நாதபுரம், சிவகங்கை, சிவகிரி, திண்டுக்கல், விருப்பாச்சி, கரூர், தாராபுரம், காங்கேயம், பொள்ளாச்சி-தளி, கொழுமம், பெருந்துறை, சத்தியமங்கலம், சேலம், ஒசூர், சங்ககிரி, என பல பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கில் புரட்சிப்படை



யில் தமிழர்கள் இணைந்தார்கள்.

இவ்வாறான எழுச்சிக்கு வித்திட்ட மருது பாண்டியர்களும், தீரன்சின்னமலையும் சாமானிய குடும்பத்திலிருந்து உயர்ந்தவர்கள். திப்பு சுல்தானும், கேரள வர்மனும் சாமானிய போர் வீரர்களாக உயர்ந்து எழுச்சியை அவர்களது நாடுகளில் நடத்தியவர்கள். இத்தளபதிகளுடன் சரிசமமாக நின்று போரிட்ட பாஞ்சாலங்குறிச்சியின் பொட்டிப்பகடை, சுந்தரலிங்கம், முத்தன் பகடை, தானாபதிபிள்ளை, கட்டன கருப்பணன், வெள்ளையன், கந்தன் பகடை போன்றோர், தீரன் சின்னமலையுடன் போரிட்ட கருப்பையாசேர்வை, பொல்லான், குணாளன் நாடார் மற்றும் ராமநாதபுரத்தின் முத்துராமலிங்க சேதுபதி, முத்துக்கருப்பத்தேவர், மேலப்பன், தஞ்சையின் ஞானமுத்து என அனைத்து சாதியை சேர்ந்தவர்களும் தங்கள் சாதியை தூக்கி எறிந்துவிட்டு தமிழர்களாய் எழுந்து நின்றனர்.

வீரமங்கை வேலுநாச்சியாருக்கு துணையாக படையை அனுப்பி சிவகங்கையை மீட்க உதவிய ஹைதர் அலி, அவருக்கு பின்னர் திப்பு சுல்தான் ஆகியோரும், தமிழகத்தின் இசுலாமியர்களும் இதர புரட்சியாளர்களுடன் ஒன்றிணைந்து நின்று போரிட்டனர். இக்கூட்டணி அமைவதற்கு முன்பே இக்களத்தில் போராடி உயிர்துறந்த பூலித்தேவர், அழகுமுத்து கோன், ஒண்டி வீரன், கான்சாகிப் முகம்மது யூசப்கான், வேலு நாச்சியார், குயிலி எனும் வீரப்பாரம்பரியம் தொடர்ந்தது. சாதி, மத வேறுபாடின்றி எழுந்த தமிழர் படை 220 வருடங்களுக்கு முன் ஆங்கிலேய வெள்ளையரை தூங்கிவிடாமல் விரட்டிக்கொண்டே இருந்தது.

இப்படி இந்தியாவிலேயே முதன்முறையாக வெள்ளையர்களுக்கு எதிராக ஒரு புரட்சிக் கூட்டணியை கொண்டுவந்தவர்கள் தமிழர்கள். இந்த வரலாறு மறைக்கப்பட்டது. தமிழகத்தில் இந்த வரலாற்று நாயகர்கள் சாதித்தலைவர்களாக திட்டமிட்டு மாற்றப்பட்டு தமிழர் ஒற்றுமையை பின்னுக்கு தள்ளுகிறார்கள்.

இந்த சாதிய பிளவுகள் தமிழகத்தின் வளர்ச்சியையும், வளத்தையும் பின்னுக்கு தள்ளுவதை அன்றே உணர்ந்த தமிழ்த்தலைவர்கள் ஒற்றுமையை கட்டி எழுப்பி போர் புரிந்து வீரமரணமடைந்தனர்.

கோவை கோட்டையை கைப்பற்ற கர்நாட



கத்தின் தூந்தாஜிவாக் தளபதியாக கனிஜா கானை அனுப்பினார். கனிஜாகான் 4000 குதிரை வீரர்களுடன் கோவைமீது தாக்குதல் நடத்தவும், இவர் வந்த செய்தியறிந்து மருது பாண்டியர்கள் சிவகங்கைப்பகுதியில் போர் துவக்கவும் திட்ட மிடப்பட்டது. கோவையருகே மலைகளில் படை யணிகளை மறைத்து கோவை மீது தாக்குதல் நடத்த ஷேக்ஹுசேன் தலைமையில் திட்டமிடப் பட்டது. திப்பு சுல்தானின் படைவீரர்களோடு இணைந்த போர் படை உருவாக்கப்பட்டது.

அரவக்குறிச்சி கவுர்க்ககவுடண்டரும், ஒசூரின் புட்டேமுகம்மதுவும் தாராபுரத்தை நோக்கி படையை நகர்த்தினார்கள். ரோனுல்லாகான் காங்கேயத்தை கைப்பற்ற படையை நகர்த்தினார். கோவை நகரத்தை நோக்கி முகம்மது ஹாசம், அப்பாஜி, ஷாமியா ஆகியோர் படை நகர்த்தி னார்கள். அனைத்துப் பகுதிகளின் படை நகர்வினை கண்காணித்து ஒருங்கிணைக்கும் பொறுப் பேற் றார் தீரன் சின்னமலை. கோவையில் புரட்சி யாளர்களுக்கு தங்குவதற்கு இடமும், உணவும் அளிக்கும் வேலையை நரசிங்கப்பா மேற்கொண் டார். கேரளவர்மனும் தனது பங்கிற்கு புரட்சி யாளர்களை அனுப்பினார். கோவை தாக்குதல் ஜூன் 3ம் தேதி முகர்ரம் பண்டிகை கொண்டாட் டங்களின் போது கூட்டத்துடன் கூட்டமாக மக்களுடன் கலந்து தாக்குதலை நடத்துவதென திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் புரட்சியாளர்களை பற்றிய உளவுச் செய்தியை ஆங்கிலேயருக்கு கோவையின் தாசில்தார் தெரியப்படுத்தியதால் ஆங்கிலேய அதிகாரிகள், ரஜபுத்திர சிப்பாய்களை லெப்டி னெண்ட் கர்னல் மக்காலிஸ்டர் தயார் செய்திருந் தார். மதுரைப்படை உரிய சமிக்கை கிடைக்காத தால் புரட்சியை மேற்கொள்ள இயலாமல் தவித் தது. இதற்குள்ளாக ஆங்கிலேயர் கோவையில் தாக்குதலுக்காக காத்திருந்த நரசிங்கபாவை கைது செய்தார்கள். இதையறிந்த புரட்சியாளர்கள், கோவையின் காடுகளுக்குள் பின்வாங்கினார்கள். ஆங்கிலேயரை திசைதிருப்ப சத்தியமங்கலம், தளமல்லா, தாராபுரம் பகுதிகளில் தாக்குதலில் புரட்சியாளர்கள் இறங்கினார்கள். இப்பகுதி களுக்கு ஆங்கிலேயப்படை அனுப்பப்பட்டு போர் நடத்தப்பட்டது. இதில் தளமல்லா போரில் முகம்மது ஹாசிம் உட்பட பல புரட்சியாளர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள். முகம்மது ஹாசிம்



தாக்குதலின் முக்கிய தளகர்த்தர் ஆவார். இவரிடம் புரட்சியாளர்களின் கடிதங்கள் பல இருந்தன. ஆங்கிலேயரிடம் சிக்குவதற்கு முன்பாக தம்மிடமிருந்த கடிதங்களை எரித்தார். அவரை சிறைப்படுத்தி இரும்பு வலையங்களில் மாட்டி சித்தரவதை செய்து தகவல்களை அறிந்து கொள்ள ஆங்கிலேயர் முயன்றனர். சகபுரட்சியாளர்களை காட்டிக்கொடுக்காமல் போராடிய முகம்மது ஹாசிம் கி.பி1800 ஜீன் 8ம் தேதி தனது கழுத்தினை அறுத்துக்கொண்டு உயிரைப் போக்கி பெரும் தியாகத்தை செய்தார். இதனையடுத்து ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட அப்பாஜி மற்றும் 42 பேருக்கு மரணதண்டனை ஆங்கி லேயரால் விதிக்கப்பட்டது.

**புரட்சியாளர்களில் பெரும்பாலோனோர் இசுலாமியர்கள்**

இந்த புரட்சியாளர்களில் பெரும்பாலோ னோர் இசுலாமியர்கள். ஆங்கிலேயரின் அரசு பதிவுகளில் தீரன் சின்னமலை, முகம்மதுஹாசம் ஆகியோரோடு காணமுடிகிற புரட்சியாளர்கள் பெயர்களாக ஹைதர்கான், சுமாஷ்கான் அலிசாகிப், மான்கான், ஷேக் அலி, செலர்கான், அலிசெயிப், உசேன்செயிப் யூனுஸ்கான், மொஹியுதீன்கான், சையது இமாம், பீர்செயுப், மொகீர்தீன்கான், செய்யது மொகியுதீன், சூலிமலை அமில்தார், இட்ச்சப்புலி அமில்தார்,


ஷேக்மதர்சேக்யுசேன், குலாம்உசேன்சேக்அலி, பீர்முகம்மது, அப்துல்காதர் ஷமஸ்கான், செலார்கான், சோட்டா அப்துல்காதர், முகம்மது ஷெரிப், ஷேக் மீரா, ஷேக்மீரான், ஷேக் முகம்மது தெலர்வார், புனா, பீர்முங்கப்பா அலி, பெஷாயர், முல்லப்பா குனிமூர்த்தி, சுப்பாராவ், பீனாஷேக்மியான், மொகிர்தீன்கான், சையது மொஹிர்தீன் என எண்ணற்றவர்கள் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்தப்பட்டியலில் இசுலாமியர்கள் பெருமளவில் புரட்சிக்கான திட்டமிடல், செயல்படுத்தல் பணிகளில் ஈடுபட்டதை நாம் காணமுடிகிறது. வெள்ளையரால் கைது செய்யப்பட்ட முகையதீன் கான், ஷம்னஸ்கான், மொகியூதீன், ஷேக்கமீன், ஹைதர்கான், மேலும் தூந்தாஜிவாகினால் அனுப்பபட்ட அப்பாஜி, மற்றும் இதர ஐந்து பிரதிநிதிகள் ஆகியோர், இதர 30க்கும் அதிகமான இசுலாமிய வீரர்கள் உட்பட 42 பேர் வெள்ளையரளால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

*தமிழ்நாட்டின் முக்கிய படைத்தளத்தை தமிழர் வசமாக்க நடத்தப்பட்ட போரில் ஈடுபட்ட இந்த வீரர்களில் எட்டு பேர் தாராபுரத்திலும், ஏழுவர் சத்தியமங்கலத்திலும், ஆறு பேர் கோவையிலும் மற்றவர்கள் புரட்சி நடந்த இடங்களிலும் வைத்து படுகொலை செய்யப்பட்டார்கள்.*

*இந்த 42 வீரர்களின் ஈகத்தினை போற்றும் விதத்தில் 222 வருடம் கழித்து கோவை நகர மக்கள் ஒன்று திரண்டு வீரவணக்கம் செலுத்த முன்வர வேண்டுமென மே பதினேழு இயக்கம் உரிமையுடன் கோரிக்கை வைக்கிறது. பெரும் பகுதி இசுலாமியரும், எளிய உழைக்கும் மக்களும் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராக அணி வகுத்து, சாதி, மதம் கடந்து போராடிய வீர வரலாற்றினை நினைவு கூர்வோம். இப்புரட்சியாளர்கள் சாதி கடந்து ஒன்றாக போராடினார்கள். மதம் இவர்களது உறுதியை பிரிக்கவில்லை. சாதியும், மதமும் இவர்களது தியாகத்தின் முன் வீழ்ந்து போனது. இவ்வாறு தமிழர்களாய் ஒன்றுபட்டு போராடியதை நம் தலைமுறை உணர்வோம். அடுத்த தலைமுறைக்கு இதைச் சொல்வோம்.*

**மே-17 இயக்கம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து.**

**நமது நிருபர்.**





## வாசகர் வட்டம்

மதிப்புக்குரிய "வைகறை வெளிச்சம்" ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். ஜூன் 2022 இதழில் இந்தியாவை மீட்க அணிதிரண்ட பத்திரிகையாளர்களும், ஊடகவியலாளர்களும் 'ஊதி வளர்க்கப்படும் வெறுப்பின் உச்சத்தில் மௌனம் காப்பது நீதியல்ல என எல்லா இந்திய நிறுவனங்களிடமும் "நீங்கள் தயைகூர்ந்து விழித்துக் கொள்ளுங்கள்: உங்கள்மீது அரசியல் அமைப்புச்சட்டம் விதித்துள்ள கடமைகளை முழுமையாக நிறைவேற்றுங்கள்' என்ற கோரிக்கையை திரு.என்.ராம் முதலான 28 ஊடகவியலாளரகள் வைத்துள்ளது எல்லா இந்திய நிறுவனங்களின் மனசாட்சியை உலுக்குவதாக அமைந்துள்ளது. இதனை முழுமையாக வேளியிட்டுள்ள "வைகறை வெளிச்சத்துக்கு" வாழ்த்துகள்!

தோழமையுடன்,

**செ.நடேசன்,**

விஜய் ஆனந்த் பதிப்பகம்,
20.பாரதி இல்லம், ஊத்துக்குளி ஆர்.எஸ்.
திருப்பூர் மாவட்டம்


கருப்பாயி என்கிற நூர்ஜஹான்
கதை ஆசிரியர்
அன்வர் பாலசிங்கத்துடன் நேர் முகம்

டி.எம். உமர் பாரூக்

கள ஆய்வு
மு. குலாம் முஹம்மத், எம்.ஏ. இதழியல்

பதிப்பகம்

# கருத்தியலில் சாதித்த சம்பவங்கள்

சில ஆண்டுகளுக்கு முன்னே திருப்பூரில் நடந்த புத்தக கண்காட்சிக்கு சென்ற போது கண்ணில் பட்டது "கருப்பாயி என்ற நூர்ஜஹான்" என்ற புத்தகம்.

தலைப்பை பார்த்ததுமே உடனே வாங்கினோம். வீட்டிற்கு வந்த பின்பு படித்து பார்த்தால் இப்படி எல்லாம் நடந்துள்ளதா என்ற கேள்வி.

அதாவது மீனாட்சிபுர மக்கள் சாதி கொடுமையை ஒழிக்க இஸ்லாத்தை ஏற்றனர். ஆனால் இஸ்லாத்தை ஏற்ற பெண்களை யாருமே திருமணம் செய்ய முன் வராததால் உறவுக்கார இந்துக்களுக்கே திருமணம் செய்து கொடுத்ததாகவும் உச்ச கட்டமாக கருப்பாயியாக இருந்து இஸ்லாத்தை ஏற்ற நூர்ஜஹான் என்ற பெண் தற்கொலை செய்ததாக புத்தகம் முடிகிறது.

உடனே இதை அண்ணன் குலாம் முஹம்மது அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டது. அவ்வேளைகளில் நீலப்புலிகள் இயக்க தலைவராக இருந்து பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி இறுதியில் சாதியை ஒழிக்க இஸ்லாமே தீர்வு என்று இஸ்லாத்தை ஏற்ற அண்ணன் T.M உமர்பாரூக் அவர்களும் குலாம் முஹம்மத் அவர்களும் சூறாவளியாக சுற்றி சுழன்று அழைப்பு பணி செய்து கொண்டிருந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் சாதியை ஒழித்து இஸ்லாமிய கடலில் சங்கமம் ஆகினர். இந்த புத்தகத்தை அண்ணன் குலாம் முஹம்மது அவர்களும் மறைந்த T.M. உமர்பாரூக் அவர்களும் படித்து அதிர்ச்சி அடைந்தனர். அவ்வேளையில் தஞ்சையில் தோழர் பசு கௌதமன் அவர்கள் அன்வர் பாலசிங்கத்தை அழைத்து கருத்தரங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

அதில் அண்ணன் T.M. உமர்பாரூக் அவர்களும் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். கருத்தரங்கம் நடைபெறுவதற்குள் உண்மை தன்மையை அறிந்து கொள்ள மீனாட்சிபுரம் சென்று அறிந்து விடலாம் என அண்ணன் குலாம் முஹம்மது மற்றும் அண்ணன் T.M. உமர்பாரூக் அவர்களும் முடிவு செய்தனர். தாருல் இஸ்லாம் பவுண்டேசன் டிரஸ்ட்டின் கள வீரர்களோடு குழு மீனாட்சிபுரம் சென்றது.

அங்கே சென்று பார்த்தால் திருமணம் செய்யாமலோ அப்பகுதி பரம்பரை முஸ்லிம்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களை திருமணம் செய்யாமலோ புறக்கணிக்க வில்லை என்றும் யாருமே திருமணம் நடக்கவில்லை என தற்கொலை செய்து கொள்ளவுமில்லை என்ற உண்மையை அறிந்து கொண்டனர். புத்தகம் ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய் என நிரூபனமாகியது. தஞ்சை கருத்தரங்கில் பேசிய அண்ணன் T.M.உமர்பாரூக் அவர்கள் தாங்கள் நடத்திய கள ஆய்வை கூறிய போது அன்வர் பாலசிங்கம் பேயறைந்தது போல ஆகி விட்டார்.

இஸ்லாத்தை ஏற்ற பெண்களுக்கு திருமணம் நடக்காது என திட்டமிட்டு நடத்தப்பட்ட கருத்தியல் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்க பட்டது. எல்லா புகழும் அல்லாஹ்விற்கே.

- காதர் முஹய்யத்தீன்

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)



## ஓர் அறிமுகம்

– தொடர்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்கு தலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த

நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப் போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து “எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது” என்று வெறிகொண்டு கூறியதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை



மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது.

ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்துவிட்டது தான் வேதனை. இனி உள்ளே...

**ஹிஜ்ரி 569 கி.பி. 1174**

ஸலாஹுத்தீன் அவர்களிடம் யமனில் உள்ள அப்துன் நபி இப்னு மஹ்தி என்ற ஒருவன் அதை ஒட்டுமொத்தமாக தன் கைவசம் கைப்பற்றி வைத்திருப்பதை பற்றியும் அவன் இன்னும் பல கோட்டைகளை யமனில் கைப்பற்றியுள்ளதை பற்றியும் கூறப்பட்டது. அவன் தன்னை வெள்ளிக்

கிழமை பிரசங்க மேடைகளில் புகழ வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தான். அது மட்டுமன்றி தன்னுடைய ஆதிக்கத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும் என்பது அவனுடைய ஆசை.

ஸலாஹுத்தீன் அய்யூபி அவனுடைய கொட்டத்தை அடக்க விரும்பினார். அவர் தன்னுடைய மூத்த சகோதரர் துரன்ஷாவை யமனுக்கு படைகளுடன் அனுப்பி வைத்தார். ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் விருப்பப் படியே துரன்ஷா அப்துன் நபி இப்னு மஹ்தியை வீழ்த்தி யமனை கைப்பற்றினார்.

**ஸலாஹுத்தீன் அய்யூபிக்கு எதிராக சதி**

எகிப்தியர்களில் சிலர் அய்யூபிக்கு எதிராக சதித்திட்டம் தீட்டினர். அவரை ஆட்சியில் இருந்து வீழ்த்த நினைத்தனர். அவர்கள் தங்களுக் குள்ளாக ஒருவரை எகிப்தின் தலைவராக நியமித்து அதற்கான ஆதரவை ஃபிரான்குகளிடம் கோருவது என முடிவு செய்தனர். அதன்படி இப்னு மஸ்ஸால் என்பவரை தங்களுடைய தலைமையாகவும் அமைச்சராகவும் முடிவு செய்து அந்த செய்தியை ஃபிரான்குகளுக்கு அனுப்பி வைத்தனர். இவர்கள் அனைவரும் ஓர் இரவில் ஒன்று கூடி ஸலாஹுத்தீனுக்கு எதிராக புரட்சி செய்வது என முடிவு செய்தனர்.

ஆனால், இறைவனுடைய நாட்டம் வேறு விதமாக இருந்தது. ஸலாஹுத்தீனுக்கு எதிராக யாரை தலைவராக நிறுத்தி சதி செய்ய நினைத் தார்களோ அவரே நேரிடையாக ஸலாஹுத் தீனிடம் சென்று அனைத்து விஷயங்களையும் ஒன்று விடாமல் சொல்லி விட்டார். அவர் ஸலாஹுத்தீனுக்கு எதிராக சதி செய்ய துணிவு கொள்ளவில்லை என்பதே காரணம்.

இதன் பின்னர் ஸலாஹுத்தீன் தனக்கு எதிராக சதி செய்தவர்கள் அனைவரையும் வர வழைத்து விசாரித்த போது அனைவரும் உண்மையை ஒப்புக் கொண்டனர். அதன் பின்னர் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது.

**தலைவர் நூருத்தீன் ஸங்கி மறைந்தார்**

அன்று பெருநாள். நூருத்தீன் ஸங்கி அவர்கள் அன்றைய தினம் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை முறையாக செய்து முடித்தார். பெருநாள் தொழுகை முடிந்த பின்னர் நீதிபதி ஷம்சுத்தீன் முஹம்மது இப்னல் முகத்திம் அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களின் சார்பில் பெருநாள் உரை நிகழ்த்தினார். அதன் பின்னர் முக்கியமானவர்கள் தலைவர்கள் அனைவரும் நூருத்தீன் அவர்களிடம் சென்று பேசினர். ஹுமாமுத்தீன் என்பவர் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் ஒரு கேள்வியை கேட்டார். “இன்ஷா அல்லாஹ், அடுத்த வருடம் நாம் இதே இடத்தில் ஒன்று கூடுவோமா?”

அதற்கு பதிலளித்த நூருத்தீன், “நீ அதற்கு பதிலாக அடுத்த மாதம் இங்கே இருப்போமா என்று கேள். அடுத்த வருடம் என்பது மிகவும் அதிகம்“ என்றார்.

அல்லாஹ் இறை நேசர்களின் வாய் வழியே பேசுகிறான் என்பது உண்மை. அவர் கூறியது போலவே ஆனது. அடுத்த ஒரு மாதத்திற்குள் நூருத்தீன் ஸங்கி அவர்கள் இறையடி சேர்ந்தார்.

நூருத்தீன் ஸங்கி அவர்கள் நோய் வாய்ப் பட்டார். மருத்துவர்கள் அவருக்கு ரத்தம் குத்தி எடுக்கும் மருத்துவத்தை பரிந்துரைத்தார்கள். ஆனால் அவர் அதனை மறுத்துவிட்டார். அவரை எதிர்த்து பேச யாருக்கும் துணிவில்லை. அவர் ஷவ்வால் பிறை 11இல் புதன்கிழமையன்று இவ்வுலகை பிரிந்தார்.

அவர் இறையச்சம் கொண்டவராகவும் அதிக மதிகம் தொழக்கூடியவராகவும் இருந்தார். அவர் ஒரு கல்லாலான கட்டிலில் அமரக்கூடியவராக இருந்தார். அது அவருக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது. ஒய்யார பஞ்சு மெத்தைகளை அவர் விரும்பியதில்லை. அவர் அந்த கட்டிலுக்கு அருகில் ஒரு மரத்திலான வீட்டை கட்டி இருந்தார். நிலநடுக்க காலத்தில் அந்த வீட்டை அவர் கட்டினார். அந்த வீட்டை அவர் பாதுகாப்பானதாக கருதினார். அந்த வீட்டில் இரவு பகலாக நின்று தொழுவார். அதன் பின்னர் சிறிது நேரம் அந்த கல் கட்டிலில் வந்து அமர்வார். அவருடைய மறைவிற்கு பின்னர் அவருடைய உடல் அந்த வீட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

ஸலாஹுத்தீன் அவர்கள் நூருத்தீன் அவர்களின் மரண செய்தி அறிவிக்கப்பட்ட போது அவர், “நூருத்தீன் ஸங்கி அவர்கள் எங்களை நோக்கி படையெடுத்து வரக்கூடும் என்ற செய்தி எங்களிடம் வந்தபோது என்னை சேர்ந்தவர்களின் பலர் இது உண்மையென்றால் நாம் அவரை எதிர்த்து நிற்போம் என்று ஆலோசனை கூறினர். ஆனால் நான் அதனை மறுத்துவிட்டேன். நாம் அவ்வாறு செய்யக்கூடாது என்றும் அது நாம் அவருக்கு செய்யக்கூடிய துரோகம் என்றும் அவர்களிடம் கூறினேன். ஆனாலும் இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்ற குழப்பத்திலேயே நாங்கள் இருந்தோம். இந்த நிலையில் தான் அவருடைய மரணச் செய்தி வந்தது. அல்லாஹ்

அவருக்கு கிருபை செய்வானாக" என்று கூறினார்.

நூருத்தீன் அவர்களின் ஆட்சி பரந்து விரிந்தது. அவரின் ஆட்சி மொசூல், அஜ்ஜஸீரா, பக்ர் பிரதேசம், லெவான்த், எகிப்து, யெமன் என பரந்து விரிந்து இருந்தது. பல்வேறு நாடுகள், பல்வேறு இனத்தை சேர்ந்த மக்கள் அவரின் ஆட்சியின் கீழ் இருந்தனர். அவருடைய ஆட்சியின் கீழ் இருந்தவர்கள் அவரை மனதார பாராட்டி வந்தனர். அவருடைய நேர்மையான நீதியான ஆட்சி அவர்களை கவர்ந்திருந்தது. அவருடைய நன்னடத்தையும் அவர்களை ஈர்த்திருந்தது. அவர் ஓர் ஒப்பற்ற தலைவர்.

அவரிடம் மிகத் தெளிவான இலக்கும் பார்வையும் அதனை செயல்படுத்தும் செயல் திட்டங்களும் இருந்தன. அவர் தன்னுடைய முன்னோர்களின் செயல்பாடுகளில் சிறந்த வற்றை தேர்ந்தெடுத்து அதனை பின்தொடர் பவர். அறிஞர்களின் அடியொற்றி நடப்பவர். அவர் நபித்தோழர்களை போன்றே நடக்க முயல்பவர். ஏதாவது ஒரு செயல் நபி அவர் களால் செய்யப்பட்டது என்பதை கேள்வியுற்றால் அதன்படியே நடக்க முயல்வார். அதன் காரண மாகவே அவர் கழுத்தில் வாளை தொங்கவிட்டுக் கொண்டு சபைக்கு வந்தார்.

முதன் முதலாக அவரைக் காண்பவர்கள் அவருடைய தனித்துவத்தையும் அவருடைய புனிதத்தன்மையும் கண்டு வியப்பர். பின்னர் அவருடன் பழகத் தொடங்கிய பின்னர் அவருடைய அடக்கத்தையும் மென்மை தன்மையையும் கண்டு வியப்பர்.

நூருத்தீன் இறை நேசர்களையும் அறிஞர் களையும் விரும்பக்கூடியவர். அவர்களை நோக்கி செல்லக் கூடியவர். அவர்களின் இல்லங்களுக்கு சென்று உரையாடி தன் சந்தேகங்களை போக்கிக் கொள்ளும் வழக்கம் கொண்டவர். தன்னுடைய அடிமைகளில் சிறுவர்கள் பருவ வயதையடைந் ததும் அவர்களை விடுதலை செய்து விடுவார். ஆண்களை பெண்களுக்கு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து மணமுடித்து கொடுப்பார். யாராவது அவருடைய ஆளுனர்கள் குறித்து புகாரளித்தால் அதனை உடனடியாக விசாரித்து நீதி செலுத்தக்கூடியவர். நீதி செலுத்தாத அவருடைய ஆட்சியாளர்களை பதவியை விட்டு தூக்கி வீசிவிடுவார். ஏகப்பட்ட நன்மையான விஷயங்களை அவரிடம் சொல்லிக் கொண்டே போகலாம். இதன் காரணமாகவே இறைவன் அவரை பல்வேறு பகுதிகளை ஆட்சி செய்யும் அதிகாரத்தை வழங்கினான்.

அவர் ஹிஜ்ரி *511* கி.பி *1117*இல் ஞாயிற்றுக் கிழமையன்று பிறந்தார். ஹிஜ்ரி *569* கி.பி. *1174*இல் புதன்கிழமையன்று மறைந்தார்.

முஸ்லிம்களிடமிருந்து பெறப்பட்ட செல்வங் களை இறைவழியிலான ஜிஹாதிற்காக முறை யாக செலவிட்ட நூருத்தீன் ஸங்கி அவர்கள் முஸ்லிம்களின் கவுரவத்திற்காகவும் அவர்களின் பாதுகாப்பான வாழ்விற்காகவும் போட்டிருந்த அடித்தளம் மிகவும் வலுவானது. யாராலும் ஆட்டிப் பார்க்க இயலாதது. இதன் காரண மாகவே அதற்கு பின்னர் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் இந்த ஜிஹாதை சிலுவைப்படை யினருக்கு எதிராக தொடர்ந்து நடத்தி ஜெரு சலத்தை மீட்டெடுத்தார் என்றால் அது மிகையாகாது.

நூருத்தீன் ஸங்கி அவர்களும் அவர்களின் வாழ்வியலும் முஸ்லிம்களுக்கானது. இறைவனுக் கானது. தனக்கு கீழிருந்த பலவீனமான குடிமக் களை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ப தையும் தன்னை விட பலமான, முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய தலைவலியாக இருந்து அநியாயம் செய்து கொண்டிருந்த சிலுவைப்படையினரை எப்படி எதிர் கொள்ள வேண்டும் என்பதையும் நூருத்தீன் ஸங்கி அவர்கள் பின் வந்த முஸ்லிம் களுக்கு கற்று தந்து விட்டு சென்றிருந்தார்.

அவருடைய வாள் முஸ்லிம்களுக்கு எதிராக உயர்த்தப் படக்கூடாது என்பதில் அவர் மிகுந்த கவனமாக இருந்தார். நூருத்தீன் ஸங்கி அவர்கள் முஸ்லிம்களால் மறக்கப்பட்டது சோகம் மட்டுமல்ல துரோகமும் கூட.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு. முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். எந்த நிலையிலும் பிரிந்து விடக்கூடாது.

இந்த நிலத்தில் நீதி நிலைபெற வேண்டும். இறைவனின் ஆட்சி அமையப்பெற வேண்டும்.

அந்த கனவை நனவாக்க இதோ அடுத்தவர் புறப்பட்டு விட்டார். அல்லாஹ் எந்த காலத் திலும் முஸ்லிம்களை ஆதரவின்றி விட்டுவிடு வதில்லை.

- இன்ஷா அல்லாஹ் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் சாகசங்கள் இனி வரும் இதழ்களில்.

தொடர்



# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

*ஜூன் மாத தொடர்ச்சி....*

**இந்த உண்மை அவருடைய வாக்காளர் அடையாள அட்டையின் மூலமும் அவருடைய ரேஷன் அட்டையின் மூலமும் உறுதியானது.**

இந்த உண்மைகளின் மூலம் காவல்துறையினர் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகினர். அவர்களு டைய தவறுகளை மூடிமறைக்க குற்றம் சாட்டப் பட்டவருக்கு எதிராக புதிதாக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 205 மற்றும் 419ஐ தவறான முகவரியை தந்து காவல் துறையை தவறாக வழி நடத்தியதாக கூறி காவல்துறையினர் பிரயோகப் படுத்தினர்.

விசாரணை 3 நவம்பர் 2009 அன்று பரேலி உயர் செஷன்ஸ் நீதிபதியால் (விரைவு நீதிமன்றம்) ஆரம்பிக்கப்பட்டு 2 டிசம்பர் 2009 அன்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. நீதிமன்றம் காவல் துறையின் கதையை நம்பவில்லை. மாண்புடன் சையத் முபாரக்கை விடுவித்தது.

உயர் செஷன்ஸ் நீதிபதி (விரைவு நீதிமன்றம்) வினய் கரே அவர்கள் தன்னுடைய தீர்ப்பில் அரசு தரப்பு முன்வைத்த அனைத்து ஆதாரங்களையும் வழக்கின் அனைத்து அம்சங்களையும் ஆய்ந்து தெளிந்த பின் பல்வேறு வாதங்களை சந்தேகங் களை எழுப்பியிருந்தார். அவர்களை விடுதலை செய்யும் முன் நீதிபதி தன் தீர்ப்பில் காவல்துறை கூறிய கதை நம்புவதற்கு மிகவும் கடினமாக உள்ளது என்றும் உறுதியான எந்த ஆதாரங்களும் வழக்கில் இல்லை என்றும் கூறியிருந்தார்.

சட்டப்பிரிவுகள் 205 மற்றும் 419 ஐபிசி–யை பொருத்தவரை நீதிமன்றம் இவ்வாறு கூறியிருந் தது, 'முபாரக் தன்னுடைய முகவரியை இந்த நீதிமன்றத்தில் தவறாக குறிப்பிடவில்லை. காஷ்மீரில் இருந்து வந்தவர் என்று அவர் தவறாக குறிப்பிட்டு எந்தவித பலனையும் அடையப் போவதுமில்லை. எனவே, இந்திய தண்டனைச் சட்டம்பிரிவுகள் 205 மற்றும் 419–இன் கீழ் சுமத்தப்பட்ட இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானவை'. நீதிமன்றம் மேலும் இவ்வாறு கூறியது, 'ஐ.பி.சி. 205 என்பது ஆள் மாறாட்டத் திற்கானது என்றும் ஐ.பி.சி.419 என்பது தவறான தகவல்கள் கொடுத்து பித்தலாட்டம் செய்வது அதன்மூலம் யாராவது ஒருவருக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முபாரக் நேரடியாக அல்ல மறைமுகமாக கூட யாருக்கும் இவ்வாறு எந்தத் தீங்கையும் ஏற்படுத்த வில்லை'.

தீர்ப்புக்குப் பிறகு சையத் முபாரக் இவ்வாறு கூறினார், 'நான் காஷ்மீருக்கு கனவில் கூட போனது கிடையாது. இருந்தும் நான் காஷ் மீரிலிருந்து பாகிஸ்தானுக்கு தீவிரவாத பயிற்சிக் காக அழைத்துச் சென்ற தீவிரவாதிகளின் பெயர் களை கூறும்படி கூறி பல்வேறு வகைகளில் மனிதத் தன்மையற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டேன். இரண்டு வருடங்கள் ஏழு நாட்களுக்குப் பிறகு நான் பிணையில் வெளியே வந்தேன். அதற்கு பிறகு 18 மாதங்கள் கழித்து நான் விடுதலை செய்யப்பட்டேன்.

முபாரகாபாத் முபாரக் முஸ்லிமாக பிறந்த ஒரே காரணத்திற்காக அடைந்த அருவருக்கத்தக்க துன்பங்களிலிருந்து மூன்று வருடங்கள் நான்கு

மாதங்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

### 10) ஜவுன்பூர் (உத்தரபிரதேசம்) ஜூன் 2007 ஆர்.டி. எக்ஸ். வெடிகுண்டு வழக்கு – குற்றம் சாட்டப்பட்டவர் ஏழு வருடங்களுக்கு பிறகு விடுதலை

உத்தர பிரதேசத்தின் ஜவுன்பூரை சேர்ந்த நாசர் ஹூசைன் என்ற ஒருவர் ஜூன் 19 2007 அன்று ரிஷிகேஷில் இருந்து உத்தரப் பிரதேசத்தின் ஸ்பெஷல் டாஸ்க் போர்ஸ் (எஸ்.டி.எஃப்) என்று அழைக்கப்படும் உத்தரப்பிரதேசத்தின் சிறப்பு காவல்துறை படையினரால் கைது செய்யப் பட்டார்.

ஆனால் அவர் லக்னோவில் உள்ள 'சார் பாக்' ரயில் நிலையத்தில் ஆர்டிஎக்ஸ் மற்றும் வேறு சில வெடிபொருட்களுடன் கைது செய்யப் பட்டதாககாட்டப்பட்டார். அவர்மீதுதீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் தேச விரோத செயல்கள் போன்றவற்றின் கீழாக குற்றம் சுமத்தப்பட்டது. அவருக்கு எதிரான வழக்கு ஏழு வருடங்களாக நடைபெற்றது. இந்த கால கட்டத்தில் பலமுறை மீண்டும் மீண்டும் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். இறுதியாக 2014 மார்ச் 20ஆம் தேதி லக்னோவின் செஷன்ஸ் நீதிமன்றம் அவரை அப்பாவி என கண்டுகொண்டது. போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறி அவர் கௌரவ மாக விடுவிக்கப்பட்டார்.

### 11) காலுப்பூர் (அஹமதாபாத்) வெடிகுண்டு வழக்கு பிப்ரவரி 2006 : நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட மூன்று நபர்களை எட்டு நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு காவல் துறையினரின் வேண்டுகோளுக்கு இணங்க விடுவித்தது

இது ஒரு தனித்துவமான வழக்கு. இந்த வழக்கில் காவல்துறை மூன்று நபர்களை ஒரு வெடிகுண்டு வழக்கில் கைது செய்தது. எட்டு நீண்ட ஆண்டுகள் அவர்களை சிறையில் வைத்து வாட்டி வதைத்தது. இறுதியாக அவர்களுக்கு எதிராக எந்த விதமான ஆதாரங்களும் இல்லை என்று கூறி அவர்களை வழக்கிலிருந்து விடுவிக்கு மாறு நீதிமன்றத்தை கோரியது.

அப்ரோஸ் பதான், பிலால் அஹமத் மற்றும் முஸ்தபா சையத் ஆகியோரை பிப்ரவரி 2006 அன்று அஹமதாபாத்தில் உள்ள காலுப்பூர் ரயில்வே நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் தொடர்பு உள்ளதாக கூறி குஜராத்தின் தீவிரவாத தடுப்பு படையினர் (ஏ.டி.எஸ்) கைது செய்தனர். ஆனால் அந்த மூவரும் அவுரங்காபாத் (மகாராஷ் டிரா) ஆயுதங்கள் குவியல் வழக்கிற்காக சிறைக் கம்பிகளுக்கு பின்னால் மே, 2006–ஆம் ஆண்டிலி ருந்து இருந்து வருகின்றனர். ஆனால் காலுப்பூர் ரயில் நிலைய குண்டு வெடிப்பு வழக்கில் அவர் களை தொடர்புபடுத்தி இருப்பதை 2012–ஆம் ஆண்டில் தான் அவர்கள் தெரிந்து கொண்டனர்.



அவர்கள் கைது செய்யப்பட்டு 8 ஆண்டுகள் முழுமையாக கழிந்த பிறகு இவர்களுக்கு எதிராக எந்தவிதமான ஆதாரங்களும் கைவசம் இல்லை என்ற திடீர் ஞானோதயம் காவல்துறைக்கு பிறந்தது. இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் சி.ஆர்.பி.சி. பிரிவு 169–இன் கீழ் அஹமதாபாத் பெருநகர நீதிமன்றத்தில் அவர்கள் மூவரையும் விடுவிக்கக்கோரி காவல்துறை அறிக்கை யையும் தாக்கல் செய்தது. நீதிமன்றம் 17 நவம்பர் 2014 அன்று குற்றம் சாட்டப்பட்ட மூவரையும் வழக்கிலிருந்து விடுவித்தது.

இவ்வழக்கில் காவல்துறையினர் நடந்து கொண்ட விதம் குறித்து பேசாமல் இருப்பதே சிறந்தது. ஆனால் எப்படி நீதிபதிகளும் மேஜிஸ்ட் ரேட்களும் குற்றம் சாட்டப்பட்டவர்களை 8 ஆண்டுகளாக சிறையில் வைக்க அனுமதி அளிக்க முடியும்.

மனித உரிமைகளில் ஆர்வம் காட்டும் சில தன்னார்வு தொண்டு இயக்கங்கள் (என்.ஜி.

ஓ—க்கள்) இவ்வழக்கை ஓர் ஆய்வு வழக்காக எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும் உயர் நீதித்துறை இதனை சுயபரிசோதனைக்காக எடுத்துக்கொள்ள வேண்டும்.

## 12) கோபால்பூர் காவல்நிலையத்தில் (ஹைதராபாத்) கைது செய்யப்பட்ட பதினெட்டு சிறுவர்கள் சி.ஆர்.எண். 198/2007 ( மெக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு வழக்கின் முகப்பு) நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்

2007 மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு வழக்கில் அப்பாவி முஸ்லிம் சிறுவர்களை கைது செய்வதற்கு முன்னேற்பாடாக, ஹைதராபாத் காவல்துறை ஒரு பொய்யான கற்பனையான வழக்கொன்றை 15.6.2007 அன்று கோபால்பூர் (ஹைதராபாத்) காவல் நிலைய வழக்கு சி.ஆர். எண்.198/2007 என்ற வழக்கின் மூலமாக முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிராக பதிந்தனர். அந்த முஸ்லிம் இளைஞர்கள் சட்ட விரோதமாக எல்லையை கடந்து பங்களா தேஷிற்கு சென்று குண்டுகள் தயாரிப்பதற்கான பயிற்சிகளை மேற் கொண்டு விட்டு, வெடிகுண்டுகள் அடங்கிய பையை ஏற்கெனவே முடிவு செய்த இடங்களில் வைத்து விட்டு, மெக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு வெற்றிகரமாக முடிந்ததற்காக சதிகாரர்கள் உடன் இனிப்பு வழங்கி கொண்டாடினர் என்று அதில் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. காவல்துறையினர் 18 முஸ்லிம் இளைஞர்களை இந்த வழக்கில் கைது செய்தனர். மொத்தம் 12 நபர்கள் மீது குற்றம் சாட்டி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. மூன்று நபர்கள் தலைமறைவாகி விட்டதாக அதில் காட்டப்பட்டிருந்தது. விசாரணைக்கு பிறகு VII பெருநகர செஷன்ஸ் நீதிபதி ராதாகிருஷ்ணா எல்லா இளைஞர்களையும் விடுவித்தார். தன்னுடைய தீர்ப்பில் நீதிபதி, ‘காவல்துறை அதிகாரிகளிடம் தானாக முன்வந்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை தவிர்த்து, குற்றம் சாட்டப் பட்டவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக போர் செய்ய சதித்திட்டம் தீட்டினார்கள் அல்லது அரசுக்கு எதிராக வெறுப்புணர்ச்சியை உருவாக்க முயற்சி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளை தொடர்புபடுத்தும் எந்த விதமான ஆதாரங்களும் இல்லை.’ என்று கூறி இருந்தார்.



## 13) மத்திய குற்றவியல் நிலையம் (சென்ட்ரல் க்ரைம் ஸ்டேஷன்) துப்பறியும் துறை ஹைதராபாத் காவல் நிலைய சி.ஆர்.எண்.75/2007

இது ஹைதராபாத் காவல் துறையினரால் 8 ஜூலை 2007 இல் பதியப்பட்ட மற்றொரு வழக்கு. 2007 மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு வழக்கில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை கைது செய்ய காரணம் காட்ட போடப்பட்ட வழக்கு. காவல் துறையினர் 5 முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து இவ்வழக்கில் அவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தனர். தங்களது ஐ.எஸ்.ஐ. கூட்டாளிகளுடன் உரையாடுவதற்காக போலியான ஆவணங்களை உருவாக்கி தந்து வேறு நபர்கள் பெயரில் ஒரு செல்போனை வாங்கினார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஐதராபாத்தில் பெருநகர மாஜிஸ்திரேட் VII அனைத்து இளைஞர்களையும் விடுதலை செய்தார். நீதிமன்றம் தன்னுடைய உத்தரவில் ‘உண்மையில் எந்த ஆவணமும் சமர்ப் பிக்கப்படவில்லை அல்லது குற்றம் சாட்டப் பட்ட நபர் 1 வினய் வெங்கடேஷ் என்பவருக்கு பதிலாக ஆள்மாறாட்டம் செய்தார், வினய் வெங்கடேஷ் என்ற பெயரில் அலைபேசி இணைப்பைப் பெற்றார், அதனை தீவிரவாதி களின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தினார் என்பதை நிரூபிக்க எந்த ஓர் ஆதாரமும் இல்லை என கூறியிருந்தது.

## 14) அதிக அளவிலான ஆர்.டி.எக்ஸ். குவியல்களுடன் ஒரு தீவிரவாதி : சம்பவம் நடந்த தினத்தில் அவர் வேறொரு வழக்கிற்காக காவல்துறையின் காவலில் இருந்தார்

கொல்கத்தாவில் வசித்து வரும் அசீசுர் ரஹ்மான் என்பவர் லக்னோவின் (உத்தரப் பிரதேசம்) காவல்துறையினரால் கைது செய்யப்

பட்டார். 22, ஜூன், 2007 இல் அவரும் அவருடன் இன்னும் நான்கு பேரும் பெரும் ஆர்டிஎக்ஸ் ஆயுத குவியல்களுடன் லக்னோவில் வந்திறங்கினர். அதற்கு அடுத்தநாள் அதாவது 23, ஜூன், 2007–இல் சஞ்சய் காந்தி போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டியூட் ஆப் மெடிக்கல் சயின்சஸ் என்ற இடத்திற்கு பின்னால் பள்ளம் தோண்டி அந்த வெடிபொருட்களை பதுக்கிவிட்டு அவர்கள் கல்கத்தாவிற்கு திரும்பி விட்டனர் என்று காவல் துறை குற்றம் சாட்டியது. ஆனால் காவல்துறையினர் சொன்ன கதையில் பளிச்சென்று தெரியக் கூடிய பல்வேறு முரண்பாடுகள் இருந்தன. இதனை குற்றம் சாட்டப்பட்ட தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினர். அதாவது 23, ஜூன், 2007 அன்று குற்றம் சாட்டப்பட்ட ரஹ்மான் ஒரு திருட்டு வழக்கிற்காக ஜாதவ்பூர் காவல் நிலையத்தில் காவலில் இருந்துள்ளார். அதே நாளில் கூடுதல் தலைமை குற்றவியல் நடுவர் (அடிஷனல் சீஃப் ஜூடிசியல் மேஜிஸ்ட்ரேட்) முன்பாக அதே திருட்டு வழக்கிற்காக ஆஜர்படுத்தப்பட்டும் உள்ளார். இந்த உண்மையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அவரை இவ்வழக்கில் இருந்து விடுவித்தது.

### 15) பெல்காம் காவல் நிலைய முகாம் (கர்நாடகா) – செஷன்ஸ் வழக்கு எண்.271/2008 – ஆத்திரத்தை தூண்டக்கூடிய பொருட்களை கையில் வைத்திருந்தது, பரப்பியது ஆகிய குற்றங்களுக்காக

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 153A,153B,120B,124A,147,522 ஆகியவற்றின் கீழும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் பிரிவுகள் 13(2), 15 ஆகியவற்றின் கீழும் வெடி பொருட்கள் சட்டம் பிரிவுகள் 4 மற்றும் 5–ன் கீழும் ஒரு வழக்கு பெல்காம் காவல்நிலைய முகாமில் (கர்நாடகா) சில நபர்களுக்கு எதிராக 27,மே,2008 அன்று பதியப்பட்டது. விசாரணையின் முடிவுக்கு பிறகு குற்றப்பத்திரிகை 21, ஆகஸ்ட், 2008 அன்று 15 நபர்களுக்கு எதிராக பின்வரும் குற்றங்களுக்காக தாக்கல் செய்யப் பட்டது :–

1) பாபரி மஸ்ஜித் இடிப்பு, குஜராத் வகுப்பு கலவரம், உலக வர்த்தக மைய தாக்குதல், மும்பை தொடர் குண்டு வெடிப்புகள், ஒசாமா பின்லேடனின் போதனைகள், இந்து தலைவர்களின் முஸ்லிம்களுக்கு எதிரான உரைகள், முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடுமைகள், வெடிகுண்டுகளை தயாரித்தல் மற்றும் உபயோகிப்பது குறித்த தகவல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பல ஃபோல்டர்களை கொண்ட கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்க்–ஐ வைத்திருத்தல்

2) இதுபோன்ற ஆத்திரம் ஊட்டக்கூடிய விஷயங்களை வகுப்புவாத வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும் எண்ணத்துடனும் தேசத்தின் ஒற்றுமையை சீர்குலைக்கும் எண்ணத்துடனும் பரப்புதல்

3) ஆத்திரம் ஊட்டக்கூடிய விஷயங்களை மின்னஞ்சல் மூலமாக முஸ்லிம்களுக்கு அனுப்புதல்

4) இந்த சதித் திட்டத்தை திட்டமிடுவதற்காக ஒருவர் மற்றவரை கைபேசி வழியாக தொடர்பு கொள்ளல்


5) வெடிகுண்டுகளை தயாரிப்பதற்காக அதற்கான பொருட்களை சேகரித்தல்

6) சிமி என்ற தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர்களாக இருத்தல்

வழக்கு செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்த பின்னர் பெல்காம் முதன்மை செஷன்ஸ் நீதிபதி விசாரணையை நடத்தி 8 நவம்பர் 2011 அன்று தனது தீர்ப்பினை வழங்கினார். அவர் கீழ்கண்ட காரணங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தார்.

- ஹார்ட் டிஸ்குகளை கைப்பற்றும் போது தடயவியல் நிபுணரின் உதவியோடு ஒவ்வொரு பிட்டாக (பிட் என்பது கணிணியில் அளவுகளில் மிகச்சிறிய அளவு, உதாரணத்திற்கு மில்லிகிராமை போன்றது. ஒரு எழுத்தை ஒரு பிட் அளவாக கணக்கிடலாம்.) அசல் நகலெடுக்கப்பட்டது என்பதை அரசு தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது.

- கணினியின் ஹார்ட் டிஸ்க்களின் ஃபோல்டர்களில் (கோப்புறைகளில்) இருந்தவை எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பது தெரியவில்லை.




- அந்த தகவல்களை தரவிறக்கம் (டவுன் லோடு) செய்த நபரின் அடையாளம் உறுதிப் படுத்தப்படவில்லை.

- குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ள கைபேசிகள் (செல்போன்கள்) குற்றம் சாட்டப் பட்டவர்களுடையது என்பதை காண்பிப்பதற் கான எந்த ஆவணங்களும் இல்லை.

- குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவர் களுக்கிடையே அவர்களுடைய கைபேசிகளின் வழியாக தொடர்பு கொண்டார்கள் என்பதை காண்பிப்பதற்கான எந்த விதமான மின்னணு ஆதாரங்களும் பாதுகாக்கப்படவில்லை.

- சாட்சிகள் அமிலங்கள் (ஆசிட்), இளக்கி பற்ற வைக்கும் கருவிகள் (சால்டரிங்கன்), பாட்டரிகள் மற்றும் இதர பொருட்களை கைப்பற்றியதை ஆதரிக்கவில்லை.

- குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரைக்கூட தடை செய்யப்பட்ட சிமி இயக் கத்தின் உறுப்பினர் என்பதை நிரூபிக்க அரசு தரப்பு தவறிவிட்டது.

**16) மல் மாருதி காவல்நிலையம், பெல்காம் (கர்நாடகா) – செஷன்ஸ் வழக்கு எண். 260/2008 – வகுப்புவாத வன்முறையை தூண்டியதாகவும் முஸ்லிம்களுக்கு எதிரான அட்டூழியங்களை கொண்ட குறுந்தகடுகளை (சி.டி) வைத்திருந்ததாகவும் சொல்லப்படும் குற்றங்களுக்காக**

*மல் மாருதி காவல்நிலையத்தில் (பெல்காம்) ஒரு வழக்கு 14 ஆகஸ்ட் 2008 அன்று பதியப்பட்டு அதன் குற்றப்பத்திரிகை 12 செப்டம்பர் 2008 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் 7 நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வகுப்புவாத கலவரத்தை தூண்டும் எண்ணத் துடன் முஸ்லிம்கள் மீது நிகழ்த்தப்பட்ட காட்டு மிராண்டிதனமான அட்டூழியங்களை கொண்ட குறுந்தகடுகளை விநியோகித்து சதி செய்தல், அழிவு காரியங்களுக்கான பொருட்களை கொள்முதல் செய்தல் போன்ற குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டன.*

*8, நவம்பர், 2011 அன்று முதன்மை செஷன்ஸ் நீதிபதி (பெல்காம்) அவர்கள் தன்னுடைய தீர்ப் பினை வழங்கினார். அரசு தரப்பு மடிக்கணினியில் (லேப்டாப்பில்) தரவிறக்கம் (டௌன் லோடு) செய்த அந்த இரண்டு பேர் யார் என்பதை நிரூபிக்க தவறிவிட்டதாகவும் அந்த மடிக்கணினியில் இருந்த பல்வேறு கோப்புறைகளில் (ஃபோல்டர் களில்) இருந்தவற்றின் மூலம் எது என்பதை சுட்டிக்காட்ட தவறிவிட்டதாகவும் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டி குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் அவர் விடுதலை செய்தார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தெரியாமல் யாராவது உள்நுழைந்து அந்த கோப்புறைகளை (ஃபோல்டர்கள்) பிரதி (காப்பி) செய்தார்களா? என்பதை தடயவியல் நுட்பங்களை கொண்டு பார்க்க விசாரணை அதிகாரி எந்த ஒரு முறையான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.*

*நீதிமன்றம் அதை கவனித்து பின்வருமாறு கூறியது 'வெறுமனே கைப்பற்றப்பட்ட மடிக் கணினிகளும், குறுந் தகடுகளும் குற்றம் சாட்டப் பட்டவர்கள் சதி செய்தார்கள் என்ற அனுமான த்தை நோக்கி நம்மை கொண்டு செல்லவில்லை'.*

*– இன்ஷா அல்லாஹ் தொடரும்...*

# மோடியின் எட்டாண்டு ஆட்சியில் தலைகுனிவே ஏற்பட்டதில்லையா..?

இந்திய பிரதமர் மோடி யாருமே எதிர்பாராத ஒரு கருத்தை குஜராத்தில் பன்னோக்கு மருத்துவமனை திறப்பு விழாவில், "கடந்த எட்டு ஆண்டு ஆட்சியின் சாதனைகளாக அவர் போக்கில் சிலவற்றைக் கூறிவிட்டு, இறுதியாக இந்த எட்டாண்டு காலத்தில் மக்கட்கு தலைகுனிவு ஏற்படக் கூடிய எந்தச் செயலையும் தான் செய்யவில்லை என்று திருவாய் மலர்ந்தருளி யுள்ளார். (தினகரன் 29-5-2022)

இதனைப் படித்தபோது அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை. ஏனெனில் முழுப் பூசணி யையும் சோற்றில் மறைக்கும் கைங்கர்யத்தை மோடி கையாளுகிறார். எது நடந்தாலும் அதனை சாதாரணமாக மக்களும் அரசியல்வாதிகளும் கடந்து விடுவார்கள் அல்லது மறந்து விடுவார்கள் என்கிற எண்ணத்தில் பேசி வருகிறார்.

வேளாண் சட்டங்கள் மூன்றை விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதுபோல் வெளியிட்டதை எதிர்த்து நாடு முழுவதும் கொந்தளிப்பான போராட்டங்கள் தொடங்கின. விவசாயிகள் மகா பஞ்சாயத்து டெல்லியில் கூடி முடிவு எடுத்தபடி அகில பாரத விவசாய சங்கத்தின் தலைவர் பல்பீர் சிங் ரஜேவால் தலைமையில் போர்க்கொடி தூக்கி போராடிய வரலாற்றையும், பசி, பனி, குளிர், வெயிலில் அவதிப்பட்டு விவசாயிகள் 300-க்கும் மேற்பட்டோர் பலியான வரலாற்றையும் அவ்வளவு எளிதில் மறந்து விட முடியுமா? உலகின் கவனம் குவிந்திருந்த இப்போ ராட்டங்களின்போது, உத்தரபிரதேசத்தில்லக்கிம் பூர்சேரி என்ற இடத்தில் விவசாயிகள் மீது வாகனத்தை ஏற்றி கொலை செய்த வழக்கில் ஒன்றிய அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

30-10-2021 அன்று நான்கு விவசாயிகள் மற்றும் ஒரு பத்திரிகையாளர் உட்பட வாகனத்தை ஏற்றி கொலை செய்ததாக ஆஷிஷ் மீது வழக்குப் பதிவானது. மேற்படி படுகொலை இந்திய முழுவதும் அதிர்வலைகள் ஏற்படுத்தியதும், மக்களிடையே கடும் எதிர்ப்பும் கேவலமும் ஏற்பட்டதும், மோடிக்கும் மக்களுக்கும் தலை குனிவு அல்லாமல் வேறென்ன?

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் பல குழந்தைகள் பிறந்த 24 மணிநேரத்திற்குள் இறந்து போவதாக சர்வதேச அமைப்பான "சேவ்த சில்ட்ரன்" அமைப்பு கூறுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 2 லட்சம் வரை இந்தியாவில் மரணமடைகிறார்கள். அதாவது ஒரு மணிநேரத் திற்கு 45,6 குழந்தைகள் பிறந்தவுடன் இறக்கிறார் கள். இதற்கெல்லாம் ஒரே காரணம் சரியான உணவு இல்லாததுதான். எனவே உண்மையான



– ப. சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்




பாதிப்பை அறிய வளர்ந்த நாடுகளுடன் குழந்தைகள் மரண விகிதத்தை ஒப்பிட்டால் ஜப்பானில் குழந்தைகள் மரண விகிதம் 3.2 ஆக உள்ளது. சிங்கப்பூரில் 3.0 ஆக உள்ளது. இந்தியா வில் நகர்ப்புறங்களில் 36 ஆகுவும், கிராமப் புறங்களில் 58 ஆகுவும் உள்ளது திடுக்கிடும் செய்தியாகும்.

இந்தியாவில் 45 கோடி பேர் 18 வயதுக்கும் குறைவானர்கள். ஒட்டுமொத்தமாக மக்கள் தொகையில் 40 சதவிகிதம் பேர் குழந்தைகள். அப்படியிருந்தும் மொத்த பட்ஜெட்டில் குழந்தை களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவாகவே இருப்பது நியாய மாகுமா? நெஞ்சில் ஈரமின்றி குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்களில் நிதியை வெட்டி குறைத்து ஒதுக்கியதால் ஏராளமான குழந்தைகள் பிறந்தவுடன் மரணிப்பது இந்தியா வுக்கு தலைகுனிவு இல்லையா?

தற்போது நாடு முழுவதும் மாயமாகும் சிறுமிகள், பெண்கள் உள்ளிட்டோர் எண்ணிக்கை தினந்தோறும் ஆயிரத்தைத் தொடுகிறது என்பது அதிர்ச்சியளிக்கின்றது. (தினகரன் 26-5-22)

காணாமல் போன மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் சிறுமிகள் விகிதம் 2016ல் 65 சதவிகிதத்திலிருந்து 2020ல் அகில இந்திய அளவில் 77 சதவிகிதமாக உயர்ந்துவிட்டதுதான் மோடி ஆட்சியின் சாதனையாகும். நமக்கு இது வேதனை! மக்களுக்கு தலைகுனிவு!! நினைக்கவே குலை நடுங்க வைக்கும் மேற்படி சதவிகித உயர்வு உலகின் பார்வையில் வெட்கிக் கூனி குறுகி நிற்கும் நிலை இல்லையா? ஒரு ஆன்மிக தேசத்தின் நிலை இப்படியாகலாமா?

பெண்களை பாதுகாக்க நிர்பயா நிதித்திட்டம் 2012ல் ஏற்படுத்தப்பட்டது. பெண்களின் பாது காப்பை உறுதி செய்வதற்காக மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்ற இலக்கோடு தொடங்கப்பட்ட இந்த சிறந்த திட்டத்தைப் பல மாநிலங்கள் நிதியைப் பயன்படுத்தி பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்றும் ஒதுக்கப்பட்ட நிதியும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

நிதி சரிவர பயன்படுத்தப்படுகிறதா? என்று ஒன்றிய அரசு ஏன் கண்காணிக்கவில்லை? பயன்படுத்தாத மாநிலங்கள் மீது இதுவரை எடுத்த நடவடிக்கைகள் என்ன? போக்சோ சட்ட வழக்குகள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே போவதைக் காணுகையில், பொறுப்பற்ற அம் மாநில அரசுகளையும் கண்காணிக்காத மத்திய அரசையும் தேர்ந்தெடுத்த மக்கள்தான் தலையில் அடித்துக் கொண்டு தலைகுனிய வேண்டும்! நிர்பயா நிதித் திட்டத்தின் அடிப்படை நோக் கத்தையே விளங்காத, கையாலாகாத ஒன்றிய அரசின் போக்கால் நாட்டின் நிலைமை என்ன?

இந்திய சிறுமிகள் பாதுகாப்பு விஷயத்தின் மனதைப் பிழியும் பரிதாப கொடூர சம்பவங்கள் அரங்கேறிவிட்டன. 2014ம் ஆண்டுக்குப் பிறகு ஜம்மு கஷ்மீரின் கந்துவா பகுதியில் 8 வயது சிறுமி கூட்டுப் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு ஒருவாரம் வரை சிதைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். அதேபோல், உத்திர பிரதேசத் தின் 'உன்னாவ்' பகுதியைச் சேர்ந்த 17 வயது மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு,

பிணத்தை இரவோடு இரவாக ஒரு காட்டுப் பகுதியில் பெற்றோருக்குத் தெரிவிக்காமல் போலீஸாரே எரித்துவிட்ட குற்றச் சம்பவம் உலகம் முழுவதும் அதிரலையை ஏற்படுத்தின. அது மட்டுமல்ல குஜராத் மாநிலம் சூரத் பகுதியில் நடந்த பலாத்கார சம்பவங்களும் நாடு முழுவதும் திடுக்கத்தை உண்டாக்கியது.

இக்கொடுமைகள் சிறிதும் அலட்டிக்காத மத்திய நிதித்துறை இணை அமைச்சர் சந்தோஷ் கங்வார் என்பவர் 'நிருபர்களிடம் இதுபோன்ற குற்றங்களைத் தடுப்பது கடினம். ஓரிரு பலாத்கார சம்பவங்கள் நடந்தால் அதைப் பெரிது படுத்தக் கூடாது' என்று கருத்து தெரிவித்தவுடன் நாடு முழுவதும் பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் கன்னத்தில் அறையாத குறையாக கண்டனங்களை எழுப்பின. கடுகளவு பொறுப்பற்ற மத்திய அமைச்சரின் கூற்று நாட்டு மக்களுக்கு எவ்வளவு பெரிய தலைகுனிவு! மேற்படி விவகாரங்கள் தொடர்பாக ஐ.நா. பெண்கள் அமைப்பின் இயக்குநரான பும்சைல் லாம்போ, 'நியூயார்க்கில் உள்ள செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, "ஐ.நா." சபையும், அதன் இந்திய ஒருங்கிணைப்பாளரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்தக் கண்டனங்கள் முக்கியமானதுதான். அதே வேளையில் அந்த விவகாரங்களில் உரிய நடவடிக்கை எடுப்பது அதைவிட முக்கியமானதாகும். முடியாது" (மணிச்சுடர் 20-4-2018) இவ்வளவு நடந்தும் மோடி வாயேத் திறக்கவில்லை.

மேற்கண்ட உலகளாவிய கண்டனங்களுக்குப் பிறகுதான் முன்னாள் காங்கிரஸ் பிரதமர் மன்மோகன் சிங் "மௌனிபாபா" என்று கிண்டல் அடித்த மோடி வாயேத் திறந்தார். இதன் பிறகுதான் போக்சோ சட்டங்களின் வழக்குகளை விசாரணை செய்ய போக்சோ சிறப்பு நீதிமன்றகள் 1023 சிறப்பு நீதி மன்றங்களை தொடங்க ஆணை பிறப்பித்ததை நாட்டு மக்கள் மறந்து விடுவார்களா- கடந்த எட்டாண்டுகளாக மோடியின் ஆட்சியில் ஒவ்வொரு இந்தியனும் தலை குனிந்து, மனம் வருந்தி பெருமூச்சு விடுவதை உலகம் சுற்றும் வாலிபர் பிரதமர் மோடி உணர்கிறாரா? இல்லையா? இவ்வளவு களோபரங்களுக்கும் பிறகுதான் 12 வயதிக்குட்பட்ட சிறுமிகளைப் பலாத்காரம் செய்தால் தூக்குத் தண்டனை விதிக்கும் அவசரச் சட்டம் 23-4-2018ல் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கையொப்பமிட்டார்.

வேலை வாய்ப்பைப் பொறுத்தவரை புதிதாக 2 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதியில் கூறினார் பொதுச் செயலாளர் சீதாராம் யெசூரி. வேலையின்மை அதிகரிக்கிறது என்றும், உண்மையை மோடியரசு தொடர்ந்து மறுத்து வந்தது. இப்பொழுது வேலையின்மை கடுமையாக குறைந்துவிட்டது என்று மோசடியான புள்ளி விவரங்களை வெளியிடுகிறது மத்திய அரசு. 2019ஆம் ஆண்டில் 3 கோடி வேலை வாய்ப்புகளும் 2022ல் 1 கோடி வாய்ப்புகளும் காணாமல் போய்விட்டன" என்கிறார். அதாவது இருந்த வேலை வாய்ப்புகளும் பறிபோனதே எட்டாண்டு ஆட்சியின் பலன்! இந்நிலை இந்தியர்களுக்கு தலைகுனிவு இல்லையா?



கொரோனா தொற்று கோவிட்-19 தாக்கத்தின்போது தடுப்பூசி கள ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் தயாரித்தபோது உள்நாட்டு தேவை அதிகரித்தபோது வெளி நாடுகளுக்கு தர்மபிரபு போல அனுப்பி, காசு பார்த்ததைக் கண்டு இந்திய மக்கள் மோடி மேல் வெறுப்புற்று தலை குனியவில்லையா? இதனால் வைரஸ் 2ம் அலை முதல் 3ம் அலைவரை வேகமாகப் பரவி சமாளிக்க முடியாமல் இந்தியா முழுவதும் மரண ஓலம் அதிகரித்ததோடு உத்திர பிரதேசத்திலும், மத்திய

பிரதேசத்திலும் கொத்து கொத்தாக மரணங்கள் ஏற்பட்டு புதைக்க வழியில்லாமல் நேரமும் இல்லாமல், இடம் பற்றாக்குறையால் கங்கை நதியில் வீசி எறியப்பட்டு, பிணங்கள் மிதந்தன, சடலங்கள் கடற்கரை மணலில் கும்பல் கும்பலாக புதைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும், அதன் செய்திகள் தினகரன் பத்திரிகை ஏராள மான படங்களுடன் கட்டுரைகளாக வெளியிடப் பட்டனவே! இந்த அவலங்களை மறைக்க இந்திய அரசு எத்தனித்ததை கண்டு, அதிர்ச்சியடைந்த நாட்டு மக்கள் வெட்கித் தலை குனியவில்லையா?

உலக சுகாதார அமைப்பு (WHO) 5-5-2022ல் வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவில் 2020-21ஆம் ஆண்டுகளில் 4.7 மில்லியன் (47 லட்சம்) மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகாவோ கொரோனா வைரஸால் இறந்திருக்கலாம் என்று கூறியிருந்தது. 2021, டிசம்பர் நிலவரப்படி கொரோனா தொற்று மற்றும் அதன் தாக்கத்தால் 4.8 லட்சம் பேர் இறந்துள்ளதாக மோடி அரசு மதிப்பீடு செய்திருக்கிறது. ஆனால், உலக சுகாதார அமைப்பினரின் மதிப்பீடு 10 மடங்கு அதிகமாக உள்ளது. கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை தென் கிழக்கு ஆசியா, ஐரோப்பாவில் மூன்றில் இரண்டு மடங்கு உலக அளவில் 10 நாடுகளில் பதிவாகி இருந்தது. இதில் இரண்டாம் இடத்திற்கு அமெரிக் காவிற்கு அடுத்த படியாக இந்தியா இருந்ததை தினமும் அவ்வப்போது பத்திரிகையில் வெளிவந்த அட்டவணையிலிருந்து வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

என்ன ஒரு வேடிக்கை என்றால் அட்டவணை யில் இரண்டாம் இடத்திலிருந்து இந்தியா கடைசி வரை இறங்கவில்லை. மோடி அரசு கையாண்ட படுமோசமான நிலையால் உலகில் கொரோனா தொற்றால் இறந்தோர் பட்டியலில் இந்தியாவிற்கு இரண்டாம் இடம். இது இந்திய மக்களுக்கு தலைகுனிவு இல்லையா?

இந்தியாவில் சுகாதார கட்டமைப்பை வலுப் படுத்துவதில் மோடி தலைமையிலான அரசு தோல்வியடைந்துவிட்டதுதான் மேற்கண்ட உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகளிலிருந்து புலப்படுகின்றது. 2011ஆம் ஆண்டு பல்வேறு காரணங்களால் காங்கிரசு ஆட்சியில் மருத்துவ பராமரிப்பு கிடைக்காமல் 10 சதவிகிதம் பேர் மட்டுமே உயிரிழந்தோர் ஆவார். ஆனால் 2014-க்குப் பின் மோடி தலைமை ஏற்றபிறகு மருத்துவ பராமரிப்பு கிடைக்காமல் 45 சதவிகிதம் பேர் உயிரை விட்டுள்ளனர். 5% சதவிகிதத்தையாவது ஜி.டி,பி.யிலிருந்து எடுத்து செலவழிக்க வேண்டும்" என்கிறார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் மச்சூரி (தீக்கதிர் 7-5-2022) இந்த சிறந்த மோசமான மோடி அரசின் செவிகளில் ஏறுமா?

கொரோனா எதிர்கொண்டதில் 2-ஆம் அலை, 3ஆம் அலையின் போது கையாண்டதில் எந்த உலகத் தலைவர் படுமோசம்? என்கிற கருத்துக் கணிப்பை ஆஸ்திரேலியாவை தலைமையிட மாகக் கொண்டு 'தி கான்வர்சேஷன்' (The Conversation) என்கிற செய்தி இணையதளம் தனது (Twitter) பக்கத்தில் நடத்தியது. இதில் பதிலளிக்க 4 உலகத் தலைவர்கள் பெயர் தரப்பட்டன. அவை பிரதமர் மோடி, பிரேசில் அதிபர் போல் சொனாரோ, பெலர்ஸ் அதிபர் அலெக்ஸாண்டர் லுகாசென்கோ மற்றும் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆவர். மொத்தம் 75740 பேர் கருத்துத் தெரிவித்தனர். அதில் பிரேசில், பெலராஸ், மோடி முதலிடம் பிடித்துள் ளார். கொரோனாவை கையாண்டதில் நமது பாரதப் பிரதமர் மோடி என்றும் பலர் கூறியுள்ளனர் என்றால் இந்த அவப்பெயர் மூலம் இந்திய மக்களுக்கு எவ்வளவு பெரிய தலைகுனிவு! இந்த இழிவு இந்தியாவிற்கு உலக அளவில் ஏற்பட்டு விட்டதை ஜீரணிக்க முடிகிறதா? (பார்க்க - தினகரன் 23-5-2021)

குடியுரிமை போராட்டத்தின்போது மதத்தின் பெயரால் குடியுரிமை வழங்குவது அபாயகர மானது என உலகமே சுட்டிக்காட்டியும், போராளிகளால் எடுத்து வைக்கப்பட்ட, நாட்டுப் பற்று மிக்க அறிவு ஜீவிகளின் கேள்விகள் - கண்டனங்களுக்கு பதில் தராமல், அடக்கு முறை களை ஏவிவிட்டும், பொய்யான விளக்கங்கள் கூறியும் மக்களை முட்டாளாக்கியது மத்திய அரசு. இதனால் பல தரப்புகளிலிருந்தும் குடியுரிமை சட்டங்களை எதிர்த்து பல வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் குவிந்துவிட்டன. போதாதற்கு, இருப்பில் உள்ள வழக்குகளுடன் எங்களையும் ஒரு மனுதாரராக - வாதியாக இணைத்துக் கொள்ளுங்கள்" என்று ஐ.நா. மன்றமே தன் பிரதிநிதியை அனுப்பி மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. ஐ.நா. மன்றமே "போராளிகளின் பக்கமே நியாயம் உள்ளது. ஐ.நா.வின் அகதிகள் சட்டங்களை அகதிகளின் உரிமைகளை இந்திய அரசு அப்பட்டமாக மீறுகிறது" என்று அறிக்கை மூலம் வெட்ட வெளிச்சமாக்கியது. பாரத மாதாவுக்கு தலைகுனிவு அல்லாமல் வேறு எப்படி





கணிக்க முடியும்? ஐரோப்பா நாடாளு மன்றத்திலும் குடியுரிமை சட்டங்களுக்கு எதிரான தீர்மானம் நிலுவையில் உள்ளதே!

2014 முதல் எட்டாண்டு ஆட்சி என்று பிரதமர் எடுத்துக்கொண்ட காலக்கட்டத்தின் அளவுகோல்படி நடைபெற்ற சம்பவங்களிலிருந்து மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆட்சி காலங்களில் ஏற்பட்டுள்ள தலைகுனிவுகளையும் கணக்கில் சேர்த்தால் கட்டுரை மேலும் பெரிதாகிவிடும். மேற்கண்ட அனைத்து சம்பவங்களும் தலைகுனிவை உண்டாக்கியவை என்பதை பிரதமர் மறுக்க முடியுமா? எட்டாண்டு ஆட்சி தலைகுனிவே இல்லாத ஆட்சி என்று பிரதமர் மட்டும்தான் பீற்றிக்கொள்ள முடியும். மற்றவர்கள் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஏனெனில் அவரவர்களுக்கு மனசாட்சி இருக்கிறது. மனசாட்சியை அடகு வைத்த பிறகு பேசும் பிரதமரிடம் அதை எதிர்பார்க்க முடியுமா? பிரதமர் தலை குனிவு என்றால் அவர் அகராதியில் எவை என்பதை விளக்குவாரா?

மகாராஷ்டிரா மாநிலம், பாராமதியைச் சேர்ந்த சிறிய டீ கடை நடத்தி வரும் சாதாரண இந்திய பிரஜை, அனில்குமார் என்பவர், ரூ. 100/- பிரதமர் மோடிக்கு மணியார்டர் செய்துவிட்டு, 'அதில் உங்கள் தாடியை சேவிங் செய்யுங்கள்' என்று அறிவித்துவிட்டு, உடன் ஒரு கடிதமும் அனுப்பியுள்ளார். அதன் சுருக்கம் வருமாறு...

"பிரதமர் மோடி தாடி வளர்த்துக் கொண்டுள்ளார். அவர் எதையாவது அதிகரிக்க வேண்டுமென்று விரும்பினால், இந்த நாட்டு மக்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். எல்லா மக்களுக்கும் தடுப்பூசிகள் போடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போதுள்ள மருத்துவ கட்டமைப்பு வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊரடங்கு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் துன்பங்களிலிருந்து முழுமையாக விடுபட அவர் உறுதிப்படுத்த வேண்டும். அவர் இந்த நாட்டின் உயர் பொறுப்பில் இருப்பவர். அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. நான் ரூ. 100 /- அனுப்பி இருக்கிறேன். அவர் மிக உயர்ந்த தலைவர் அவரைக் காயப்படுத்த விரும்பவில்லை. ஏழை மக்களின் பிரச்னைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பிரமரின் கவனத்தை ஈர்க்க, இந்த வழியை தேர்வு செய்கிறேன்." (தினகரன்)

இந்த சாமான்ய டீ வியாபாரியின் வேண்டுகோள்தான் இந்நாட்டு ஏழு நூறு கோடி மக்களின் அபிலாஷைகளாகும். மேன்மேலும் தலைகுனிவை உண்டாக்கும் செயல்களில் ஈடுபடாமல் இந்திய மக்கள் தலை நிமிரும் ஆட்சியை தர வேண்டும் என்பதே இந்நாட்டு மக்களின் ஏகோபித்த வேண்டுகோளாகும்.

# டீஸ்டா கைது...

## சிறையில் நீதி...

**- பேரா. விஜய் பிரசாத்**



இந்திரா அத்தை, ராஷ்ட்ர சேவிகா சமிதி அமைப்பினை உருவாக்கியவர்களில் ஒருவர். பிரேம் மாமா, சங் பரிவார மாணவர் அமைப்பான, அகில பாரதிய வித்தியார்த்தி பரிஷத்-தின் ஆலோசகராக இருந்தார். காவி நோக்கங்களிடம் தங்களுக்கு இருந்த ஈடுபாடு காரணமாகவும், பாஜக சார்பு அமைப்புகளு டனான நெருங்கிய தொடர்பின் காரணமாகவும், அந்த வலைப்பின்னலின் மூத்த உறுப்பினர்கள், இவர்களு டைய வீட்டுக்கு விருந்துக்கு வந்து சென்றார்கள். தில்லி பல்கலைக் கழகத்தின் ஏ.பி.வி.பி அமைப்பின் மூத்த தலைவராக இருந்த அருண் ஜெட்லி, 1993 ஆம் ஆண்டு குளிர் காலத்தில் விருந்துக்கு வந்தார். பத்து ஆண்டுகளுக் குப் பின், பாஜக ஆட்சியின் சட்டத்துறை அமைச் சராக பதவியேற்றபோது 'மிதவாதி' என்று அவர் புகழப்பட்டார். தில்லி பல்கலைக் கழ கத்தில் அவருடைய செயல்பாடுகளை கண்ணுற்ற யாரும் அவரை அப்படி அழைக்கமாட்டார்கள்.

அந்த விருந்தின்போது, மாலை சாயும் தரு ணத்தில் என்னை வீட்டின் மேல் மாடத்திற்கு அருண் ஜெட்லி அழைத்தார். அவரோடு சேர்ந்து தில்லியின் ஜன்பத் சாலையை வேடிக்கை பார்த்தேன். சாலையின் இரைச்சலும், குரங்கு களின் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. அப்போது அவர் என்னுடைய எழுத் துக்களைப் பற்றியும், பிரேம் மாமா அவரிடம் என்னைப் பற்றி சொல்லியிருந்ததையும் குறிப்பிட்டார்.

"நீ ஒரு அறிவாளி பையன். எங்களை நீ விமர்சனம் செய்வது நல்லதே" என்றார். மேலும், "விமர்சனங்களை நாங்கள் கண்டுகொள்ள மாட்டோம்" என்று சொல்லிவிட்டு என்னைக் கடுமையுடன் நோக்கிய அவர் "எங்களை கேலி செய்ய நினைத்தால், கவனமாக இரு" என்று சொன்னார்.

**'கவனமாக இரு!'**

குஜராத் மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற முஸ்லிம் இனப் படுகொலைகளில் பாதிக்கப்பட்டோருக்காகவும், தப்பிப் பிழைத் தவர்களுக்காகவும் போராடிவருகின்ற டீஸ்டா செதல் வாத்தின் நடவடிக்கைகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ள செய்தியை நான் கேள்விப் பட்டபோது, அருண் ஜெட்லியின் அந்த வார்த்தை களையே நினைத்துக் கொண்டேன்:

'கவனமாக இரு'. டீஸ்டாவை எனக்கு 30 ஆண்டுகளாகத் தெரியும். அவரும் அவருடைய கணவர் ஜாவேத் ஆனந்தும் 'வகுப்புவாத எதிர்ப்பு' என்ற ஒரு முக்கியமான இதழி னைத் தொடங்கி னார்கள். அதில் அவ்வப்போது எழுதி வந்தேன். அந்த இதழுக்கு நண்பர்களை சந்தா சேர்த்தி ருக்கிறேன். இப்போது நம் தேசத்தின் ஆன்மாவில், வகுப்புவாத வெறுப்புணர்வு அழுத்தமாக பற்றிக் கொண்டிருக்கிறது.

குஜராத்தில் நடந்த படுகொலைகளுக்கு பின் டீஸ்டாவும் மற்றும் பலரும் சேர்ந்து 'அமை திக்கும், நீதிக்குமான குடிமக்கள்' என்ற ஒரு மேடையை உருவாக்கினார்கள். இந்தியாவில்

பாஜகவை ஆட்சியில் அமர்த்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட அந்த கொடூரச்சம்பவத்தில் காயமுற்றவர்களுக்கா கவும், பலியானவர்களின் குடும்பங்களுக்காகவும் வாதம் செய்திடும் போராட்டத்தை இந்த மேடை பல்வேறு நெருக் கடிகளுக்கும் இடையில் முன்னெடுத்தது. இந்த நடவடிக்கைகளால் தாக்கமுற்றவர்களுக்கு அது எரிச்சலைத் தந்தது. அன்றைக்கு வலிமையோடு இருந்தவர்கள், இப்போது மேலும் வலிமை யடைந்துவிட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட படுகொலைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுடைய வேதனை களையும், வரலாற்றின் மெல்லிய குரல்களையும் சிந்தனையில் இருந்தே அழித்துவிடுவது அவர் களுக்கு எளிதான காரியம் தான். “கவனமாக இரு” என்ற அந்த சொற்கள், சக்தி மிக்கவர்களுடைய விருப்பங்களுக்கு மாறாகச் செயல்படும் அனை வரையுமே நோக்கி வருகிறது.

2002 குஜராத் வன்முறைகளில் தாங்கள் வகித்த முன்னணிப் பாத்திரத்தை வரலாற்றின் பக்கங்களில் இருந்து அகற்றுவதற்கு காவி மதவெறி சக்திகள் விரும்புகிறார்கள் என்பது பத்தாண்டுகளுக்கு முன்பே தெளிவாகிவிட்டது. அப்போது குஜராத் மாநிலத்தின் முதலமைச் சராக இருந்த நரேந்திர மோடி, அந்த வன் முறைகளுக்காகத்தான் சர்வதேச அரங்கில் புறக் கணிப்பை எதிர்கொண்டார். அவர் மீதான தடை யின் காரணமாக, பத்தாண்டுகளுக்கும் மேலாக அவரால் அமெரிக்க விசாவைப் பெற முடிய வில்லை. அந்த படுகொலை குறித்தான விக்கி பீடியா பக்கத்தில் எழுதப்பட்ட 600 வார்த்தை களோடு, அந்த குற்றத்தின் கறை மோடியை விட்டு நீங்கிடவில்லை.

எனவே, ராணா அயூப் போன்ற பத்திரிகை யாளர்கள், டீஸ்டா போன்ற செயல்பாட்டா ளர்கள் மற்றும் சஞ்சீவ் பட், ஆர்.பி.ஸ்ரீகுமார் போன்ற முன்னாள் அரசு அதிகாரிகள் என நீதிக்காக குரல் கொடுக்கும் ஒவ்வொருவரையும் காவிப் படைகள் பின் தொடர்ந்தார்கள். வரலாற்றை ‘தூய்மைப்படுத்தும்’ செயலின் ஒரு பகுதியாக இதைச் செய்தார்கள். மேலே குறிப்பிட்டுள்ள நால்வரில் மூவர் இப்போது சிறையில் இருக்கிறார்கள்.

**அவதூறுகள்**

டீஸ்டா, பாதிக்கப்பட்டவர்களின் உடன் நின்று வாதம் செய்யத் தொடங்கிய உடனேயே, அவரை அவமதிக்கும் முயற்சிகளும் தொடங்கி விட்டன. 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்,











பெஸ்ட் பேக்கரி வழக்கு தொடர்பாக சில விசயங்களைச் சொல்லும்படி டீஸ்டா தன்னை வற்புறுத்துவதாக குற்றச்சாட்டை முன்வைத்தார் ஜாகீரா சேக். அந்தக் குற்றச்சாட்டு, பணம் கொடுத்து பெறப்பட்டது என்பதை 2005 ஆம் ஆண்டில் தெகல்கா இதழ் அம்பலப்படுத்தியது.

சேக் முன்வைத்த கருத்துக்களை பொய் என்று அறிந்த உச்ச நீதிமன்றம் அவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை வழங்கியது. ஆனால் சாட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்தார் என்ற அவதூறு இப்போது மீண்டும் டீஸ்டா மீது அவதூறு கிளப்பப்படுகிறது. 2009 ஆம் ஆண்டில், டைம்ஸ் ஆப் இந்தியா இதழ் ஒரு செய்தியை வெளியிட்டது.

உச்ச நீதிமன்றத்தில், சிறப்பு புலனாய்வுக் குழு சமர்ப்பித்த ஆவணங்களில் குஜராத் படுகொலை நிகழ்வுகளை டீஸ்டா ஊதிப் பெரிதாக்கியதற்கு ஆதாரங்கள் இருப்பதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. அறிக்கையைக் கசியவிட்ட செயலை உச்ச நீதிமன்றம் கண்டித்தது. எனினும் அதன் உள்ளடக்கம் பற்றி எதுவும் சொல்லவில்லை. பிறகு 2013 ஆம் ஆண்டில், பாதிக்கப்பட்டவர்களுக்காக பெறப்பட்ட நன்கொடை நிதியை டீஸ்டா தவறாக கையாண்டார் என குற்றச்சாட்டு எழுந்தது. அந்த புகாரும் வதந்திகள் மற்றும் பொய்களை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப்பட்டது.

**உள்ளூக்கம்**

அடுக்கடுக்கான வழக்குகள் புனையப்பட்டன. ஒவ்வொரு முறையும் டீஸ்டா தன்னுடைய நேர்மையை நிருபிப்பதற்காக தன்னுடைய ஆற்றல் முழுவதையுமே நீதிமன்றத்திலும், வழக்கறிஞர்களோடும் செலவிட நிர்ப்பந்திக்கப்பட்டார். இதுபோல தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் நபர்கள், இனி நீதியை நிலைநாட்ட வழியே இல்லை என்ற மனநிலைக்கு வந்து, போராட்டத்தினைக் கைவிட்டு சரணடைந்திடக் கூடும்

ஆனால் டீஸ்டா விடாப்பிடியாகப் போராடினார். இந்த காலகட்டத்தில் நானும், லெப்ட் வேர்டு பதிப்பகத்தின் சுதன்வா தேஷ்பாண்டேவும், மும்பையில் உள்ள வீட்டில் டீஸ்டாவை சந்திக்கச் சென்றோம். முக்கிய ஊடகங்களின் பொய்களுக்கும், அவமதிப்புகளுக்கும் பதிலடியாக அவருடைய நினைவுக் குறிப்பினை எழுதும்படி கேட்டுக்கொண்டோம். ஓராண்டு க்கு நாங்கள் அந்த புத்தகத்திற்கான பணிகளில் ஈடுபட்டோம். 2017ஆம் ஆண்டில் அது வெளியானது.

டீஸ்டா, இந்திய அரசமைப்பின் மீதும் சட்டத்தின் மீதும் தான் கொண்டுள்ள உறுதிப்பாட்டினை, தன்னுடைய கொள்ளுத் தாத்தாவிடம் இருந்தும், தாத்தாவிடம் இருந்தும் வரித்துக்கொண்டதாக அதில் குறிப்பிட்டுள்ளார். (டீஸ்டாவின் கொள்ளுத்தாத்தா 1919ஆம் ஆண்டில் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை களை விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட ஹண்டர் ஆணையத்தின் உறுப்பினராக இருந்துள்ளார்: தாத்தா எம்சி செதல்வாத் இந்தியாவின்

முதல் தலைமை வழக்கறிஞர்).

டீஸ்டாவை பொருத்தவரை, அவருக்கு நீதித் துறை யின் மீது முழுமையான நம்பிக்கை இருந்தது; குற்ற வாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பதும், அரசமைப்பின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதுமே அவருடைய வாழ்க்கையின் கோட் பாடாக இருந்தது. அந்த நூலுக்கு 'அரசமைப்பின் சிப்பாய்' என்ற தலைப்பிட்டதற்கான காரணம் அதுதான். தனது நூலின் இறுதியில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"நான் அதிலேயே உறுதியாக இருப்பதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. என்னுடைய பழைய குடும்ப நண்பரும், நெருங்கிய தோழருமான இந்திரா ஜெய்சிங் கூறும்போது, எல்லைகளைக் கடந்து பாயும் வங்கத்து நதியின் பெயரை என் பெற்றோர் எனக்கு வைத்தார்கள் என்பார்."

அந்த வார்த்தைகளில் அவரின் உள்ளுக்கம் தெளிவாகிறது. 1992-93 காலகட்டத்தில் பம்பாயில் நடந்த கலவ ரங்களுக்குள் அவருடைய நினைவுகள் பயணிக்கின்றன. அராஜகம் (culture of impunity) முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்கிறார் அவர்:

"அராஜகத்தை எதிர்த்து வீழ்த்துவதே என் முன் உள்ள சவால். அதுதான் எனக்கு தூண்டு தலாக இருக்கிறது".

**அராஜகம்**

ஆசிப் சுல்தானா (காஷ்மீர் நரேட்டர்), பகத் ஷா (காஷ்மீர் வாலா), கவுரவ் பன்சால் (பஞ்சாப் கேசரி), மனன் தர் (பசிபிக் பிரஸ்), மீனா கோட்வால் (மூக்நாயக்), சஜ்ஜத் கல் (காஷ்மீர் வாலா), சித்திக் காப்பான் (அழிமுகம்); இவை யெல்லாம், அரசாங்கத்திற்கு விருப்ப மில்லாத செய்திகளை எழுதத் துணிந்ததன் காரண மாக இப்போதும் சிறையில் அல்லது நீதிமன்றத்தில் போராடிவரும் பத்திரிக்கையாளர்களின் பெயர்கள். 'எல்லைகளற்ற நிருபர்கள்' என்ற அமைப்பு வெளியிடும் பத்திரிக்கை சுதந்திரத் திற்கான உலக தர வரிசையில் 180இல் இந்தியா 150 வது இடத்தில் இருப்பது வியப்புக்குரியதல்ல.

(2021 ஆம் ஆண்டு இந்தியா 142 வது இடத்தில் இருந்தது) காரவன் மற்றும் நியூஸ் கிளிக் ஆகிய செய்தி நிறு வனங்கள் மீது கடும் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. (அமலாக்கத்துறை இயக் குனரகம், வருமான வரித்துறை, காவல்துறை என) அரசு நிர்வாகத்தின் முழு அழுத்தமும், பத்திரி கைகளை மிரட்டும் விதத்தில் செலுத்தப்படுகிறது. அரசாங்கத்தை விமர்சிக்கும் சிலரது வீட்டு வாசலுக்கு குண்டர்கள் அனுப்பப் படுகிறார்கள். வேறு சிலரின் வீடுகள் புல்டோசர்களைக் கொண்டு இடிக்கப்படுகின்றன.

மராட்டியத்தில், 2018ஆம் ஆண்டு நடை பெற்ற கல வரத்திற்காக, கைது செய்யப்பட்ட 16 பேருக்கும் நடைபெற்ற கலவரத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை (கைது செய்யப்பட்டவர் களில் ஒருவரான ஆனந்த் டெல்டும்ப்டே, வன்முறைக்கு எதிராக எழுதியவரும் ஆவார்). இவ்வகையில் பீமா கோரேகான் வழக்கும் மிகவும் விநோதமானதாக இருக்கிறது. பெகாசஸ் உளவு நடவடிக்கை பற்றி இதுவரையில் கிடைத் திருக்கும் தகவல்களின் அடிப்படையில், எந்த வன்முறைச் செயல்களிலும் ஈடுபட்டிருக்காத செயல் பாட்டாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் அலைபேசிகள் உளவுபார்க்கப்பட்டுள்ளன.

(இவ்வாறு உளவு பார்க்கப்பட்டவர்கள் ஜோதி ஜகதாப், ரமேஷ் கைசோர் மற்றும் சாகர் கோர்கே ஆகிய பண்பாட்டு செயல்பாட்டாளர்கள், சுதிர் தவாலே, மகேஷ் ராதே உள்ளிட்ட சமூக நீதி செயல்பாட்டாளர்கள், அருண் பெராரியா, சுரேந்திர காட்லிங் மற்றும் சுதா பரத்வாஜ் ஆகிய வழக்கறிஞர்கள், கவுதம் நவ்லகா, ரோனா வில்சன், வரவரராவ், வெர்னன் கோன்சல்வெஸ் ஆகிய எழுத்தாளர்கள்; ஹானி பாபு, சோமா சென் மற்றும் டெல்டும்டே ஆகிய பேராசிரியர்கள் ஆவர்)

அராஜகத்தின் வரலாறு, இந்திய அரசமைப்புக் கும் (1950) முன்பு 1870 ஆம் ஆண்டில் உருவாக் கப்பட்ட, இந்திய தண்டனைச் சட்ட பிரிவு 124ஏ வரை நீள்கிறது. இளம் மாணவராக இருந்தபோது, இந்த பிரிவைப் பற்றி வாசித்த நினைவுகள் வருகின்றன. அப்போது, ஜேம்ஸ் ஸ்டுவர்ட் மில் என்பவர் முன்வைத்த "உணர்ச்சியின் தாராள வாதம்" என்ற கருத்தை தாக்கி எழுதிய ஜேம்ஸ் பிட்ஸ்ஜம்ஸ் ஸ்டீபன்ஸ் என்ற எதேச்ச திகார எழுத்தாளரின் வெறுக்கத்தக்க கருத்துக்களை நீண்ட நேரம் அசைபோட்டிருக்கிறேன். 1857 ஆம் ஆண்டு, முதல் சுதந்திரப் போருக்கு பின் எழுதப்



பட்ட மேற்சொன்ன சட்டப் பிரிவு அரசின் மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் வார்த்தைகளை பயன்படுத்துவதே சட்ட விரோதம் என்று ஆக்கியது.

மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி, இந்த சட்டப் பிரி வினை குறிப்பிட்டு, "குடிமக்களின் சுதந்தி ரத்தை நசுக்குவதற் காக வடிவமைக்கப்பட்டது" என்றார். அரசாங்கத்தின் கொள்கைகள் அல்லது அரசாங்கத்தை நடத்தும் அரசியல் சக்திகளின் நடத்தையைப் பற்றிய மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்கும் குடிமக்களுக்கு எதிராகவே இது பயன்படுத்தப்படுகிறது. இந்த மாதிரி கட்டுப் பாடற்ற போலீஸ் நடவடிக்கை அராஜகத்தை வளரச் செய்கிறது.

"எங்களை கேலி செய்யாதீர்கள். நீங்கள் அதைச் செய் தால் கவனமாக இருங்கள்" என்பது, கடந்த காலத்தில் விடுக்கப்பட்ட மிரட்டல் அல்ல; மூடு பனியைப் போல அது நிகழ்காலத் திலும் நம்மை பின் தொடர்கிறது. அதி காரத்தை நோக்கி கேள்வி எழுப்பியதற்காக இன்னும் அதிகமான குடிமக்கள், சட்டத்தை மீறியதாக அதிகார வர்க்கத்தின் குற்றச்சாட்டினை எதிர் கொள்கிறார்கள். கோரைப் பற்களைக் கொண்ட காவிப்படைகள், இந்திய வரலாற்றில் தாங்கள் ஏற்படுத்திய கறைகளை மறைப்பதற்கு முயற் சிக்கிறார்கள்.

தங்களுடைய காக்கி உடைகளையும், காவி துண்டுகளையும் துவைப்பதற்காக, விஷம் மிகுந்த சோப்புப் பொடிகளை பயன்படுத்துகிறார்கள். முக்கியமாக, 2002ஆம் ஆண்டின் கறை அவர்களை தொந்தரவு செய்கிறது. அதைக் கழுவு வதற்காக எந்த வழிமுறையையும் பயன்படுத்து வார்கள். அதற்காக அரசமைப்பின் உயிர்ப்பையே சிதைக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

**எதிர்காலத்தில், ஏதாவது ஒரு இடத்தில் இந்திய அரசமைப்பிற்காக கோயில்கள் கட்டப்படக் கூடும். அதனை தரிசனம் செய்வதற்காக மக்கள் வரிசையாக வருவார்கள். ஆயுதம் ஏந்தியபடி அதனை காக்கும் காவலர்களை, சிரம் தாழ்த்தியபடி அவர்கள் கடந்து செல்வார்கள். பூசாரிகள் அந்த புத்தகத்தில் சில பகுதிகளை வாசிக்கவும் கூடும். ஆனால், பரந்த வெகுமக் களுக்கு அதன் உள்ளடக் கமும், விளக்கங்களும் அறியாமலே போகவும் கூடும்.**

கட்டுரையாளர் : லெப்ட் வேர்டு பதிப்பகத்தின் ஆசிரியர், டிரை காண்டினெண்டல் சமூக ஆய்வுக் கழகத்தின் இயக்குனர், எழுத்தாளர்,

**– தமிழில் : இரா.சிந்தன்**

# இது நாடா? கடும்புலி வாழும் காடா?

ஹரித்வாரில் சாமியார்கள் கூட்டத்தில் உரையாற்றிய மோகன் பகவத், சுவாமி விவே கானந்தர் மற்றும் மகரிஷி அரவிந்தரின் "அகண்ட பாரதக் கனவு" இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் நனவாகும் என்று கூறியுள்ளார்.

"இந்தியா அகிம்சையைப் பற்றி பேசுவதாக கூறுகின்றனர். ஆனால் எங்களின் கையில் உள்ள 'தடி' ஹிந்துராட்டிரம் அமைப் பதைத் தடுப்பவர்களை கவனிக்கும்! இப்போது உலகம் எங்களின் சக்தியை புரிந்து கொள்கிறது" என ஆர்.எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத் பேசியுள்ளார்.

"நீங்கள் 20-25 ஆண்டுகள் பேசினீர்கள், ஆனால் நாங்கள் எங்கள் ஹிந்துமதக் கொள்கை களை பரப்புவதை வேகப்படுத் தினால் 10-15 ஆண்டு களுக்குள் சுவாமி விவேகானந்தரும் மகரிஷி அரவிந்தரும் கற்பனை செய்த இந்தியாவைப் பார்ப்போம்.

உறுதியுடன் ஹிந்துக்கள் ஒன்றுபட்டால் சமூகம் அதன் இலக்கை அடைய முடியும். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் அடைய முடியாது. என்னிடம் அதிகாரம் இல்லை; அது மக்களிடம் உள்ளது. கட்டுப்பாடு அவர்களிடம் உள்ளது. அவர்கள் தயாராக இருக்கும்போது, அனைவரின் நடத்தையும் மாறுகிறது. அச்ச மின்றி, சேர்ந்து நடப்போம் - அகிம்சை பற்றிப் பேசுவோம், ஆனால் கையில் 'தடி'யோடு நடப்போம் - அந்த 'தடி' அதிக கனமானதாக இருக்கும்.

எங்களுக்கு யாருடனும் வெறுப்போ, பகையோ இல்லை. உலகம் சக்தியை மட்டுமே புரிந்து கொள்கிறது. நமக்குப் பலம் இருக்க வேண்டும், அது அனைவருக்கும் தெரிய வேண்டும். ஹிந்து மதத்தின் நோக்கங்கள் தான் இந்தியாவின் நோக்கங்கள். சுவாமி விவேகானந்தர் ஹிந்து மதமே இந்தியாவின் உயிர் என் றார். ஹிந்து மத முன்னேற்றம் இல்லாமல் இந்தியாவின் முன்னேற்றம் சாத்தியமில்லை. சனாதன தர்மம் என்பது ஹிந்து ராட்டிரம் மட்டுமே! இந்தியா தனது முன்னேற்றப் பயணத் தைத் தொடங்கிவிட்டது, அதை இப்போது நிறுத்த முடியாது. அதை நிறுத்த விரும்புவோர் அகற்றப்படுவார்கள் அல்லது முடிக்கப்படுவார்கள், ஆனால் இந்தியா நிறுத்தாது

இப்போது ஒரு வாகனம் கிளம்பி உள்ளது, அதில் பிரேக் இல்லை. இடையில் யாரும் வரக்கூடாது. நீங்கள் விரும்பி னால், எங்களுடன் வந்து உட்காருங்கள் அல்லது ஸ்டேஷ னில் இருங்கள். எங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு விட்டது. நமது பன்முகத் தன்மையையும் பாரம்பரியங்களையும் பாதுகாப்பாக வைத்துள்ளோம். ஆனால் பன்முகத் தன்மை காரணமாக நாம் வேறுபட்ட வர்கள் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வேற்றுமைகளை மறந்து நாம் ஒன்றாக அணிவகுத்துச் சென்றால், நமது இலக்கை 20-25 ஆண்டுகளில் அடைவோம்; இதற்கு யார் குறுக்கே வந்தாலும் எங்கள் கைகளில் உள்ளது செயலில் இறங்கும்'' என்று அந்த நிகழ்ச்சியில் ஆர்.எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத் கூறினார்.

இப்படிப் பேசி இருப்பவர் ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் அல்லர்; இந்தியத் துணைக் கண்டத்தை ஆளும் ஒரு கட்சியின் - சித்தாந்தத்தை, கொள்கையை நிர்ணயிக்கும் தலைவர் ஆவார்.

இந்த நிலையில் உள்ள ஒருவர் இப்படிப் பேசினால் - எங்கள் 'கைத்தடி' அதன் வேலை யைச் செய்யும் என்று உறுமினால், மற்ற மதக்காரர்களின் வாழ்வு நிலை என்ன? நாட்டில் நடமாட முடியுமா?

அரசமைப்புச் சட்டத்தின் ஆணி வேர் என்னாவது?

"இந்தியா ஒரே நாடு ஒரே மொழி, ஒரே கலாச்சாரம்" என்று ஆளும் தரப்பில் பேசுபவர்களுக் கான கருத்து ஊற்று எங்கே இருந்து கிளம்புகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இது நாடா - கடும்புலி வாழும் காடா? என்று நினைக்கத் தோன்றுகிறது அல்லவா!

மக்கள் விழிப்படையட்டும் - பாசிசக் கும்பலை அடையாளம் காணட்டும்! இந்தியாவை மீட்கட்டும்.

நன்றி விடுதலை, 19-4-22



# இந்தியாவிற்கு அறிவுச் செழுமையளித்த ஆளுமைகள்!

– அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

இவையனைத்தும் இந்திய இஸ்லாமிய பேரரசின் மேன்மை பொருந்திய மன்னர்கள் குறித்தானது. இதன் அமைச்சர்களிலும் அமைச்சர் இமாதுத்தீன் அல்கீலானி போன்ற ஆளுமைகளை நம்மால் குறிப்பிட இயலும்.

இவர் மஹ்மூத் காவான் என்ற பெயரால் பிரபல்யமானவர் - (ஹி886) - மிகச்சிறந்த அமைச்சர், மார்க்க அறிஞர்,மார்க்கம் மற்றும் உலக விவகாரங்கள் இரண்டிற்குமான தலைமைத் துவத்தை ஒருங்கே பெற்றவர். இவரது பேரும் புகழும் எங்கும் பரவியது. மிகச்சிறந்த நிர்வாகி, இறைவணக்கத்தில் திளைப்பதில் ஈடுபாடு கொண்டவர், பரிபூரண இறையச்சம் உடையவர், பல்வகை அறிவுக் கலைகளை கற்றிருந்தவர்,



இலக்கியம் சொட்ட சொட்ட எழுதுவதில் வல்லவர். தனது பரவலான கவிதை களால் பிரபல்யமான, கவிஞரும் சிறந்த சூஃபியும் பேரறிஞருமான அப்துர் ரஹ்மான் ஜாமி (ரஹ்) அவர்கள் இவரை இவ்வாறு புகழ்கிறார்:

“அவர் உலகத்து மன்னர்களில் ஒருவர். ஆனால் ஏழ்மையை தனது அலங்காரமாக, அடையாள மாக ஆக்கிக் கொண்டவர்.”

இதேப் போல குஜராத்தின் அமைச்சர் அபுல் காசிம் அப்துல் அஜீஸ் அல்குஜராத்தி. இவர் ஆசிஃப் கான் என்ற பெயரால் பிரபல்யமானவர் (ஹி961)

மிகச் சிறந்த அறிஞர், ஃபிக்ஹ் கலை அறிஞர், ஹதீஸ் கலை அறிஞர், மிகச் சிறந்த ஆசிரியர். இவரது உயர்ந்த அந்தஸ்தை குறித்து அல்லாமா ஷிஹாபுத்தீன் இப்னு ஹஜர் அல் மக்கி ஒரு தனி நூலைத் தொகுத்து அதில் மிகச் சிறந்த அறிவு ஜீவி, நல்ல ஒழுக்கமுள்ளவர், இபாதத்திலேயே மூழ்கியிருப்பவர், மார்க்கத்தின் கடமைகளை உறுதியாக பின்பற்றுபவர், இறையச்சத்தை மிக நுணுக்கமாக கடைப்பிடிப்பவர், புத்தகங்களை வாசிப்பதில் பாடம் எடுப்பதிலும் தனது முழு நேரத்தையும் செலவிடுபவர், அறிவின் பாலும் அறிவுடைய மார்க்க அறிஞர்கள் பாலும் ஆர்வ மூட்டி கொண்டே இருப்பவர், அவர்களுக்கு மிகுந்த உபகாரம் செய்பவர், அறிவுடையோர் களும் புத்திக்கூர்மை உடையவர்களும் வியந்து போகும் அளவிற்கு எதனையும் தொடர்ந்து செய்யக்கூடியவர் என்றெல்லாம் குறிப்பிடுகிறார். ஹிஜாஸ் கவிஞர்கள் இவரைக் குறித்து பல்வேறு புகழ்மாலைகளைப் பாடியுள்ளனர். இவருடைய இறப்பிற்கு இந்த கவிஞர்கள் நுட்பமிகுந்த, மிகுந்த கவலையை வெளிபடுத்தும் வகையில் இரங்கற் பாவை தொகுத்தனர்.

அடுத்ததாக இந்த வரிசையில் மிகப் பெரும் தலைவர்,இலக்கியவாதி, சிறந்த கவிஞர், ஆற்றல்

வாய்ந்த வீரர், பேனாவையும் வாளையும் பயன் படுத்துவதில் கைத்தேர்ந்தவர். இந்திய முகலாய பேரரசின் தளபதிகளின் தளபதி அப்துர் ரஹீம் பைரம் கான் அத்தெஹ்லவி (ஹி1005).

இவர் எத்தகையவர் என்றால் இவரது உன்னத மான வாழ்வின் காரணமாக நேர்மையான சரித்திர ஆசிரியர்களை இவரைப் போற்றியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்ததிற்கு ஆளாக்கி விட்டார்.

“உயர்ந்த குணங்கள் உடையவர், தூய உள்ளம் கொண்டவர், புகழுக்குரிய செயல்களில் ஈடுபடு வதில் முழுமையான ஆர்வம் கொண்டவர், பிறருக்கு உபகாரம் செய்யும் முழுமையான குணமுடையவர், திட உறுதியுடையவர். பல வரலாற்று நூல்களை வாசிக்காமல், நல்லடியார் களை நேசிக்கும் குணம் இல்லாமல், தீயவர்களை வெறுக்கும் மனமில்லாமல், உயர்ந்த லட்சியங் களின் பால் சாயக் கூடிய தூய்மையான இதயம் இல்லாமல், இவரது உன்னத குணங்களை வர்ணிக்க இயலாது.

எந்த அளவிற்கு என்றால் “இந்த குணங்களில் இவர் பெற்ற பரிபூரணத்தை இவருக்கு முன்னரும் யாரும் பெறவில்லை இவருக்கு பின்னரும் யாரும் பெறவில்லை.”

அப்துர் ரஜ்ஜாக் அல் கவ்வாஃபி அவர்கள் மஆஸிருல் உலமா என்ற நூலில் குறிப்பிடுகிறார்.: பிறருக்கு உபகாரம் மற்றும் உதவி செய்வதில் இவரது காலத்தில் இவரே முதன்மையானவர் பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். அரபி, பாரசீக,துருக்கி, ஹிந்தி இன்னும் சில மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். இவ்வனைத்து மொழிகளிலுமே அதன் உயர்ந்த இலக்கிய நயத்தோடு பேசும் திறமையையும் பெற்றவர். நுட்பம் மிகுந்த சொல் நயத்தோடு கவிதைகளை படைப்பதில் வல்லவர்.

ஹிந்தி இலக்கிய வரலாற்றில் உயர்ந்த அந்தஸ்தையும் புகழையும் பெற்ற விரல் விட்டு எண்ணக்கூடிய கவிஞர்களில் அப்துர் ரஹீம் அவர்களும் ஒருவர். பிற கவிஞர்களை தனது கவிபுலமையால் மிகைக்கக் கூடிய அளவிற்கு பார்ஸி மொழியிலும் குறிப்பிடத்தக்க கவிஞராவார்.

மங்கோலியர்களது தாக்குதல்களுக்குப் பிறகு ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகமும் சிந்தனை ரீதியாகவும் நூல்களை தொகுக்கும் விஷயத்திலும் மிகப்பெரிய வீழ்ச்சியையும் பின்னடைவையும் சந்தித்தது. புதிய வகையான நவீன வகையான சிந்தனைகள் மிகவும் அரிதாகவே தென்பட்டது. 8ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு மிகத்தெளிவாகவே இது வெளிப்பட்டது.

இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் புதிய சிந்தனைகளுக்கான பெரும் வறட்சியும் இலக்கியத்தில் மிகப் பெரிய தொய்வும் ஏற்படத் துவங்கியது.இந்த தருணத்தில் அல்லாமா அப்துர் ரஹ்மான் இப்னு ஹல்தூன் போன்ற சில ஆளுமைகளே புதிய நவீனமான படைப்புகளின் மூலம் இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

ஆனால் இந்திய நாடோ நீண்ட நெடுங் காலமாக மலட்டுச் சிந்தனை மற்றும் இலக்கிய தொய்வு ஏற்படுவதை விட்டும் தனித்திருந்தது. ஏனென்றால் தாத்தாரியர்கள் தாக்குதல்கள் தொடுத்த நாடுகளிலிருந்து இந்தியா தூரமாகவே இருந்தது.

மேலும் அதன் தாக்கத்தை குறைவாகவே உள்வாங்கிய கிழக்கில் உள்ள இஸ்லாமிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இதனால் நிறைய மார்க்க அறிஞர்கள் பாரம் பரிய மிக்க குடும்பங்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்து கல்விச் சார்ந்தப் பணிகள் இங்கே தொய் வில்லாமல் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு வலுவூட்டினார்கள்.எனவே இங்கே அறிவுச் சார்ந்த படைப்புகளை தொகுப்பது நவீன சிந்தனைகளை படைப்பது என்ற செயல்பாடுகள் இங்கே தொடர்ந்துக் கொண்டே இருந்தது. மேலும் அந்த காலத்தில் பரவலாக காணப்பட்ட மொழி நடை இவர்களது படைப்புகளில் அறவே தவிர்க்கப்பட்டிருந்தது.உதாரணமாக அல்லாமா ஷரஃபுத் தீன் அஹ்மத் இப்னு யஹ்யா அல் முனீரி (ஹி772) அவர்களால் எழுதப்பட்ட அர் ரஸாயிலுல் பதீஆ ஃபித் தர்பிய்யதி வ ஹகாஇகுஷ் ஷரீஆ என்ற நூல்.அஷ்ஷைகு அஹ்மத் இப்னு அப்துர் ரஹீம் வலியுல்லாஹ் தெஹ்லவி (ஹி1176) அவர்களால் எழுதப்பட்ட ஹுஜ்ஜத்துல்லாஹில் பாலிகா மற்றும் இஸாலதுல் கஃபா என்ற நூல். அஷ்ஷைகு ரஃபிஉத் தீன் அத்தெஹ்லவி (ஹி1233) அவர்களால் எழுதப்பட்ட அஸ்ராருல்

முஹப்பா மற்றும் தக்மீலுல் அத்ஹான் என்ற நூல்.அஷ்ஷைகு இஸ்மாயீல் இப்னு அப்துல் கனீ அத்தெஹ்லவி (ஹி1246) அவர்களால் எழுதப் பட்ட அபகாத் மற்றும் மன்ஸபுல் இமாமா என்ற நூல். இவ்வனைத்து நூல்களையும் வாசிக்க கூடிய வாசிப்பாளர் அற்புதமான சிந்தனைகள், புதுவகையானதகவல்கள்,நுட்பமானவிஷயங்கள் என அனைத்தையும் இந்த நூலில் அவர் பெற்றுக் கொள்வார். அந்தக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களிலிருந்தும் இவை முற்றிலும் மாறுபட்டி ருந்தது.

இஸ்லாமிய ஆட்சியின் கடைசி நூற்றாண்டு களில் வரலாற்றில் ஏற்பட்ட சில இயல்பான நிகழ்வுகளின் காரணமாக இந்திய நாடு இஸ்லாமிய மார்க்கத்திற்கான இஸ்லாமிய சீர்திருத்தத்திற்கான தலைமைக் கேந்திரமாக விளங்கியது. இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சீர்திருத்தம் இந்திய எல்லைகளை யும் தாண்டி பல நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் இறை அழைப்பாளர்களி லேயே மிகச் சிறந்த இறை அழைப்பாளர்களும் சீர்திருத்தவாதிகளிலேயே மிகச் சிறந்த சீர்திருத்த வாதிகளும் இந்திய திரு நாட்டில் கிடைக்கப் பெற்றனர்.


இவர்களது அழைப்பு பணி தொடக்க கால இஸ்லாமிய அழைப்பு பணிக்கு நிகரான ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும், மேலும் இவர்களது அழைப்பு பணி பரவலானதாகவும் காணப்பட்டது. இன்னும் இவர்கள் அறிவு ஞானத்தில் கைத் தேர்ந்தவர்களாகவும் ஆற்றல் மிகுந்தவர்களாகவும் இருந்தனர்.

இவர்களில் முதலாக அஷ்ஷைகு அஹ்மத் இப்னு அப்துல் அஹத் அஸ்ஸிர்ஹிந்தி (ஹி1034) இந்த அறிஞர் பெருந்தகைக்கே இந்திய நாடு முஜத்தித் அல்ஃபஸானீ என்ற சிறப்பு பெயரை வழங்கியது. இந்திய இஸ்லாமிய சமூகத்தில் இஸ்லாத்தைக் கொண்டு மிகப் பெரிய புணர் நிர்மானம் செய்தது இவர்களே.இதன் மூலம் ஷரீஅத்திற்கு மிகப்பெரிய தொண்டை ஆற்றி னார்கள்.வரம்பு மீறுவோர்களின், அசத்தியவாதி களின் தவறான சித்தரிப்புகளிலிருந்தும், அறிவீனர்களின் தவறான விளக்கங்களி லிருந்தும், சூஃபிகள் என்ற பெயரில் சிலர் பரப்பிக் கொண்டிருந்த நாத்திக கோட்பாடிலிருந்தும் இஸ்லாமிய ஷரீஅத்தை பாதுகாத்த பெருமை இவர்களையே சாரும்.

மேலும் மார்க்க பற்றின்மையிலிருந்தும், ஒரு மதத்தை மற்றொரு மதத்திற்குள் நுழைப்பதி லிருந்தும், இந்திய பிராமண சிலைவணக்கத்திற்கு நேரடியாக அடிபணிந்து நடக்கும் ஒரு பொறுப்பற்ற போக்கிலிருந்தும் இருந்து வந்த பலம்வாய்ந்த இந்திய இஸ்லாமிய முகலாய பேரரசை இஸ்லாத்தை பின்பற்றி ஒழுகும் சிறந்த அரசாக மாற்றினார்கள்.

இவரது உயர்ந்த தரீகா அல்லாமா காலித் ஷாரஸோரி குர்தி (ரஹ்) (ஹி1232) அவர்களின் மூலம் ரோம், அரபு நாடுகள் ஹிஜாஸ் குர்திஸ் தான் சிரியா துருக்கி என அனைத்து நாடுகளில் பரவியது.

**- தமிழில் : மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**






# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் திருப்பூரில் ஈத்மிலன் சந்திப்பு நிகழ்ச்சி

ஆடு, மாடு, கோழியெல்லாம் சுதந்திரமா பாதையில் நடக்குது. மனிதனாகிய பள்ளன், பறையன், சக்கிலியன் 2022லும் நடக்கவமுடியல. அதை மாற்றிக் காட்டிக் கொண்டிருப்பதுவே இஸ்லாம்.

யார் இஸ்லாத்தைப் பற்றிப் பிடிக்கிறாரோ அவரிடம் தீண்டாமை அப்பொழுதே அகன்று விடுகிறது.

ஜாதிக் கட்சிகள் தலித் அமைப்புகள் தங்களுக்கான முன்னேற்றம் 1 எம்.எல்.ஏ., அல்லது எம்.பி.யை பெற்றுக் கொள்வதால் சமூக மாற்றம் அடையவே முடியாது. அதற்காகத்தான் இன்றைய ஜாதி தலித் அமைப்புகள் வேலை செய்கிறது.

உண்மையான ஜாதி, தலித் சமூக விடுதலை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதால் மட்டுமே ஏற்படும். சமூக விடுதலையும், சுதந்திரமும் கிடைக்கும். அதற்கான நிதர்சன ஆதாரம்தான் மீனாட்சிபுரம் ரஹமத் நகராக மாறியது. இன்று ரஹமத் நகரில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களிடம் அந்த மக்களுக்கு சமூக அந்தஸ்து கிடைத்து விட்டது.

அங்கே இன்னும் இஸ்லாத்தை ஏற்காமல் யாரெல்லாம் இன்னும் பள்ளன், பறையன்களாக, சக்கிலியனாக இருக்கிறார்களோ அவர்களிடம் இன்னும் தீண்டாமையும் அடக்குமுறையும் இன்னும் தொடர்வதைக்கான முடிகிறது.


ஆக தலித் சமூக ஜாதியத்திலிருந்தும் தீண்டாமையிருந்தும் வர்ணாசிரமக் கோட்பாட்டிலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் முற்றிலும் விடுதலை பெற வேண்டுமானால் அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதே ஓரே நிரந்தரத் தீர்வாகும்.

இதைத்தான் பேராசன் பெரியாரும் சொல்லியிருக்கிறார். ஒருவன் 5 மணிக்கு இஸ்லாத்தைத் தழுவினால் 5.05க்கு அவனிடம் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று மிகச் சிறப்பாக.

5.6.2022 அன்று திருப்பூரில் நடந்த ஈத்மிலன் நிகழ்ச்சியில் தமிழ்ப் புலிகள் அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் இளவேனில் எனும் இப்றாஹிம் பேசினார்.

இந்நிகழ்ச்சியை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் கிளையின் பொறுப்பாளர் காதர் முஹையத்தீன் ஏற்பாடு செய்து மிகச் சிறப்பாக செயல்படுத்தியது சாலச் சிறந்தது.




**முன்னாள் தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்**

**நூல் வழங்குதல்**

# பெர்ணான்டஸ்க்கு நூல்

குமரி மாவட்டம், குளச்சலில் இயங்கி வரும் "இஸ்லாமிய இளைஞர் முன்னேற்றச் சங்கம் 29-5-2022இல் பொன்விழா கண்டது. அதாவது ஐம்பதாம் ஆண்டு நிறைவு நாள், 51ஆம் ஆண்டு புகுவிழாவும் நடைபெற்றது. அவ்விழாவின் போது, "வைகறை வெளிச்சம்" ஆசிரியரும், தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் தாளாளர், தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்களுக்கும் வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர், தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்-இன் பொருளாளர் பேராசிரியர் கே.எம். இல்யாஸ் ரியாஜி அவர்களுக்கும் "தீன்வழிச் செம்மல்" விருது வழங்கப்பட்டது. அந்த நிகழ்வை குறுஞ்செய்தியாக "வைகறை வெளிச்சம்" ஜூன்-2022 இதழில் வெளியிட்டிருந்தோம்.

விழாவில் சிறப்பு விருந்தினராகவும், சிறப்புச் சொற்பொழிவாளராகவும், திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான மாணமிகு பெர்ணான்டஸ் அவர்கள் அழைக்கப்பட்டிருந் தார். மாணமிகு பெர்ணான்டஸ் அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப் பெரும் சொற்பொழிவாளர்களில் ஒருவர். குளச்சல் தொகுதி தி.மு.க. சட்ட மன்ற உறுப்பிராகவுமிருந்து சிறப்பாக பணியாற்றியவர்.

அவரோடு வைகறை வெளிச்சம் ஆசிரியருக்கு நெருங்கிய உறவுகள் இருந்தன அன்று. விழா மேடையில் அதனை நினைவுகூர்ந்து கொண்டார்கள். இருவரும் "மிசா" கால நெருக்கடியின் போது உள்ள நினைவுகள் இறவாதவை.

அந்த நினைவுகளின் நடுவே வேர்கள் வெளியீட்டகத்தின் இன்றைய வெளியீடான "பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்" என்ற நூலை வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் வழங்கினார்கள்.

அவர் நூலின் தலைப்பையே சிறிது நேரம் மன மகிழ்வோடு பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் நூலின் பக்கங்களை அங்கேயே ஒரு பார்வையிட்டார். மீண்டும் தொடர்பு கொள்வோம்

எனக் கூறி விடை பெற்றார்.


உடல் ஆரோக்கியம் நிலை அவ்வளவு நன்றாக இல்லை. சற்றும் எதிர்பாராத விதமாக அடுத்த நாள் காலை சரியாகப் 10.30 மணிக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

நூலின் ஒரு பகுதியைப் படித்துவிட்டதாகவும், அப்படியே உடடெல்லாம் புல்லரித்துப் போய் விட்டது என்றும் கூறினார். விரைவில் சென்னை சென்று அங்கே குடியிருக்கலாம் எனத் திட்ட மிட்டுள்ளதாகவும், சென்னையில் உங்கள் அலுவலகத்தில் உங்களைச் சந்திப்பேன் என்றும் கூறினார். இன்ஷா அல்லாஹ் சந்திப்பு விரைவில்

**– குமரியிலிருந்து எமது நிருபர்.**



ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டெடுத்து வருபவர் அருள்தந்தை பாலபிரஜாதிபதி அவர்கள். அவர்களுக்கு வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் "பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்" என்ற நூலை வழங்கியபோது



சகோதரர் நாஞ்சில் சம்பத் அவர்களை சந்தித்தபோது “பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்” 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?, இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு! ஆகிய நூல்களை வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் வழங்கியபோது







25.06.2022 கோவையில் சுன்னத் ஜமாத் கொள்கை கூட்டமைப்பு நடத்திய பொதுக்கூட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பழ. கருப்பையா அவர்களுக்கு 'பிராமணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்' நூலை தாருல்இஸ்லாம் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி வழங்கினார். அருகில் மூத்த மார்க்க அறிஞர் சுன்னத் ஜமாத் கொள்கை கூட்டமைப்பு தலைவர் முஹம்மது அலி ஹழ்ரத், பொதுச் செயலாளர் இனாயத்துல்லா ஹாஜியார்.



*சீர்காழி சுற்றுவட்டாறப் பகுதியில் 25,06,2022 அன்று பச்சைமாதானம் குளத்திங்கநல்லூர் மற்றும் கோவிலாந்தூர் கிராமங்களில் இரு சக்கர வாகணத்தில் சென்று தாவா பணி நடைபெற்றது அப்பொழுது திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்திற்க்கு வந்த மார்க்க அறிஞர்களின் நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டது*

# உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்














கடந்த 19.06.2022 அன்று கடலூர் மாவட்டம், வல்லம்படுக்கை மேற்கு கிராமங்கள், வடக்குமாங்குடி, தெற்குமாங்குடி, கருப்பூர் ஆகிய கிராமங்களில் இஸ்லாமிய அழைப்புப் பணி செய்யப்பட்டது. இதில் அல்குர்ஆன் தமிழாக்கம், இஸ்லாத்தை ஏற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

– அன்பகம் தாஃவா குழு.
தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்.
தொடர்புக்கு: 8148129887.



# சிறுநீரகத்தைப் பாதுகாப்பது எப்படி?

மருத்துவர் கு.சிவராமன்



சிறுநீரக நோய்களுக்கான காரணங்கள் என்னென்ன? அந்த நோய்களை நம்மால் எந்த அளவுக்கு உணவுக் கட்டுப்பாடுகள், வாழ்க்கை முறை மாற்றம் மற்றும் கை வைத்திய முறைகளில் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும்? அந்த நோய்கள் வராமல் நம்மை எப்படி பாதுகாப்பது? பாரம்பரியமாக இந்த நோய்களை வரக்கூடிய காரணிகள் நமக்கு இருந்தால் அவ்வறைத் தவிர்ப்பது எப்படி?

எப்போதுமே நமக்கு ஒரு நோய் இருக்கிறது என்று தெரிந்தவுடன் அந்த நோய்க்கான வைத்தியரிடமோ, மருத்துவரிடமோ செல்லும்போது அந்த மருத்துவர் எழுதிக் கொடுக்கக்கூடிய மருந்துச் சீட்டை வைத்து அதிலுள்ள மருந்துகளைச் சாப்பிட்டால் சரியாகிவிடும் என்று நினைப்பது தவறு. மருந்துகளின் பணியானது, 50-60 சதவிகிதம் வரை மட்டுமே இருக்கும். நம் உணவு, வாழ்க்கை முறை போன்ற அனைத்தும் சேர்ந்துதான் ஒரு நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியும்.

மற்ற எல்லா நோய்களைக் காட்டிலும் சிறுநீரக நோய்களில் உணவு குறித்த அக்கறையும் தேர்வும் மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால், சிறுநீரகச் செயலிழப்பு தொடங்கிவிட்டதற்கான அறிகுறிகள் நமக்குத் தென்பட ஆரம்பித்துவிட்டால் இந்தச் செயலிழப்பை முழுமையாக நிறுத்தவோ, முழுமையாக இந்த நோயைக் குணப்படுத்தி மீண்டும் சரியான நிலைக்கு கொண்டுவருவதற்கான மருந்துகளோ இன்றுவரை இல்லை. அது நவீன மருத்துவம், சித்த மருத்தவம் என்று எந்த மருத்துவத்திலும் இல்லை.

எனவே சிறுநீரக செயலிழப்பு பிரச்சினையைக் கட்டுப்பாட்டில்தான் வைத்திருக்க முடியும். அதனால் நல்ல மருந்துகளோடு சேர்த்து, அதற்கேற்ற வாழ்க்கை முறையும் குறிப்பிட்ட உணவு முறையும் அவசியமாகிறது. இல்லையெனில் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் செயலிழப்பு மிக விரைவிலேயே முழுமையான சிறுநீரகச் செயலிழப்பாக மாறக்கூடும். டயாலிசிஸ் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சிறுநீரக நோய்கள் ஏன் வருகின்றன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக உலகெங்கும் டாயபடீஸ் என்ற நீரிழிவு பெருகிக் கொண்டு வருகிறது.

குறிப்பாக இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் இந்தக் குறைபாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதைச் சரியாகக் கட்டுப்படுத்தாவிட்டாலோ, சரியான உணவுக் கட்டுப்பாடு இல்லாதிருந்தாலோ நாள்பட்ட நிலையில் அது பெரும்பாலும்சிறுநீரகச்செயலிழப்பில்தான் கொண்டு வந்துவிடும். 20-25 ஆண்டுகள் நீரிழிவோடு இருப்பவர், சரியான சிகிச்சை,

சரியான உணவுக் கட்டுப்பாடு இல்லாதிருந்தால் அவருக்கு சிறிது சிறிதாகச் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படுவதற்கான அபாயம் அதிகம்.

இதைத் தவிர வலிக்காக அடிக்கடி மாத்திரைகள் எடுத்துக்கொள்வது, மருத்துவரின் பரிந்துரையின்றி நேரடியாகக் காய்ச்சல் போன்ற வற்றிற்கு ஆன்டிபயாடிக் மருந்துகளை எடுத்துக் கொள்வது போன்றவையும் சிறுநீரகச் செயலி ழப்பை உண்டாக்கும்.

குடும்பத்தில் சிறுநீரகச் செயலிழப்பு இருந்தால் வாரிசுகளும் கவனமாக இருக்க வேண் டும். நம்முடைய ரத்தத்தில் உள்ள உப்பின் அளவைத் தெரிந்துகொள்வதன் மூலமாகச் சிறு நீரகம் சரியாக இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளலாம். ஒருவேளை ரத்த உப்புச்சத்து என்கிற பினட் யூரியா மற்றும் சீரம் கிரியாட்டி னின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

யூரிய அளவு 18-35க்குள் இருக்க வேண்டும். கிரியாட்டினின் அளவு 0.6-1க்குள் இருக்க வேண் டும். அதை விடவும் கூடினால் ரத்தத்தில் உப்புக்கள் சேர ஆரம்பித்துவிட்டன என்று அர்த்தம். நமது உடலில் சிறுநீரகம் அற்புதமான ஓர் உறுப்பு. அதில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் அளவுக்கு நெஃப்ரான்கள் எனும் இயற்கையான வடிகட்டிகள் உள்ளன. அந்த வடிகட்டிகள் உப்புக்கள்ளை பிரித்தெடுப்பதோ, ரத்த அணுக்கள் அதைத் தாண்டிப் போகாமல் காக்கும் வேலையையும் செய்கின்றன.

இந்த வடிகட்டிகளில் ஏற்படக்கூடிய கசிவுகள் நோய்வாய்ப்பட்டு வேலை செய்ய முடியாமல் போகிறபோதுதான் இந்தச் செயலிழப்பு ஏற்படுகிறது. இது வராமல் ஆரம் பத்திலேயே தடுத்துக்கொள்வதுதான் புத்திசாலித் தனம். நீரிழிவு இருந்தால் நல்ல உணவுக் கட்டுப் பாட்டோடு, சரியான சிகிச்சை முறையை மேற்கொண்டு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தினமும் 3-4 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். பிறகு, சிறுநீரை நன்கு எளிதாக வெளி யேற்ற உதவும். சில காய்கறிகள் இருக்கின்றன. வெள்ளரிக்காய், முள்ளங்கி, வாழைத்தண்டு, வாழைப்பூ, பசலைக்கீரை, பார்லி போன்ற உணவு களை அன்றாடம் எடுத்துக்கொள்ள வேண்டும். இவை உடலில் சேரும் நச்சுக்கள், மருந்துக் கழிவுகள், செரிமானத்திலேயே சேரக்கூடிய உப்புக்கள் போன்றவற்றை வெளியேற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

**ஒருவேளை நோய்வாய்ப்பட்டுவிட்டால் - அது ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்டால் - மூன்று விஷயங்களில் கவனம் அவசியம்.**

1. புரதங்கள் - விலங்குகளின் புரதங்களைவி வட தாவரப் புரதம் நல்லது. நாம் எடுக்கக்கூடிய புரதங்கள் சிறுநீர் வழியாக வெளியேறக்கூடிய புரத அளவை மருத்துவர்கள் அறிவுறுத்துவர். அந்த அளவைச் சரியாக கடைப்பிடிக்க வேண்டும்.

2. சோடியம், பொட்டாசியம் உப்புக்கள் - ஒருவர் சிறுநீரக நோயாளி எனத் தெரிந்து கொண்ட பிறகு, உணவுகளில் எந்த அளவுக்கு உப்புக்கள் இருக்கின்ற என்கிற அடிப்படையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.



3. தண்ணீர் - நோயில்லாமல் இருக்கும்போது 1.5-4.5 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். சிறு நீரகச் செயலிழப்பு ஏற்பட்டுவிட்டால் எவ்வளவு நீர் வெளியேறுகிறதோ அதைப் பொறுத்தே தண்ணீர் குடிக்க வேண்டும். உணவுப் பொருட் களில் எவ்வளவு நீர்ச்சத்து உள்ளது என்பதை பொறுத்து ஒவ்வொருவருக்கும் மருத்துவர் பரிந் துரைக்கும் அளவே தண்ணீரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சரியான முறையில் செயல்படுவோ மேயானால் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படாமல் காத்துக் கொள்ள முடியும்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று

# ஈடு இணையற்ற தலைவர்

உலகில் எத்தனையோ தலைவர்கள் தோன்றி மறைந்துள்ளார்கள். தற்போதும் பல தலைவர்கள் இருந்து வருகிறார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட மக்களின் நலனுக்காக மட்டுமே தலைவர்களாக இருந்துள்ளார்கள். அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயங்களுக்காக மட்டுமே போராடுபவர்களாக இருந்துள்ளார்கள். ஆனால், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இன, நிற, மொழி, வேறுபாடுகள் இன்றி உலகில் உள்ள ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காகவே உழைத்தவர்கள்.

ஒரு குறிப்பிட்ட விஷயங்களுக்காக என்றில்லாமல் சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை ஆண், பெண் என அனைத்துத் தரப்பினரின் உரிமைக்களுக்காக பாடுபட்டவர். மனித இனத்திற்கு மட்டுமல்லாமல் மரம், செடிகள் முதல் மிருகங்கள், பறவைகள் என அனைத்து உயிரினங்களின் உரிமைகளையும் நிலை நாட்டியவர்.

இதனால்தான் இறைவன் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றி கூறும்போது

"(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருளாகவேயன்றி அனுப்பவில்லை. *(21-107)*

**பெண்கள் மீது கருணை**

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

"எந்த மனிதனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து அவன் அதை அறியாமைக்கால வழக்கப்படி உயிரோடு புதைக்கவில்லையோ அதனை இழிவாகக் கருதவில்லையோ, அதைக் காட்டிலும் ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கவில்லையோ அத்தகையவனை அல்லாஹ் சுவனத்தில் புகுத்துவான்."

மேலும் நபியவர்கள் கூறுகிறார்கள் :

"உங்களில் மிகச் சிறந்த குணமுடையவரே இறை நம்பிக்கையால் சிறந்த முஸ்லிமாவார். உங்களில் சிறந்தவர் உங்களில் மனைவியரிடம் சிறந்தவரே.

"யார் இரண்டு பெண் குழந்தைகளை அவர்கள் பருவமடையும் வரை வளர்த்துப் பராமரிக்கிறாரோ அவர் மறுமை நாளில் என்னுடன் இந்த இரண்டு விரல்களைப் போல் இருப்பார் என்று கூறிவிட்டு அவற்றைச் சேர்த்துக் காட்டினார்கள்."

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

நான் நீண்ட நேரம் தொழுவிக்கும் எண்ணத்துடன் தொழுகையில் நிற்பேன். அப்போது (பின்னால் தொழுது கொண்டிருக்கும் பெண்களின்) குழந்தை அழுவதைக் கேட்பேன். அந்த குழந்தையின் தாய்க்கு சிரமமளிக்கக் கூடாது என்பதற்காகவே நான் எனது தொழுகையை சுருக்கமாக முடித்து விடுவேன்.

"கணவனை இழந்தப் பெண்ணுக்காகவும் ஏழைக்காகவும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிபவரைப் போன்றவர் ஆவார். அல்லது இரவில் நின்று வணங்கிப் பகலில் நோன்பு நோற்பவரைப் போன்றவர் ஆவார்."

**அநாதைகள், ஏழைகள் மீது கருணை**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"எந்த வீட்டில் ஒரு அநாதை இருந்து அவனுடன் நல்லவிதமாக நடந்து கொள்ளப்படுகின்றதோ அந்த வீடே முஸ்லிம்களின் வீடுகளிலேயே மிகச் சிறந்த வீடாகும். எந்த வீட்டில் ஓர் அநாதை இருந்து அவனுடன் மோசமாக நடந்து கொள்ளப்படுகின்றதோ